Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily


மழைக்கான சாத்தியம் உண்டு.

30°c 28°c

பக்கம் 36 | சுடர்: 28 | கதிர்: 268 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 5, புதன் 21.08.2013

இலங்கைக்கு அனுப்பப்பட்டால் ஈழ அகதிகள் கொல்லப்படுவர் 06

அடக்குமுறை வேண்டாம் எகிப்து அரசை வலியுறுத்துகிறது ஐ.நா. 07

20/20 தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு 23

# தேர்தல் வன்முறை குறித்து ஆணையாளர் விசாரணை

## வேட்பாளர்களுடனும், கட்சித் தலைவர்களுடனும் இன்று யாழில் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ள தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் குறித்து இன்று யாழ். வரும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய விசாரணை நடத்துவார் என்று தெரிய வருகிறது.
நெடுந்தீவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம், மானிப்பாயில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கிருஷ்ண குமார் வாள் வெட்டுக்கு இலக்கான சம்பவம், படையினரால் நடத்தப்பட்ட நிகழ்வு ஒன்றில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் றெமிடியஸ் கலந்துகொண்டமையை அடுத்து அது குறித்து விசாரிக்கச் சென்ற தேர்தல் திணைக்கள அதிகாரிகள் படையினரால் மிரட்டப்பட்ட சம்பவம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் தம்பிராசா தாக்கப்பட்ட சம்பவம் ஆகியவை குறித்து தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய விசாரணை நடத்துவார் என்று கூறப்படுகிறது.
வடமாகாண சபைத் தேர்தல் நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்கும், தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடுவதற்காகவும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய யாழ். மாவட்டத்துக்கு இன்று புதன்கிழமை வருகிறார்.
வடக்கில் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் மேற்பார்வை செய்வதும், தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள தேர்தல் அதிகாரிகள், அரசியல் கட்சிகளைச் சந்தித்து பேசுவதும் ஆணையாளரின் வருகையின் முக்கிய நோக்கம் என்று கூறப்படுகிறது.
யாழ். பொது நூலகத்தில் தேர்தல்கள் ஆணையாளரால் இன்று புதன்கிழமை மூன்று



கலந்துரையாடல்கள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.
காலை 9 மணிக்கு திணைக்களத் தலைவர்களையும் முற்பகல் 11 மணிக்கு வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களையும், 2.30 மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பிற்பகல் தேர்தல் அலுவலர்களையும் ஆணையாளர் சந்திக்கவுள்ளார். (த-5)

## வேட்பாளருக்கு வாள் வெட்டு

யாழ்ப்பாணம், ஓக. 21
சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை இரவு இனந்தெரியாதோரின் வாள் வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார்.
மானிப்பாயைச் சேர்ந்த சேனாதிராஜா கிருஷ்ணகுமார் என்ற வேட்பாளரே வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.
மானிப்பாய் சந்தியில் அமைந்துள்ள ஜனநாயகக் கட்சியின் பிரசார அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை சேனாதிராஜா கிருஷ்ணகுமார் இருந்துள்ளார். இரவு 8.05 மணியளவில் கட்சி அலுவலகத்துக்கு இனந்தெரியாத இருவர் வந்துள்ளனர். ஒருவர் வாசலில் நிற்க மற்றையவர் உள்ளே புகுந்து கிருஷ்ண குமாரை வெட்ட முயன்றுள்ளார். இதன் போது அவரது காலில் வெட்டு விழுந்தது.
காயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-5)


## தேர்தல் விதிகளை மீறிய 12 பேர் இதுவரை கைது

கொழும்பு, ஓக. 21
தேர்தல் விதிகளை மீறியமை தொடர்பில் இதுவரை 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.
சட்டவிரோத தேர்தல் பிரசாரம் மற்றும் மோதலில் ஈடுபட்டமை தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.
மேலும் மாகாண சபைத் தேர்தலுடன் தொடர்புபட்ட 17 முறைப்பாடுகள் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ளதென அவர் கூறினார். அதில் அதிக முறைப்பாடுகள் குருநாகல் மாவட்டத்தில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாக காமினி நவரட்ண தெரிவித்தார். (த)

# கூட்டமைப்பின் வேட்பாளர் மீது யாழ். நகரில் நேற்று தாக்குதல்

## வாகனக் கண்ணாடிகளும் அடித்து நொருக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஓக. 21
வாகனத்தில் சென்றுகொண்டிருந்த தன் மீது ஆளும்கட்சி வேட்பாளரான அங்கஜனின் தந்தையார் இராமநாதன் குழுவினர் தாக்குதல் நடத்தியதாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் எம்.தம்பிராசா குற்றஞ்சாட்டியுள்ளார்.
ஆயினும் இந்தக் குற்றச் சாட்டுக்களை ஆளும் கட்சி வேட்பாளர் அங்கஜன் முற்றாக நிராகரித்துள்ளார்.
யாழ். மின்சார நிலைய வீதியில் நேற்றுமாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக வேட்பாளர் எம்.தம்பிராசா கூறினார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ். மின்சார நிலைய வீதியில் நான் வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். இதன்



போது தேர்தல் விதிமுறைகளை மீறி அந்தப் பகுதியில் வேட் பாளர் அங்கஜனின் 'ஸ்ரிக்கர்' ஒட்டப்பட்ட வாகனங்கள் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டன.
இது குறித்து யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சி.அச்சுதனுக்கும், பொலிஸாருக்கும் தெரியப்படுத்தினேன். இதனையடுத்து அங்கஜனின் 3 வாகனங்களும் எமது வாகனத்தை முற்றுகையிட்டன.

தொடர்ச்சி: பக்கம் 21

# கையறு நிலையில் தேர்தல் ஆணையாளர்

## சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 21
தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளை இராணுவம் மிரட்டும் நிலையில், எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ள முடியாத கையறு நிலையிலேயே தேர்தல்கள் திணைக்களமும் தேர்தல்கள் ஆணையாளரும் உள்ளனர்.
இதனால்தான் நாம் ஆரம்பம் முதலே, இராணுவத்தை முகாமுக்குள் முடக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.
நாவாந்துறையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை

தொடர்ச்சி: பக்கம் 21

# வடக்கில் இராணுவத் தலையீடு தேர்தல் அமைப்புகள் கண்டனம்

## நாவாந்துறையில் தேர்தல் அதிகாரிகள் மிரட்டப்பட்ட சம்பவம் குறித்து அவை சீற்றம்

கொழும்பு, ஓக. 21
"உலகில் எந்தவொரு நாட்டிலும் தேர்தல் நடவடிக்கையில் இராணுவம் ஈடுபடுவதில்லை. இந்த வரையறை வடக்குத் தேர்தலில் மீறப்படுவதால் நீதியான தேர்தல் நடைபெறுமா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது."
இவ்வாறு நீதியானதும் சுதந்திரமா னதுமான தேர்தல்களுக்கான மக்கள் இயக்கம் (கபே) மற்றும் பவ்ரல் அமைப்பு ஆகியன தெரிவித்துள்ளன.
இராணுவத்தினர் நாவாந்துறைப் பகுதியில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அரச தரப்பு வேட்பாளரைத் தேடிச்சென்ற தேர்தல்கள் திணைக்கள அதிகா

தொடர்ச்சி: பக்கம் 21

# சொல்லில் வேண்டாம் செயலில் காட்டுங்கள்

## இலங்கையிடம் கோருகிறது ஐ.நா.

கொழும்பு, ஓக. 21
இலங்கை சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. செயலில் காட்ட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.
ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சுபைனோ நண்டி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.
உலக மனிதாபிமான தினத்தை முன்னிட்டு, கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்விலேயே மேற்படி அறிக்கையை சுபைனோ நண்டி வெளியிட்டுள்ளார்.
அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
2009 ஆம் ஆண்டில் போர் காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த 4 லட்சத்து 80 ஆயிரம் பேரை மனிதாபிமான அமைப்புக்களும், இலங்கை அரசும் இணைந்து குடியமர்த்தியுள்ளன.
இலங்கை சொல்லிக்கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு செயலில் காட்ட வேண்டும். மக்களின் மனிதாபிமானத் தேவைகளை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட வேண்டும். இதற்கு இலங்கை அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றுள்ளது. (த-5)

# ஈழ அகதிகள் மூவரை நாடுகடத்த உத்தரவு

புதுடில்லி, ஓக 21
தமிழ்நாட்டில் இருந்து மூன்று தமிழ் அகதிகளை இலங்கைக்கு நாடு கடத்துமாறு, இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
ஈழநேரு, செந்தூரன், இத்தாலி ராஜன் எனப்படும் சௌந்தர் ராஜன் ஆகியோரையே நாடு கடத்துமாறு இந்திய மத்திய அரசு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.
மத்திய அரசின் இந்த நாடு கடத்தல் உத்தரவைத் தடுத்து நிறுத்த, இந்த மூவரும், சென்

தொடர்ச்சி: பக்கம் 21

# கூட்டமைப்பு 30 ஆம் திகதி நவிப்பிள்ளையுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21
இலங்கைக்கு வருகை தரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை, எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.
'கொழும்பில் எம்மைச் சந்திப்பதற்கு 30 ஆம் திகதி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது' எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 'உதயனு'க் குத் தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பின் போது வடக்கில் படைக்குறைப்பு, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.நா. ஆணையாளருக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி: பக்கம் 21


## கூட்டமைப்பு ஆதரவாளர்கள் விடுதலை

வவுனியா, ஓக. 21
கனகராயன்குளத்தில் கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபை வேட்பாளர் எம்.எம். ரதனின் ஆதரவாளர் கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் கனகராயன்குளப்பிரிவு பொலிஸாரால் வேட்பாளர் ரதனின் ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களது வாகனமும் கைப்பற்றப்பட்டது.

நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தால் இவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டதுடன் பறிமுதல் செய்யப்பட்ட வாகனமும் 200 ரூபா தண்டப் பணத்துடன் விடுவிக்கப்பட்டது. (த-402)

## சந்நிதியானுக்கு நேற்று தேர்..



வடமராட்சி, ஓக.21
பிரசித்திபெற்ற தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயில் தேர்த்திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு வேல் பெருமான், விநாயகர், ஆறுமுகசாமி ஆகிய சுவாமிகள் தனித் தனித் தேரில் ஆரோகணித்து சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் இருப்பிடம் வந்து சேர்ந்தனர்.

தேர்த் திருவிழாவின் சனநெரிசலுக்கு மத்தியில் வியாபாரிமூலையைச் சேர்ந்த பெண்மணி ஒருவரின் தாலிக் கொடியும், மற்றொரு பெண்ணின் ஒன்றேமுக்கால் பவுண் கொண்ட தங்கச் சங்கிலியும் அறுத்துச் செல்லப்பட்டுள்ளதாக உற்சவ காலப் பணிமனையிலும், பொலிஸிலும் புகார் செய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சப்பறத் திருவிழாவின்போது சிறுவர் ஒருவரின் 2 சோடிக் காப்பு திருட்டுப் போயிருந்தது.

இதேவேளை, தேர்த்திருவிழாவின் போது பக்தர்களால் தவறவிடப்பட்ட கைப்பைகள், பணத்துடன் கூடிய பேர்ஸ்கள் என்பன உற்சவகால பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆற்றங்கரை ஊடாகப் போடப்பட்டிருந்த தற்காலிக மண் அணைப் பாதையின் கோயில் கரைப் பகுதியில் இருந்த சுமார் 10 இற்கும் மேற்பட்ட நடமாடும் கடைகள் மண் அணைப் பாதைக்கு பலத்த இடைஞ்சலாக இருந்தமையால் அந்தக் கடைகள் அனைத்தும் வல்வெட்டித்துறை நகர சபையால் அப்புறப்படுத்தப்பட்டன. (த-8-34)

## கோத்தபாய இல்லையேல் போரில் வெற்றி இல்லை

### ஜனாதிபதியின் செயலர் புகழாரம்

கொழும்பு, ஓக 21
ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இல்லாதிருந்தால் தீவிரவாதத்துக்கு எதிரான போர் நடந்திருக்காது. பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இல்லாதிருந்தால், வெற்றி சாத்தியமாகியிருக்காது என்று தெரிவித்துள்ளார்

ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க. கொழும்பில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற சி.ஏ.சந்திரபிறேம எழுதிய, கோத்தாவின் போர் என்ற ஆங்கில நூலின், சிங்கள மொழி பெயர்ப்பான கோத்தபாயகே யுத்தய என்ற நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். ஜனாதிபதியின் தலைமையின் கீழும், கோத்தபாய ராஜபக்ஷவின் முயற்சியினாலும் தான் வெற்றி கிடைத்தது. கடந்தகாலத் தலைமைகள் பலவீனப்பட்டு, தோல்வியைச் சந்தித்த நிலையில் தான், சிறந்த தலைமைத்துவம் மூலம் கோத்தபாய ராஜபக்ஷ இதனைச் சாதித்துள்ளார். 1990களில் பல்வேறு நாடுகள் மற்றும் வெளிப்புறச் சக்திகளின் தலையீடுகளால், போரின் போது ஏற்பட்ட நெருக்கடிகள் குறித்தும் இந்த நூல் விபரித்துள்ளது என்று ஜனாதிபதியின் செயலாளர் மேலும் கூறினார். இந்த நிகழ்வில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, படைத்தளபதிகள், அமைச்சர்கள், அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (த)



## தபால்மூல வாக்கு சீட்டுகள் நாளை தபால் திணைக்களத்திடம்

யாழ்ப்பாணம், ஓக.21
தபால்மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுக்கள் ஒவ்வொரு மாவட்டத் தேர்தல் திணைக்களத்தினால் நாளை வியாழக்கிழமை தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சபைக்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கென தபால்மூல வாக்களிப்பு அடுத்த மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதற்குரிய ஒழுங்குகள், தேர்தல் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தபால்மூல வாக்களிப்புக்காகக் கடமையாற்றும் தேர்தல் அலுவர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டங்கள் ஒவ்வொரு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் உரிய தபால் மூல வாக்குச் சீட்டுக்கள் தேர்தல் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை நாளை வியாழக்கிழமை ஒவ்வொரு தேர்தல் திணைக்களத்தினாலும் தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்படவுள்ளன. (த-5)

## பீரிஸின் கருத்துக்களுக்கு தமிழக மீனவர்கள் எதிர்ப்பு

சென்னை, ஓக 21
இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் விரோத மனப்பான்மையுடன் பேசுவதாகத் தமிழக மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டுக்கு இந்தியப் பிரதமரை நேரில் அழைக்க புதுடில்லி சென்றிருந்த இலங்கை வெளியுறவு அமைச்சர் தெரிவித்த கருத்துக்களை அடுத்த தமிழக மீனவர்களின் இந்தக் கருத்து வந்துள்ளது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்த பிறகு டில்லியிலுள்ள இலங்கைத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையும் இந்திய மீனவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய-இலங்கை மீனவர்களிடையே உறவுகளை மேம்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில், அமைச்சரின் கருத்துக்கள் ஒரு நல்லுறவோடு பேசுவதுபோல தங்களுக்குத் தெரியவில்லை என்று தமிழ்நாடு விசைப்படகு மீனவர்கள் நலச் சங்கத்தின் பொதுச் செயுலர் போஸ் பி.பி.சியிடம் தெரிவித்தார்.



அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் கருத்துக்கள் தமிழக மீனவர்களுக்குப் பெரும் சங்கடத்தை ஏற்படுத்துகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ இருநாட்டு மீனவர்களுக்கும் இடையே ஒரு நல்லுறவை ஏற்படுத்த எடுத்த நடவடிக்கைகளுக்கு மாறாக பேராசிரியர் பீரிஸின் கருத்துக்களை உள்ளடக்கிய அறிக்கை, தமக்கிடையே ஒரு பெரிய விரோதத்தை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளது என்றும் போஸ் தெரிவித்தார். (த)

## சுன்னாகத்திலும் 50 வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக.21
சுன்னாகம் பிரதேசத்தில் ராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இதுவரையிலிருந்த 50 வீடுகள் அதன் உரிமையாளர்களிடம் நாளைமறுதினம் கையளிக்கப்படவுள்ளன.

ராணுவத்தினர், குடாநாட்டைக் கைப்பற்றியதிலிருந்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த வீடுகளை தற்போது படிப்படியாக அதன் உரிமையாளர்களிடம் கையளித்து பலாலியில் அமைக்கப்பட்டுள்ள நிரந்தர படைமுகாமுக்கு இடம்மாறி வருகின்றனர்.

இதன் அடிப்படையில் சுன்னாகம் பிரதேசத்தில் 513 ஆவது படைப் பிரிவு ராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த 50 வீடுகள் கையளிக்கப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக கிராம அலுவலர்கள் அழைக்கப்பட்டு குறித்த வீடுகள் யாவும் தற்போதுள்ள நிலைமைகள் காண்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் கையளிக்கப்படவுள்ளன என்று ராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (ஜ-5-86)

## பொருள்களைத் திருடிய இருவர் சந்தேகத்தில் கைது

யாழ்ப்பாணம், ஓக. 21
யாழ்ப்பாணத்தில் ரயில் பாதை நிர்மாணிப்பதற்கான பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் தென்பகுதியைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர் ஒருவர் உட்பட இரண்டு பேரைத் தாம் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரயில் பாதை அமைப்பில் ஈடுபட்டிருக்கும் ஒப்பந்த நிறுவனம் ஒன்றின் பொறுப்பாளரால் யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதன் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். (ஜ-4)

## தனித்து வாழ்ந்த பெண் வீட்டில் சடலமாக மீட்பு

தென்மராட்சி, ஓக. 21
தனித்து வாழ்ந்த பெண் மர்மமான முறையில் வீட்டு விறாந்தையில் சடலமாகக் காணப் பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயத்துக்கு அருகில் இடம் பெற்றது.

திருமணமாகாத இந்தப் பெண் தனிமையில் வாழ்ந்து வந்ததாகவும் நேற்றுக் காலை வீதியில் சென்றவர்கள் வீட்டு விறாந்தையில் நிர்வாணமாக சடலமாக கிடந்ததைக் கண்டு கிராம அலுவலர் ஊடாக பொலிஸாருக்கு அறிவித்தனர். வீட்டுப் பொருள்கள் விறாந்தையில் சிதறிக் காணப்பட்டுள்ளன.



திருட வந்தவர்கள், இவரைக் கொலை செய்துவிட்டு நகைகளை அபகரித்துச் சென்றிருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகிறது.

இவரது சடலம் பொலிஸாரால் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை நந்தாயினி (வயது-62) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தப் பெண் சாவகச்சேரி நகர்ப்பகுதியில் சாரத்திய பயிற்சிப் பாடசாலையில் பணிபுரிபவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## திணைக்களங்களின் தலைவர்களுக்கு அவசர அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக.21
யாழ்.மாவட்டத்திலுள்ள சகல திணைக்களத் தலைவர்களையும் யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுடனான சந்திப்பில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சி.அச்சுதன் அறிவித்துள்ளார். (ஒ-5)

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100%
சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில்
நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம்.
பெறுமதிமிக்க பரிசில்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.
Rs.10
ஷைலோ ஐஸ்கிறீம்
No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P : 021 492 6003

## தமிழ் மக்களின் விடிவுக்காக உழைப்பது கூட்டமைப்பு மட்டுமே

### கிளிநொச்சி வேட்பாளர் திருலோகமூர்த்தி கூறுகிறார்



கிளிநொச்சி, ஓக. 21
தமிழ் மக்களின் விடிவுக்காக அர்ப்பணிப்புடன் உழைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வடமாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பது மக்களின் வரலாற்றுக் கடமை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் மருத்துவர் திருலோகமூர்த்தி குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கோணாவிலில் கடந்த 15ஆம் திகதி மாலை இடம்பெற்ற வடமாகாண சபைத் தேர்தல் பரப்புரைக் கருத்தமர்வில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்த தாவது:

கிளிநொச்சி மாவட்ட மக்களின் பிரச்சினைகள் தனித்துவமானவை.

போரின்போது உயிர்களையும் உடைமைகளையும் இழந்தவர்கள், ஊனமுற்றவர்கள், கணவனை இழந்து நிற்கும் விதவைகள், பெற்றோரை இழந்து தவிக்கும் பிள்ளைகள், உறவுகளை இழந்து ஏங்கும் மக்கள் எனப் பல்வேறு பிரிவினரைக் கொண்ட பிரதேசம் இது. இவர்களின் பிரச்சினைகளை இந்தப் பிரதேசத்தில் இந்த மக்களோடு வாழும் என்னைப் போன்ற ஒருவரால் தான் உணர்ந்து கொள்ள முடியும்.


இந்த வகையில் வைத்தியராகவும், ஊடகவியலாளராகவும், சமாதான நீதவானாகவும், இறப்பு விசாரணை அதிகாரியாகவும், சமூக சேவையாளராகவும் இந்தப் பிரதேசத்தில் பணியாற்றும் என்னால் இந்த மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு மாகாண சபையை சரிவரப் பயன்படுத்த முடியும்.

எமது மாவட்டத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் எவ்வளவோ துன்ப துயரங்களின் மத்தியில் தமது கல்வியைத் தொடருகின்றனர். இவற்றுக்கெல்லாம் சரியான தீர்வு காண வேண்டுமாயின் வடமாகாண அரசை நாம் வெற்றி கொள்ள வேண்டும்.

இந்தத் தேர்தல் வெறுமனே வழமையான தேர்தல் அல்ல. தமிழ் மக்களின் தேசியத்தை, தனித்துவத்தை, சுதந்திரத்தை நிலை நிறுத்தும் தேர்தல். எனவே எமது மக்கள் ஒன்று பட்டு மாகாண அரசை வென்றெடுத்து தமிழன் ஆட்சி செய்யும் பொருட்டு வீட்டுச் சின்னத் துக்கு வாக்களிக்க வேண்டும்-என்றார். (க)

## தமிழரின் தியாகங்கள் வீண்போகவில்லை வட மாகாணசபைத் தேர்தலில் நிரூபிப்போம்

### கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட வேட்பாளர் ரதன் சூளுரை



> வடமாகாணசபைத் தேர்தலை நடத்து வதற்குவீரம் செறிந்த நாளான ஜூலை 5இல் ஜனா திபதி மஹிந்த அங்கீ காரம் வழங்கியமை எமது இனத்தின் வரலாற்றில் முக்கியமான தொன்றாகும்.

எதிர்கால தமிழ்ச் சந்ததிகள் தலை நிமிர்ந்து வாழவேண்டும் என்பதற்காகத் தமது உயிர்களை ஆகுதியாக்கி வீர காவியமான வீர மறவர்களதும் பொதுமக்களதும் தியாகங்கள் என்றும் வீண் போகாது என்பதை வடமா காணசபைத் தேர்தலில் பகிரங்கமாக வெளிப்படுத்துவோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா நகரசபை பதில் தலைவரும், வடமாகாணசபை வேட்பாளருமாகிய எம்.எம்.ரதன் தெரிவித்தார்.

வடமாகாணசபைத் தேர்தலில் போட்டி யிடும் வவுனியா மாவட்ட வேட்பாளர்க ளுக்கான முதலாவது அறிமுகக் கூட்டம் செட்டிகுளம் மெனிக்பாமில் இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மெனிக்பாம் இளைஞர் விளையாட்டுக்கழகத் தலைவர் சி.நிரூபன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

தமிழினத்தின் வரலாற்றில் மற்றுமொரு தேர்தல் வந்துள்ளது. அதை நாம் பலமான முறையில் எதிர்கொள்ள வேண்டும். எமது இனத்தின் கடந்தகாலத் தியாகங்களை மனதிலே நிறுத்தி உறுதியுடன் செயற்பட எமது மக்கள் தயாராக வேண்டும்.

எம்மை ஆயுதவழியில் அடக்கிய ராஜபக்ஷ அரசு இன்று ஜனநாயக வழியிலும் எம்மைத் தோற்கடிக்கவேண்டும் எனக் கங்கணம்கட்டி நிற்கின்றது. இந்த அரச தரப்பினர் எமது தாயகத்தில் எதையும் செய்யலாம் என்று கனவு காண்கின்றார்கள். ஆனால், எமது மக்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றார்கள்.

வடமாகாணசபைத் தேர்தலை நடத்து வதற்குவீரம் செறிந்த நாளான ஜூலை 5இல் ஜனாதிபதி மஹிந்த அங்கீகாரம் வழங்கியமை எமது இனத்தின் வரலாற்றில் முக்கியமானதொன்றாகும். இதனடிப்படை யில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி வாக்கு என்ற ஜனநாயக பலத்தை எமது மக்கள் உறுதியு டன் செலுத்துவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

ஆண்டாண்டு காலமாக - பாட்டன், கொப்பாட்டன் முதல் நாங்கள் வாழ்ந்த சரித்திர ரீதியான வடக்கு - கிழக்கு இணைந்த தாயக மண் எங்களின் சொந்த மண். நாங்கள் ஆளப்பிறந்தவர்கள்: வாழப் பிறந்த வர்கள். நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட வீர மறவர்களையும், இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட பொதுமக்களையும்போரிலே காவு கொடுத்த நாம் எவருக்கும் கைகட்டி தலை குனிந்து நிற்கவேண்டிய தேவையில்லை. 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்று நாங்கள் தலைநிமிர்ந்து நிற்போம் - என்றார்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், செட்டிகுளம் பிரதேச சபைத் தலைவர் கபிரியேல் அந்தோனிப்பிள்ளை மற்றும் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட ஏனைய வேட்பாளர்கள் உரையாற்றினர். (க-4)

## வட மாகாணத்தையும் அரசே ஆளும்

### அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நம்பிக்கை



வலி. வடக்கு, ஓக. 21
வட மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்பதில் எந்த வகையான சந்தேகங்களும் இல்லை. இதனை நான் கடந்த இரண்டு நாள்களாக வடக்கிலுள்ள மாவட்டங்களுக்குச் சென்றபோது உணரக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைபின் தேர்தல் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர்களுடான சந்திப்பில் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த மேலும் தெரிவித்ததாவது:

வட மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இணைப்புக் காரியாலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களையும் இணைக்கும் காரியாலயமாக இந்த அலுவலகம் அமைந்துள்ளது. என்னுடைய கணிப்பின்படி வட மாகாண சபைத்தேர்தல் நீதியானதும் நேர்மையானதுமாக நடை பெறும் என்பதில் எந்த வகையான சந்தேகமும் இல்லை. இதனை நான் வட மாகாணத் தின் பல மாவட்டங்களுக்கும் கடந்த இரண்டு நாள்கள் பயணம் செய்ததன் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் மாகாண சபைத் தேர்தல்கள் சம்பந்தமாக தேர்தல் ஆணையாளருடனான சந்திப்பு இடம்பெற்றது. அதில் வடக்கு மாகாணத் தேர்தல் தொடர்பாக பெரியளவில் குற்றச்சாட்டுக்கள் எவையும் முன் வைக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கியதேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உட்பட ஏனைய கட்சிகளின் பிரதிநிதி களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டி ருந்தார்கள்.

ஏனைய இரண்டு மாகாணங்களிலும் நடைபெறவுள்ள தேர்தலிலும் பார்க்க வட மாகாண சபைத் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கடந்த 25 வருடகால இடைவெளியின் பின்னர் வட மாகாண மக்கள் மாகாண சபைக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவுள்ளார்கள்.

அதேவேளை, நாளுக்கு நாள் வட மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டே செல்கின்றது - என்றார் அமைச்சர். (க-86)






தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வர்த்தக சங்கத் தலைவர் இ.ஜெயசேகரன் ஞாயிற்றுக்கிழமை ஆலய வழிபாடுகளில் பூசைகளை முடித்துக் கொண்டு தனக்கு ஆதரவு வழங்குமாறு நகரப்பகுதி வர்த்தகர்களிடம் தேர்தல் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார். (வ-14)

## வாக்களிப்பது தொடர்பான விளக்கம் தமிழர்களுக்கு அளிக்கப்படவேண்டும்

### வேட்பாளர் சிவஞானம் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஓக. 21
மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பது எவ்வாறு என்று தமிழ் மக்களுக்கு விளக்க மளிக்கப்பட வேண்டியது அவசி யம் என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் சீ.வீ.கே.சிவஞானம்.

இது தொடர்பாக மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். தேர்தல் காலத்தில் அரசின் போலி வாக்குறுதிகள் சலுகைகளுக்கு விலை போகக் கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த மண்ணிலே நின்று இந்த மண்ணோடு வாழ்ந்தவர்கள் நாங்கள். தேர்தலில் உணர்வோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்க ளித்து எங்களை அமோக வெற்றி பெறச் செய்வதன் மூலம் சலுகை அரசியலுக்கு முடிவு கட்ட வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் நாடாளுமன்றத் தேர்தல் முறைகள், உள்ளூராட்சித் தேர்தல் முறையிலும் வித்தியாசப்படுகின்றன. மாகாண சபை, நாடாளுமன்றத் தேர்தல்களில் மூன்று விருப்பு வாக்குகள் இருந்தாலும் வாக்காளர் புள்ளடி யிடும் போதும் எவ்வாறு செயற்பட வேண்டும் என்று தேர்தல் திணைக்களம் தெளிவுபடுத்தவில்லை. ஆகவே மக்கள் மத்தியில் ஒரு மயக்கநிலை உள்ளது-என்றார். (க)

வட மாகாண சபை
தேர்தல் - 2013
கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்
Dr. கந்தசாமி திருலோகமூர்த்தி





உறுதி செய்யப்பட்ட
வெற்றியை நோக்கி
உங்கள் தெரிவு இல 3
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

உதயன்
21/08/2013

# அன்பான வாக்காளப் பெருமக்களே!



**தியாகராஜா மகேஸ்வரன்**

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்துசமய கலாசார அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சி)



**நடராஜா ரவிராஜ்**

(முன்னாள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்)

வடமாகாணத்திலே எத்தனை அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர முதல்வர் நகரசபைத் தலைவர், பிரதேசசபைத் தலைவர் இருந்தும் இத்தனை வன்னி மக்களின் அவல நிலையிலும் அவர்கள் கரையா முள்ளிவாய்க்கால் வரை பாதுகாத்துச் சென்ற தாங்கள் வாழ்நாளில் உழைத்துச்சேர்த்த வாழ்வாதார உடைமைகளை கரையா முள்ளிவாய்க்கால் சென்று பாழடைந்து பழம் இரும்பாகிப்போகும் வரை தென்னிலங்கை நோக்கிச் சென்ற கோடான கோடி சொத்துக்களை மீட்டுக் கொடுத்தீர்களா? தடுத்து நிறுத்தினீர்களா? உங்கள் மனச்சாட்சியை தொட்டு மாகாண சபைத்தேர்தலிலே நீங்கள் அரசியல் செய் கின்ற கட்சிகள் ஏது எப்படி செய்தீர்கள் எப்படி மௌனம் காத்தீர்கள்? இத்தனை கோடான கோடி சொத்துக்களை கொடூர யுத்தத்திலும் அழியாமல் உயிர் காத்தது போன்று காத்த அந்த மக்களுக்கு நீங்கள் கூறிய ஆறுதல் வார்த்தை என்ன? உங்கள் கட்சி எடுத்த நடவடிக்கை என்ன? குறைந்தது நீதிமன்ற உதவியையாவது நாடினீர்களா? மாறாக

போர் அவலங்களை வைத்து வாக்குப் பிச்சை கேட்கவும் அவர்களின் உரிமைகளை வென்றெடுக்கின்றோம். என்று அவர்களை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தவும் அந்த மக்களுக்கு இந்த நாட்டிலே இருக்கின்ற அரசாங்கம் தாம் செய்ய வேண்டிய கடமைகளை அரசு செய்யும் போதும் தாம் செய்ததாக அரசியல் கட்சி வியாக்கியானம் கூறுவதும் அந்த அந்தரித்த மக்களுக்கு அவசர உதவியாக வழங்கும் சர்வதேசமும் புலம்பெயர் சமூகமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் செய்யும் பொழுதும் அதற்குள் புகுந்து பூ மாலை கேட்டு பெற்றுக்கொள்பவர்களும் இந்தத் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்கின்ற அரசியல் வாதிகளே.



இந்தப் பச்சோந்தி அரசியல் வாதிகள் தான் தேர்தல் நெருங்கி வருகின்ற போது தூசு பிடித்த அரசியல் தலைவர்களுக்கு பூமாலை அணிவதும் வார்த்தைகளால் தமக்குத் தாமே பூமாலை அணிந்து கொள்வதும் வாக்குக்கேட்பதற்காகவே.


இல்லையேல் தேர்தல் காலத்தில் அடிக்காதவனை அடித்தது என்றும் உதைக்காதவனை உதைத்தது என்றும் மதுபோதையில் மதிலில் உரஞ்சிய காயத்துக்கு பொலீஸ் நிலையம் சென்று மருத்துவ மனைக்கு அனுமதி கேட்பதும் அனுதாப வாக்கைப் பெறுவதும் கடந்த கால அரசியல் வாக்குப் பலம் இதுதான்

இப்போது உள்ள இவர்களது மகுட வாக்கியம் குட்டி யப்பான், குட்டிசிங்கப்பூர், நான்தான் முதலமைச்சரைத் தீர்மானிப்பேன் எனக் கூறுவதும் அன்பை ஆயுதமாகக் கொண்டு ஆளப்பிறந்தவன் என்றும் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்போம் எனக் கூறுவதும் உங்கள் வளமான வாழ்க்கைக்கு நம்பிக்கையுடன் எமக்கு வாக்களியுங்கள் எனக்கூறி அறிக்கைகளை வெளியிடுவதும் மொழி தெரியாதவர்கள் மக்களுக்கு முகம் தெரியாதவர்கள் எல்லோரும் சொல்கின்ற வாக்கியங்கள் இவைதான். இதுவே தான் கடந்த கால அரசியல் வரலாறு.



**மீண்டுமொரு மகேஸ்வரன், மீண்டுமொரு ரவிராஜ் போன்ற 36 ஜனநாயக அரசியல் வாதிகளை ஜனநாயகமாக பிறக்கப்போகும் வடமாகாண சபைத் தேர்தலில் தெரிவு செய்து கடந்த 50 ஆண்டு காலமாக விட்ட தவறுகள் அனைத்துக்கும் நிவர்த்தியாக சிந்தித்து வாக்களியுங்கள்.**





X 5




**வடமாகாண முதலமைச்சர் வேட்பாளரும்**

**முதன்மை வேட்பாளரும்**

# தியாகராஜா துவாரகேஸ்வரன்

**ஐக்கிய தேசியக் கட்சி**

எமது வெற்றியின் இரகசியம் தியாகராஜா மகேஸ்வரன் நடராஜா ரவிராஜ் போன்றோரை தெரிவுசெய்வது.





தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத் தேர்த் திருவிழாவின்போது அடியார்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், காவடி எடுத்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (வ-34)

# கைவிட்டுச் சென்ற வள்ளங்களுடன் கடன் வசதியும் வழங்க நடவடிக்கை



## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

வலி.தென்மேற்கு.ஓக. 21

நாட்டில் இடம்பெற்ற போர் காரணமாக கடற்படை, காலாற்படை ஆகியோரின் பாதுகாப்பிலிருக்கும் கடற்றொழிலாளர்களால் கைவிட்டுச் செல்லப்பட்ட மீன்பிடி வள்ளங்களை உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ள கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்ண மீனவர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக குறைந்த வட்டியில் கடன் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தேசிய கடற்றொழிலாளர் மகாசம்மேளனத்தின் பொதுச் சபைக்கூட்டம் மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சு அலுவலகத்தில் கேட்போர் கூடத்தில் கடற்றொழில் அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் கடற்றொழிலாளர்களின் நிலைப்பாடு குறித்தும் அவர்கள் தொழிலில் ஈடுபடு வதற்கு கடன்வசதிகளை ஏற்படுத்தி கொடுக்குமாறு அமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

சம்மேளனத் தலைவரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சர் மீனவர்களுக்கு குறைந்த வட்டியில் 20 லட்சம் ரூபா வரை கடன் வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதுடன் பாதுகாப்புப் படையினரிடம் இருக்கும் வள்ளங்களை ஒப்படைப்பதற்கான நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை, கடனைப் பெற விரும்பும் மீனவர்களை சம்மேளனத் தின் சிபாரிசுடன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (வ-115)

## சீன வர்த்தகக் கண்காட்சியை பார்வையிட ஏற்பாடு

கொழும்பு, ஓக. 21

சீனாவில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சியை பார்வையிடுவதற்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சீனாவில் வருடந்தோறும் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ளது.

இதற்கு யாழ்.மாவட்டத்தவர்களை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றம் செய்துள்ளது.

பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னராக தமது விவரங்களை யாழ்ப்பாணம் தொழிற்றுறை மன்றம், 124, இராசாவின் தோட்டம் வீதி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மன்றத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி கேட்டுள்ளார். (வ-400)

## ஏழாலைப் பகுதிக்கான நடமாடும் சேவை நாளை

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஏழாலைப் பகுதிக்கான நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நடமாடும் சேவையில் திருமணப் பதிவுகள், தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான செயற்பாடுகள், பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவுகள் வழங்கல் போன்றன இடம்பெறவுள்ளது.

ஜே/201ஏழாலைமேற்கு, ஜே/202ஏழாலை தென்மேற்கு, ஜே/203 ஏழாலை தெற்கு, ஜே/204 ஏழாலை கிழக்கு, ஜே/205 ஏழாலை வடக்கு, ஜே/206 ஏழாலை மத்தி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இந்த நடமாடும் சேவையில் கலந்து கொள்ள முடியும். (வ-86)

## கிணற்று மக்கியை வீதிக்குப் போட முடிவு

### களஞ்சியப்படுத்தவும் ஏற்பாடு

வலி.தென்மேற்கு. ஓக. 21

குடிதண்ணீர் தேவைக்காகப் பெரியவிளான் பகுதிகளில் வெட்டப்படும் கிணற்றிலிருந்து வெளியேற்றப்படும் மக்கியை வீதிகளுக்கு பயன்படுத்த முன்வந்துள்ள வலி.தென்மேற்குப் பிரதேச சபை அதனைக் களஞ்சியப்படுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மாதகல் பகுதியில் மீள்குடியேறிய மக்களுக்கு மேற்படி சபையால் பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. சபையால் வழங்கப்படுகின்ற குடிதண்ணீர் போதுமானதாக இல்லாததால் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

அவர்களுக்கான குடிதண்ணீரை குழாய் மூலம் வழங்க முன்வந்துள்ள தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை பெரியவிளானில் உள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் பெரியளவிலான கிணறு வெட்டும் பணியை ஆரம்பித்துள்ளது.

இந்தக் கிணற்றிலிருந்து வெளியேற்றப்படும் மக்கியை குறித்த பிரதேசத்திலுள்ள வீதிகளுக்குப் பயன்படுத்த முன்வந்துள்ள பிரதேச சபை மக்கியைப் பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (வ-115)

## வீதியில் கைவிடப்பட்ட வயோதிபர் முதியோர் இல்லத்துக்கு

வடமராட்சி, ஓக. 21

வீதியில் கைவிடப்பட்ட பார்வை இல்லாத 80 வயது வயோதிபர் ஒருவரை அந்தப் பகுதி கிராம சேவையாளரின் உதவியுடன் பெண் ஒருவர் அவரை கைதடி முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டார்.

நேற்று முன்தினம் காலை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் நெல்லியடியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கனகசபை என்ற வயோதிபரே இவ்வாறு சேர்க்கப்பட்டவராவார். (வ-8)

## சந்நிதி ஆலயச் சூழலில் நடமாடும் நீதிமன்றம்




வடமராட்சி, ஓக. 21

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் பருத் தித்துறை நீதிமன்றத் தின் நட மாடும் நீதிமன்றம் நேற்று முன்தினம் தொடக்கம் நீர்ப் பாசனத் திணைக்கள அலுவ லகத்தில் இயங்கி வருகின்றது.

நடமாடும் நீதிமன்றத்தின் நீதி பதியாக திருமதி ஶ்ரீநிதி நந்த சேகரன் பணியாற்றி வருகின் றார். இந்த நடமாடும் நீதிமன் றம் இன்று புதன்கிழமை இடம்பெறும் தீர்த்தத் திருவிழா வரை இயங்கும்.

இதேவேளை குழந்தைகள், சிறுவர்களும் நகைகள் அணி வதை முற்றாக நிறுத்துமாறும், ஏனெனில் திருடர்கள் அவர்களிடம் தான் கைவரிசை யைக் காட்டுவார்கள் என்ப தால் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு வரு கின்றது.

திருவிழாக் காலத்தில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடுவோர் மீது பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட் டுள்ளனர். (வ-8)



நல்லூர்க் கந்தனின் ஒன்பதாம் திருவிழா வீதியுலாக் காட்சி

### நெஞ்சத்தின் ஏக்கத்தை நீக்கு

சொந்த மண் ணில் வீட்டிற் சொர்க்கவாழ் வைவாழும்
சிந்தையோ டுன்னைச்சே விக்கின்றோம்-கந்தப்பா!
நெஞ்சக் கனவை நிறைவேற்றி வைப்பதற்காய்
மஞ்சத்தில் நீவிரைந்தே வா

வேட்டிசே லைபொலிய வெண்ணீற் றொளிவிளங்கப்
பாட்டிசைத்துன் பாதம் பரவுகின்றோம் - நாட்டமுடன்
மஞ்சத்தில் ஏறும் வடிவேலா! வந்தெங்கள்
நெஞ்சத்தின் ஏக்கத்தை நீக்கு

சிப்பி.

## நல்லூர்த் திருமஞ்சம்

நல்லூர்க் கோயில் மணி வாவென சொல்லுது
செல்லும் வழிநெடுக தோரணப் பந்தல்கள்
எங்கும் முருக நாமம் எங்கும் திருப்பாடல்
சுற்றுப் பிரகாரம் முற்றும் மக்கள் வெள்ளம்
முன்கோபுர வாசலில் முழுநிலா போல் மஞ்சம்
பின்னால் ஆடிப்பாடி பஜனிக்கும் திருக்கூட்டம்
முளவு முரசம் ஓதுமறை ஒலிக்க
சிரங்கூப்பிய கரத்தார் அரகரா என்ன
சூர்மார்பும் குன்றும் குடைந்த வேற்குமரன்
தனமும் நலமும் வளமும் எல்லாமும் அள்ளி
அருள் மழை தூவும் திருக்கோலம் காண
இந்திராதி தேவருடன் இருடிகளும் முனிவர்களும்
தேரடிச் சித்தரும் யோகரும் விண்ணின்று பூத்தூவ
திருமஞ்ச வீதி உலா அழகு காண்பதற்கு
நான்முகனும் நாலாயிரம் கண் படைத்திலனென்றால்
இரண்டு கண்கள் இல்லாதவனும் காண்பது அதிசயமே

நாவற்குழி சு.சிவராசா






## 24 தடவைகள் பாகிஸ்தான் அத்துமீறல்

### ஏ.கே.அந்தோனி



புதுடெல்லி, ஓக.21
இந்திய எல்லையில் 5 இந்திய இராணுவத்தினர் உயிரிழந்த சம்பவத்துக்குப் பின்னர் பாகிஸ்தான் இராணுவத்தின் 24 அத்துமீறல்களை இந்திய இராணுவ வீரர்கள் முறியடித்துள்ளனர் என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் எல்லை பகுதியில் கடந்த 6ஆம் திகதி அத்துமீறி நுழைந்த பாகிஸ்தான் இராணுவத்தினர், இந்திய வீரர்கள் 5 பேரை சுட்டுக் கொன்றனர். எல்லை பகுதியில் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்திய பாகிஸ்தான் இராணுவத்தினருக்கு இந்திய வீரர்களும் பதிலடி கொடுத்தனர்.

இதுகுறித்து இராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோணி நாடாளுமன்றில் விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

"இந்த ஆண்டில் கடந்த 4 மாதங்களில் பாகிஸ்தான் இராணுவத்தினர் 82 முறை இந்திய எல்லைக்குள் ஊடுருவி உள்ளனர். அவற்றை இந்திய இராணுவ வீரர்கள் முறியடித்துள்ளனர். குறிப்பாக ஓகஸ்ட் மாதம் எல்லையில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு பிறகு பாகிஸ்தான் இராணுவத்தினர் 24 முறை அத்து மீறி ஊடுருவ முயன்றனர். அதையும் இந்திய இராணுவத்தினர் முறியடித்துள்ளனர். கடந்த 2012ஆம் ஆண்டு 61 முறை பாகிஸ்தான் இராணுவத்தினர் அத்துமீறி இந்திய எல்லையில் தாக்குதல் நடத்தி உள்ளனர். அதற்கு இந்திய இராணுவத்தினர் தக்க பதிலடியும் கொடுத்தனர்.

இந்த ஆண்டு அது 117ஆக அதிகரித்துள்ளது. பாகிஸ்தான் இராணுவ வீரர்களின் எந்த வகையான தாக்குதலையும் எதிர்கொள்ள இந்திய ராணுவ வீரர்கள் தயாராக உள்ளனர்" என்று தெரிவித்தார். (ற)


# இலங்கைக்கு அனுப்பப்பட்டால் ஈழ அகதிகள் கொல்லப்படுவர்

## தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்துகின்றார் சீமான்

சென்னை, ஓக.21
ஈழ அகதிகள் மீண்டும் இலங்கைக்கே திரும்பி அனுப்பப்பட்டால் அவர்கள் அங்கு கொல்லப்படுவது நிச்சயம். அவர்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

"இலங்கையில் சிங்கள அரசு நடத்திவரும் திட்டமிட்ட இன அழிப்பில் இருந்த தங்களைக் காப்பாற்றிக் கொள்ள தமிழ் நாட்டுக்கு அகதிகளாகத் தஞ்சமடைந்தோரை அவர்களின் விருப்பத்திற்கு எதிராக இலங்கைக்கே திருப்பி அனுப்பி வைக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடந்து வருகிறது.



இலங்கையில் போர் முடிந்து விட்டது. அங்கே அமைதி திரும்பி விட்டது என்கிற காரணங்களைக் கூறி, இங்கு அகதிகள் முகாம்களில் வாழ்ந்துவரும் தமிழர்களை திருப்பி அனுப்பும் முயற்சி 2009ஆம் ஆண்டிலிருந்தே நடந்து வருகிறது. அவ்வாறு அனுப்பி வைத்த பல அகதிகள் இன்று வரை அங்கு வாழ இடமின்றியும், வழியின்றியும் பெரும் துயரத்திற்கு உள்ளாகி வருகின்றனர். ஏனெனில் அவர்கள் வாழ்ந்த இடங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதால், வாழ இடமின்றி காடுகளில் தமிழர்கள் சிங்கள அரசால் குடியமர்த்தப்படுகின்றனர்.

ஒரு நாட்டில் இருந்து அகதிகளாக வெளியேறுபவர்களை அவர்களின் விருப்பத்திற்கு எதிராக சொந்த நாட்டிற்கு அனுப்பக் கூடாது என்று ஐ.நா.வின் அகதிகள் காப்பு பிரகடனம் கூறுகிறது.

உலக நாடுகள் ஏற்றுக் கொண்ட இந்த பிரகடனத்தை இந்திய அரசு இதுநாள் வரை ஏற்றுக்கொள்ளாதிருக்கும் காரணத்தினால், ஈழத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கே திருப்பி அனுப்பும் நடவடிக்கை இங்கு தொடர்ந்து கொண்டிருக்கிறது. சிறப்பு முகாம்களில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளவர்களை இலங்கைக்கே திருப்பி அனுப்பி வைத்தால் அவர்கள் கொல்லப்படுவது நிச்சயம்.


இந்தப் பிரச்சினையில் தமிழக முதலமைச்சர் தலையிட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம். இங்குள்ள சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளோரை விடுவிக்கவும், அவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் இங்கேயே வாழ உரிய நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## பதவியைப் பாதுகாக்க முயற்சிக்கும் மத்திய அரசு

புதுடில்லி, ஓக.21
மத்திய அரசு தனது பதவியை பாதுகாத்துக் கொள்ளவே கவலைப் படுகிறது. இந்திய ரூபாவின் வீழ்ச்சியை நினைத்து அல்ல என்று தெரிவித்துள்ளார் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி.

இந்திய ரூபாவின் மதிப்பு சரிவடைவது குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு பதிலளித்த நரேந்திர மோடி, மத்திய அரசு பொருளாதார சரிவையோ, இந்திய ரூபாயின் வீழ்ச்சி குறித்தோ கவலைப்படாமல், தனது பதவியை தக்க வைத்துக் கொள்வதிலேயே கவனமாக இருப்பது குறித்து மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இந்திய ரூபாவின் மதிப்பு கடந்த 3 மாதங்களாக தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வருகிறது. அதனை சரி செய்ய மத்திய அரசு இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை" என்று தெரிவித்தார். (ற)



முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியின் 69ஆவது பிறந்த தினம் நேற்று கொண்டாடப்பட்டது. ராகுல் காந்தி, பிரியங்கா வதோர ஆகியோர் ராஜிவ் காந்தியின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

## பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க வேண்டும்

### தி.மு.க., அ.தி.மு.க. வலியுறுத்து

புதுடில்லி, ஓக.21
இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று இந்திய மக்களவைத் தொடரில் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மக்களவைத் தொடரில் நேற்று உரையாற்றிய அ.தி.மு.க உறுப்பினர் தம்பிதுரை,

"இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது. பிரதமர் மட்டுமின்றி எந்த உயரதிகாரிகளும் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது" என்று வலியுறுத்தினார்.

அதைத் தொடர்ந்து உரையாற்றிய தி.மு.க. உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன்,

"இலங்கை அரசு இனப்படுகொலை செய்த நாடாக உள்ளது. அதனால் கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும். இந்தியா பங்கேற்றால் தமிழக மக்களை இழிவுபடுத்துவது போலாகும். தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்தார். (ற)

## ஆயுதங்கள் தீப்பற்றியதால் விபத்து ஏற்பட்டிருக்கலாம்

### ஏ.கே.அந்தோனி தகவல்

புதுடில்லி, ஓக.21
ஆயுதங்களில் தீப்பற்றியமையால் சிந்துரக்ஷக் நீர்மூழ்கி கப்பல் வெடித்திருக்க வாய்ப்புள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி தெரிவித்துள்ளார்.

ஐ.என்.எஸ் சிந்துரக்ஷக் நீர்மூழ்கி கப்பலில் கடந்த வாரம் ஏற்பட்ட வெடி விபத்து குறித்துக் கருத்துத் தெரிவித்த பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணி,

"சிந்து ரக்ஷக் நீர்மூழ்கி கப்பலில் ஏற்பட்ட விபத்தை முன்னிட்டு கடற்படையில் உள்ள அனைத்து நீர்மூழ்கி கப்பல்களிலும் ஆயுதங்கள் பாதுகாப்பு முறை குறித்து விரிவான சோதனை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

நீர்மூழ்கியில் ஏற்பட்ட வெடிவிபத்தின் வேகம் மற்றும் தீவிரம், அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களை பார்க்கும்போது, அதனுள் இருந்தவர்கள் பிழைத்திருக்க வாய்ப்பில்லை என்பதை உணர்த்துகிறது. ஆயுதங்களில் தீப்பற்றிக் கொண்டதால் வெடிவிபத்து நடந்ததற்கான வாய்ப்புகள் உள்ளன என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.



தடயவியல் சோதனை மூலம், ஆயுதங்கள் எப்படி தீப்பற்றியது என தெரியவரும். நீர்மூழ்கி தற்போது பாதி மூழ்கிய நிலையில் உள்ளது. அது மேலே தூக்கப்பட்டு, அதில் உள்ள கடல் நீரை வெளியேற்றிய பின்பு தான் விபத்துக்கான காரணம் தெரியவரும். இதற்காக நிபுணர்கள் அடங்கிய விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

கப்பலை மீண்டும் பயன்படுத்த முடியுமா என்பது பற்றி ஆய்வு மேற்கொள்ள பிரபல நிறுவனங்களிடம் கேட்கப்பட்டுள்ளது. இதில் உதவி செய்ய நீர்மூழ்கியை ஏற்கனவே புதுப்பித்த ரஷ்ய நிறுவனமும் முன்வந்துள்ளது." என்று தெரிவித்தார். (ற)

# இந்தியா பங்கேற்காவிட்டாலும் பொதுநலவாய மாநாடு நடக்கும்

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன்

சென்னை, ஓக.21
இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளாது விட்டாலும், அந்த மாநாடு நடைபெற்றே தீரும் என்று தெரிவித்துள்ளார் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 70ஆவது பிறந்த நாள் விழா, சத்தியமூர்த்தி பவனில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொண்டால் என்ன லாபம், கலந்து கொள்ளாவிட்டால் என்ன லாபம் என்பதை எதிர்ப்பாளர்கள் விளக்க வேண்டும்.

இந்தியா பங்கேற்காவிட்டாலும் இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடைபெறும். தமிழக மீனவர்களைக் காப்பாற்ற தமிழக காங்கிரஸ் கட்சி தொடர்ந்து முயற்சித்து வருகிறது. மத்திய அரசும் நடவடிக்கை எடுத்து வருகிறது. இரு நாட்டு மீனவர்களிடையே பேச்சு நடத்த அதிகாரப்பூர்வ ஏற்பாடுகள் செய்வதன் மூலம் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்" என்று தெரிவித்தார். (ற)

## ரயில் விபத்தால் ரூபா 360 கோடி இழப்பு

பாட்னா, ஓக.21
பீகார் மாநிலத்தில் ரயில் விபத்தை தொடர்ந்து ஏற்பட்ட வன்முறையால், ரயில்வே துறைக்கு ரூ.360 கோடி இழப்பு ஏற்பட்டிருப்பதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது. பீகார் மாநிலத்தில் தமரா காட் ரயில்வே நிலையத்தில் நேற்றுமுன்தினம் பயங்கர விபத்து ஏற்பட்டது.

அதில் 40 பேர் உயிரிழந்தனர். 50 பேர் காயம் அடைந்தனர். அதையடுத்து இடம்பெற்ற வன்முறைகளிலேயே இந்த இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# ஜி.எஸ்.எல்.வி. டி 5 ரொக்கெட் விரைவில் ஏவப்படும்

சென்னை, ஓக.21
ஜி.எஸ்.எல்.வி. டி 5 ரொக்கெட்டில் எரிபொருள் கசிவு சீர்செய்யும் பணி நிறைவடைந்ததும், ரொக்கெட் விரைவில் விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ தலைவர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "ரொக்கெட்டின் 2ஆவது நிலையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் கசிவை சீர்செய்யும் பணிக்காக ஜி.எஸ்.எல்.வி. டி5 ரொக்கெட் வரும் ஞாயிற்றுகிழமையன்று ஸ்ரீஹரிக்கோட்டாவில் உள்ள ராக்கெட் பணிமனைக்கு கொண்டு செல்லப்பட உள்ளது. அந்தப் பணிகள் நிறைவடைந்ததும் ஜி.எஸ்.எல்.வி. டி5 ரொக்கெட் விண்ணில் ஏவப்படும் திகதி அறிவிக்கப்படும்" என்று தெரிவித்தார்.

இந்திய விஞ்ஞானிகள் தயாரித்த கிரையோஜெனிக் இயந்திரத்தில் எந்தக் கோளாறும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் விண்ணில் செலுத்தப்படவிருந்த ஜி.எஸ்.எல்.வி. டி 5 ரொக்கெட் தொழில்நுட்பக் கோளாறு காரமாக இறுதி நேரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டதுடன் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டிருந்தது என்றும் முதலில் கூறப்பட்டது. (ற)

## அடக்குமுறை வேண்டாம்

### எகிப்து அரசை வலியுறுத்துகிறது ஐ.நா.

ஜெனீவா, ஒக.21
எகிப்தில் அரசுக்கெதிராக முர்சி ஆதரவாளர்கள் நடத்தும் வன்முறைப் போராட்டங்கள் கைவிடப்பட வேண்டும். அதே வேளை, போராட்டங்கள் மேற்கொள்வோர் மீது மேற் கொள்ளப்படும் அதிகப்படியான பலப்பிரயோகத்தை அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கீ-மூன்.

எகிப்தில் தற்போது ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலை குறித்து பான் கீ-மூன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"எகிப்தில் நடைபெற்றுவரும் வன்முறைப் போராட்டங்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம். வழிபாட்டு ஸ்தலங்கள், மருத்துவமனைகள் மற்றும் பொது கட்டடங்கள் மீது தாக்குதல் நடத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.



வன்முறைகளை அடுத்து எகிப்தில் அவசரகாலநிலை பிறப்பிக்கப்பட்டு இராணுவத்தினர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

எந்த கோரிக்கையாக இருந்தாலும், அதற்காக பொதுச் சொத்துக்குச் சேதம் விளைவிக்கப்படுவது தவறு. எதிர்கால எகிப்துக்கு தேவையான அவற்றை பாதுகாப்பது மிக அவசியம். இப்போதுள்ள மோசமான சூழ்நிலையில், போராட்டக்காரர்கள் மீது அதிகப்படியான பலப்பிரயோகத்தை அரசு கையாளக் கூடாது. இரு தரப்பும் தற்போது அமைதி காப்பதே மிக முக்கியமானது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பிரிட்டன் வெளியுறவுத்துறை அமைச்சர் வில்லியம் ஹொக்கும் போராட்டக்காரர்கள் மீது அதிகப்படியான பலப்பிரயோகம் கூடாது என்று வலியுறுத்தி உள்ளார்.(ற)

## டிரோனை தேடிப் பிடிக்க பயிற்சி

தெஹ்ரான், ஒக.21
ஆளில்லா உளவு விமானங்களைத் (டிரோன்) தேடிக் கண்டுபிடிப்பதற்கான பயிற்சியை மாணவர்களுக்கு வழங்க ஈரான் இராணுவம் திட்டமிட்டு வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கின்றது என்று அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் குற்றஞ்சாட்டி வருவதுடன், ஈரானை உளவு பார்ப்பதற்காக ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி வருகின்றன.

அவற்றில் சிலவற்றை ஈரான் கைப்பற்றியுள்ளதுடன், அவற்றைத் திருப்பி ஒப்படைக்கவும் மறுத்துவருகின்றது. இந்நிலையில் ஈரான் நாட்டு உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அந்நாட்டு இராணுவம் ஆளில்லா விமானங்கள் தொடர்பான சில பயிற்சிகளை அளிக்க திட்டமிட்டு உள்ளது.

ஆளில்லாத விமானங்களை கண்டுபிடிக்கவும், முடிந்தால் அதை கைப்பற்றுவதற்கும் தேவையான பயிற்சிகளையே ஈரான் இராணுவம் மாணவர்களுக்கு அளிக்கவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## தனது சதியை ஏற்றது அமெரிக்கா

வொஷிங்டன், ஒக.21
ஈரானில் 1953 ஆம் ஆண்டு இடம்பெற்ற சதி நடவடிக்கையில் தமக்கு முக்கிய பங்கு இருந்ததை அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிலையம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த சதி மூலம் ஈரானில் ஜனநாயக ரீதியில் தெரிவு செய் யப்பட்ட அப்போதைய பிரதமர் மொஹமட் மொசாதிக் பதவியில் இருந்து கவிழ்க்கப்பட்டிருந்தார்.

இந்த சதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 60 ஆண்டு பூர்த்தியடைந்துள்ள நிலையில், அமெரிக்காவின் தேசிய சுயாதீன பாதுகாப்பு ஆவணத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வெளிநாட்டு கொள்கையின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை சி.ஐ.ஏ இன் நேரடி வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## வீழ்ந்தது அமெ. போர் விமானம்

வொஷிங்டன், ஒக.21
அமெரிக்க விமானப் படையின் பி-1 பி லான்சர் விமானம் ஒன்று நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் வடக்கு மாகாணமான மோன்டனா பகுதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

அமெரிக்க விமானப் படையின் 28ஆவது குண்டு வீச்சுப் பிரிவைச் சேர்ந்த இந்த விமானம் எல்ஸ்வொர்த் விமானப்படைத்தளத்திலிருந்து வழக்கமான பறப்பை மேற்கொண்டபோதே விபத்துக்குள்ளாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விமானத்தில் பயணம் மேற்கொண்ட நான்கு பேர் கொண்ட குழு தானியங்கி பாதுகாப்பு முறை மூலம் பாதுகாப்பாகத் தரையிறங்கியுள்ளனர்.

விபத்து இடம்பெற்ற இடத்துக்கு மீட்புக் குழுவினர் அனுப்பப்பட்டுள்ளனர் என்றும், விபத்துத் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் எல்ஸ்வொர்த் விமானப்படைப் பிரிவின் கேணல் கெவின் கென்னடி தெரிவித்தார்.

அணு ஆயுதங்களை எடுத்துச் செல்வதற்காகத் தயாரிக்கப்பட்ட பி1 லான்சர் விமானத்தின், மேம்படுத்தப்பட்ட வடிவமே நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய பி-1 பி வகை போர் விமானங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## களைகட்டும் ஒருபால் திருமணங்கள்

மெல்போர்ன், ஒக.21
ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் முதல் நாடாகவும் உலகில் 14ஆவது நாடாகவும் நியூசிலாந்து ஒருபால் திருமணத்தை சட்டபூர்வமாக அங்கீகரித்தனை அடுத்து, அங்கு ஒருபால் திருமணக் கொண்டாட்டங்கள் களை கட்டுகின்றன.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மட்டும் 31 ஒருபால் தம்பதிகள் திருமண பந்தத்தில் இணைந்துகொண்டுள்ளனர் என்று அந்நாட்டு அரச உள்துறை புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

இதேவேளை, நியூஸிலாந்தில் ஒருபால் திருமணங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து வேறு நாடுகளைச் சேர்ந்த ஒருபால் தம்பதிகளும் நியூசிலாந்து சென்று திருமணம் முடிக்க திட்டமிட்டுள்ளனர். ஆஸ்திரேலியாவிலிருந்து சுமார் ஆயிரம் தம்பதிகள் இவ்வாரம் நியூசிலாந்து செல்லவுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் நியூசிலாந்து ஒருபால் திருமணத்தை சட்டப்படி அங்கீகரித்தமை குறிப்பிடத்தக்கது. (ற)




பிலிப்பைன்ஸில் பெய்து வரும் கன மழை காரணமாக தலைநகர் மணிலாவை வெள்ளம் சூழ்ந்துள்ளது. கடந்த இரண்டு நாள்களாக பெய்த கன மழை காரணமாக மணிலாவின் பெரும்பலான பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டன. பலர் வீடுகளை விட்டு பாதுகாப்பான பகுதிகளுக்கு குடிபெயர்ந்துள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

## ஸ்நோடனின் ஆதாரங்களை அழித்துவிடுமாறு அழுத்தம்

### 'கார்டியன்' பத்திரிகை கூறுகின்றது

லண்டன், ஒக.21
எட்வேர்ட் ஸ்நோடன் பகிரங்கப்படுத்திய அமெரிக்க உளவுத் திட்டங்கள் தொடர்பான ஆவணங்களின் பிரதிகளை அழித்துவிடுமாறு 'கார்டியன்' பத்திரிகை நிறுவனத்திற்கு பிரிட்டன் அரசு அழுத்தம் கொடுத்துள்ளது.



அமெரிக்க கண்காணிப்பு திட்டங்கள் தொடர்பாக தகவல்களை பகிரங்கப்படுத்திய விவகாரத்தில் பிரிட்டனில் இருந்து வெளியாகும் 'கார்டியன்' பத்திரிகை முக்கிய பங்காற்றியிருந்தது. இந்த நிலையிலேயே பிரிட்டன் அரசினால் குறித்த பத்திரிகை நிறுவனத்துக்கு இந்த அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள 'கார்டியன்' பத்திரிகையின் செய்தியாசிரியர் ஒருவர்,

"இரகசிய தகவல்கள் வெளியிடப்பட்டதை தொடர்ந்து பிரிட்டன் அதிகாரிகள் ஒரு மாதத்திற்கு முன்னர் இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தனர். குறித்த ஆவணங்களை அழிக்காதவிடத்து சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். அரசுடன் இடம்பெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து பிரிட்டன் அரசின் பாதுகாப்பு துறைநிபுணர்கள் இருவர் லண்டனிலுள்ள கார்டியன் பத்திரிகை அலுவலகத்திற்கு வருகை தந்திருந்தனர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை 'கார்டியன்' பத்திரிகை ஊடகவியலாளர் ஒருவரின் நண்பர் நேற்றுமுன்தினம் ஹித்ரோ விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

டேவிட் மிராண்டா என்ற இந்த நபர் ஹொங்கொங்கில் எட்வோர்ட் ஸ்நோடனை நேரில் சந்தித்திருந்ததுடன், அவரின் ஆவணங்களை அடிப்படையாக கொண்ட பல செய்திகளின் துணை ஆசிரியர் அல்லது எழுத்தாளராக இருந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## இறந்து 42 நிமிடங்களின் பின் உயிர்பிழைத்த பெண்

கான்பரா, ஒக.21
உயிரிழந்த பெண் ஒருவரை 42 நிமிடங்களுக்குப் பின்னர் மீண்டும் உயிர் பிழைக்க வைத்து பிரமிக்க வைத்துள்ளனர் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மருத்துவர்கள்.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன்நகரில்உள்ளமொனாஷ் மருத்துவ மையத்திலேயே இந்த விநோதம் நடந்துள்ளது.

கடந்த வாரம் 41 வயது மதிக்கத்தக்க வநேசா தனசியோ என்ற பெண், இதயத்திலிருந்த இரத்தக்குழாய் ஒன்று முற்றிலுமாக அடைக்கப்பட்ட நிலையில் மருத்துவ மையத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் வநேசாவை பரிசோதித்த போது அவர் உயிரிழந்து விட்டமை தெரியவந்தது. ஆயினும் மனம் தளராத மருத்துவர்கள் 'லூகாஸ்-2' என்ற கருவியை உபயோகித்து அவரது மூளைக்குத் தொடர்ந்து இரத்தம் செல்லுமாறு ஏற்பாடு செய்தனர்.

அதன்பின்னர் இதய அறுவை சிகிச்சை நிபுணரான வாலி அகமர் நோயாளியினுடைய இரத்தக்குழாயில் இருந்த அடைப்பை நீக்கும் சத்திர சிகிச்சையில் ஈடுபட்டார். சத்திரசிகிச்சை வெற்றியில் முடியவே, நின்றுபோன இதயம் 42 நிமிடங்களுக்குப் பின்னர் ஒரு சிறிய அதிர்வுக்குப்பின் செயலாற்ற ஆரம்பித்தது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வாலி அகமர்,



"வநேசா மீண்டு வந்தது மிகப் பெரிய அதிசயமே. உயிர் பிழைப்பதற்கு சில மருந்துகளையும், சில அதிர்வுகளையுமே நாம் கொடுத்தோம். தற்போது மிகுந்த மகிழ்ச்சியில் இருக்கின்றோம்" என்று தெரிவித்தார்.

அதேவேளை "மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் பாதி வழியிலேயே எனக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அதன்பின்னர் நான் கண் விழித்தபோது நலமுடன் இருப்பதாக உணர்ந்தேன்" என்று தெரிவித்துள்ளார் வநேசா. (ற)

## ஆன்மிகத் தலைவர் கெய்ரோவில் தடுத்து வைப்பு

கெய்ரோ, ஒக.21
எகிப்தின் முஸ்லிம் சகோதரத்துவகட்சியின் ஆன்மிகத்தலைவர் மொஹமட் பெடிய் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

தலைநகர் கெய்ரோவிலுள்ள தொடர்மாடியொன்றில் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று அந்த நாட்டு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பதவி கவிழ்க்கப்பட்ட மொஹமட் முர்சியின் முஸ்லிம் சகோதரத்துவ கட்சி ஆதரவாளர்களின் ஆர்ப்பாட்டங்கள் முடக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# கொழும்பில் கோலாகலமாக திறக்கப்பட்டது சீனத் துறைமுகமே

## ஐ.தே.கட்சியின் எம்.பி. ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவிப்பு

கொழும்பில் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்ட துறைமுகம் கொழும்புத் துறைமுகமல்ல. அதனை சீனத் துறைமுகமென்றே கூற வேண்டும். அதன் வருமானம் அனைத்தும் சீனாவையே போய்ச் சேரும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

ராஜகிரியவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கொழும்புத் துறைமுக நிர்மாணத்துக்கு அரசு ஐந்து சதத்தையேனும் செலவழிக்கவில்லை. அனைத்தையும் சீனாவே செய்து முடித்தது. எனவே, இது கொழும்புத் துறைமுகமல்ல. சீனத்துறைமுகமென்றேஅழைக்கப்பட வேண்டும்.

அதுமட்டுமன்றி, இதன்மூலம் கிடைக்கும் வருமானம் சீனாவையே போய்ச்சேரும். அத்தோடு சீனத் தொழிலாளர்களும் இங்கு வந்து தொழில் புரியும் நிலைமை உருவாகும். இதனைத்தான் கோலாகலமாக திறந்து வைத்து கண்காட்சி நடத்தப்பட்டு மக்களை அரசு ஏமாற்றியது.



கொழும்பு துறைமுகம்

தற்போது 21ஆவது தடவையாகவும் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் பழுதடைந்துவிட்டது. ஆனால், இதனை மூடி மறைத்து திருத்துவதற்காக மூடப்பட்டுள்ளதாக அரசு பொறுப்புக் கூறுகின்றது. இவ்வாறு அரசின் அனைத்து திட்டங்களும் தோல்வி கண்டுள்ளன. எமது நாட்டு வளங்கள் அனைத்தும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன

மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாகப் பிரதி நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித் தார். பாரிய போராட்டத்தை நடத்தி ஓர் உயிரை பறிகொடுத்தே மீனவர்கள் எரிபொருள் மானியத்தை பெற்றனர்.

இன்று அதனையும் அரசு நிறுத்தப் போகின்றது.

ஏற்கெனவே மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாது வெளிநாடு செல்கின்றனர். இந்த நிலையில் மீன்படித் துறையை முற்றாக இல்லாது செய்யும் நிலைமை உருவாகியுள்ளது. வரவு- லெவுத் திட்டத்தில் அரச துறையினருக்கு ரூபா 10.000 மற்றும் தனியார் துறையினருக்கு ரூபா 3.000 சம்பள அதிகரிப்பு வழங் கப்பட வேண்டுமென்று அனைத்து தொழிற் சங்கங்களையும் இணைத்துக் கொண்டு அரசிடம் வலியுறுத் வுள்ளோம்.

நாட்டில் இன்று ஒவ்வொரு பிரஜையும் ரூபா 4 இலட்சம் கடனாளியாக்கப்பட்டுள்ளனர். அரசின் வீண் விரயங்கள் அனைத்தையும் மக்கள் தலையில் சுமத்தியுள்ளது என்றார். (எ)

# ஜனநாயக இளைஞர் அமைப்பின் இணையம் அங்குரார்ப்பணம்



ஜனநாயக மக்கள் முன்னணியின் இளைஞர் அமைப்பாக ஜனநாயக இளைஞர் இணையம் என்ற அமைப்பை முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். கொழும்பு பிரைட்டன் விடுதியில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்களும், அங்கத்தவர்களும் கலந்து கொண்டார்கள்.

இதன்படி இணையத்தின் தலைவராக சண். பிரபாகரன், செயலாளராக நிரோஷ் ஜெயபிரகாஷ், அமைப்பு செயலாளராக சஜி ஆனந்ததாஸ், நிதி செயலாளராக அருண் சிவசங்கர், செயற்குழு உறுப்பினர்களாக சுரேஷ் கண்ணா, காயத்ரி ஞானசேகரம் ஆகியோர் நியமனம் பெற்றார்கள். மேலும் கட்சி தலைமைக்கும், இணையத்துக்கும் இடையிலான இணைப்பாளராக ஜூலியன் ஜெயரட்ணராஜா நியமிக்கப்பட்டார்.

கட்சிக்கும், தமிழ் மக்களின் அரசியல், சமூக தேசிய பயணத்துக்கும் ஜனநாயக இளைஞர் இணையம் புதிய இரத்தம் பாய்ச்ச வேண்டும் எனவும், நாடு முழுக்கவும், புலம் பெயர்ந்தும் வாழ்கின்ற இளைய சகோதரர்களும், சகோதரிகளும் இந்த இளையோர் இணையத்தில் இணைந்து கொள்ள வேண்டும் எனவும் அங்குராப்பண வைபவத்தில் உரையாற்றிய கட்சி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார். (எ)

# தொலைக்காட்சி நிகழ்ச்சி சிறுவனின் உயிரைப் பறித்தது

கொழும்பு, ஒக.21

தொலைக்காட்சியில் நிகழ்ச்சி ஒன்றை பார்த்தப் பின்னர், அந்த தொலைக்காட்சியில் இடம்பெற்ற சம்பவத்தை போல் செய்து பார்த்த 11 வயது முஸ்லிம் சிறுவன் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் காலி டக்கியவத்தை பகுதியில் இடம்பெற்றது.

தொலைக்காட்சியில் நிகழ்ச்சியில் பார்த்த சம்பவத்தை போல் இந்த சிறுவன் செய்து பார்த்துள்ளார்.

> தொலைக்காட்சியில் நிகழ்ச்சியில் பார்த்த சம்பவத்தை போல் இந்த சிறுவன் செய்து பார்த்துள்ளார்.

உயிரிழந்த சிறுவனின் தாய் வெளிநாட்டில் தொழில் புரிந்து வருகிறார். சம்பவம் நடந்த போது தந்தை வேலைக்கு சென்றிருந்தாகவும் வீட்டில் சகோதரனும் சிறுவனுமே இருந்துள்ளனர்.

ரமழான் மாதத்தில் முஸ்லிம் குடும்பங்களின் வீடுகளில் சிறுவர்கள் விளையாடுவதற்காக ஊஞ்சல் அமைக்கப்படுவது வழக்கம்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியை பார்த்த சிறுவன் கதிரை ஒன்றை வைத்து ஊஞ்சல் மீது ஏறி அதில் இருந்த சேலை துண்டை கழுத்தில் இட்டுக் கொண்டு குதித்துள்ளார். அந்த சேலை சிறுவனின் கழுத்தை இறுக்கியதில் இந்தச் சாவு இடம்பெற்றுள்ளது. (எ)

# முன்னாள் பிரதி அமைச்சரின் மகன் உள்ளிட்ட மூவர் கைது



முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவரின் மகன் உட்பட மூவர் மிரிஹான பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி, நுகேகொடை உள்ளிட்ட பல பிரதேசங்களில் பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவங்களுடன் இவர்களுக்கு தொடர்பு உள்ளமை தெரியவந்துள்ளதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

சந்தேகநபர்களிடம் இருந்து மூன்று துப்பாக்கிகளும் மீட்கப்பட்டுள்ளன. கொழும்பு தெற்கு பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் சுமித் எதிரிசிங்கவின் வழிகாட்டலின் கீழ் செயற்பட்ட பொலிஸ் குழுவினால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் பிரதி அமைச்சரின் மகன் கண்டியில் உதவி தோட்ட அதிகாரியாகச் செயற்பட்டு வந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (எ)

# விவசாய துறையை அபிவிருத்தி செய்ய ஐ.நா. அமைப்பு முன்வந்துள்ளது

கொழும்பு,ஒக. 21

விவசாயத்துறையில் பீடைநாசினிப் பயன்பாட்டின் அபாயத்தை முகாமைத்துவப்படுத்தல் மற்றும் வடமாகாணத்தில் நிலக்கடலைச் செய்கையை முக்கியத்துவம் பெறச் செய்தல் தொடர்பான அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவுவதற்கு ஐ.நா. அமைப்பின் உணவுகள் மற்றும் விவசாய அமைப்பு முன்வந்துள்ளது.

இந்த அமைப்பின் இலங்கைக்கான புதிய பிரதிநிதி திருமதி கெத் எஸ்.கிரிங்பொய் விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தனாவுக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பில் இந்த விடயம் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

வடமாகாணத்து நிலக்கடலை உற்பத்தியின் பலாபலன்களை ஏனைய மாகாணங்களுக்கும் கிடைப்பதற்கான அபிவிருத்தித் திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கும் முன்வந்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் உணவுகள் மற்றும் விவசாய அமைப்பின் உபதலைவர் பதவி இலங்கையின் விவசாயத்துறை அமைச்சருக்குக் கிடைக்கப்பெற்றதால் எதிர்காலத்தில் இலங்கையின் விவசாயத் துறையில் முன்னேற்றம் காணப்படும் எனவும் திருமதி கிரிங்பொய் மேலும் தெரிவித்தார். (எ-22)

# இலங்கையில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பு



இலங்கையில்எச்.ஐ.வி தொற்று அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உலகில் எச்.ஐ.வீ. தொற்று அதிகமாக பரவி வருகின்ற 11 நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குகிறது. பாதுகாப்பற்ற உடலுறவு, அதிகபோதைப் பொருள் பாவனை, ஓரினச் சேர்க்கை போன்ற காரணங்களால் இந்த எச்.ஐ.வி. தாக்கம் அதிகரித்து காணப்படுவதாக, தேசிய பால் நோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சிறிர லியனகே தெரிவித்துள்ளார். குறிப்பாக இலங்கையின் கொழும்பு மாவட்டதிலேயே இவ்வாறு அதிக எச்.ஐ.வி பாது காப்புகள் காணப்படுகிறது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையின் நிலைமை மோசமாக இருப்பதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார். (எ)

## மரண அறிவித்தல்

### செல்வி நந்தாகினி சிதம்பரப்பிள்ளை

(ஊழியர் ,கோசாலா லேணர்ஸ், சாவகச்சேரி)



கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்வி நந்தாகினி சிதம்பரப்பிள்ளை நேற்று முன்தினம் (19.08.2013) திங்கட் கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு சிதம்பரப்பிள்ளை -சிவபாக்கியம் தம்பதியரின் ஏகபுத்திரியும், பிரதீபனின் (டோகா) ஆசைச்சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (21.08.2013) புதன் கிழமை மு.ப. 10.00மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வயல்,
சாவகச்சேரி.

தகவல்:
ந.பிரதீபன்
(மகன்)

## வளர்மதியின் கண்ணீர் அஞ்சலி



எமது கழக மூத்த தலைவர் திரு. செ.செல்வராசா (நாதன்) கழக உறுப்பினர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கழக உறுப்பினர் திரு.இளங்கோவன் அவர்களின் பாசமிகு தந்தையுமாகிய

### செ.இளமுருகன்

அவர்கள் கடந்த 18.08.2013 அன்று காலமானதையிட்டு எமது கழகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் வீதி,
கொக்குவில்.

(ச/11144) (23-14-16)

வளர்மதி முன்னேற்றக் கழகமும்
சனசமூக நிலையமும்.

## மரண அறிவித்தல்

### தனபாலசிங்கம் நக்கீரன்



தெல்லிப்பழை வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்பிடமாகவும், தற்போது தெல்லிப்பழை ஆனைக்குட்டி மதவடி ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் நக்கீரன் நேற்று (20.08.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் தனபாலசிங்கம்-சுமித்திராதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கண்ணையா மற்றும் தனலச்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், கிருஷ்ணவேணியின் அன்புக் கணவரும், ஆதிரை, அகலிகை, அபிமன்யு, அருள்மொழிவர்மன், அனந்தராமன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரகுமாரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2013) புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்குட்டி ஒழுங்கை,
தெல்லிப்பழை.

(39041) (10,10)

தகவல்:
குடும்பத்தினர்.

# மொழி ரீதியாகப் பாதிப்படையும் தமிழ் மொழி மூல பட்டதாரிகள்

யாழ்ப்பாணம், ஓக.21
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ்மொழி மூல பட்டதாரிகளை வெளி மாகாணங்களுக்கு இலங்கை நிர்வாக சேவை தரம்III பதவிக்கு நியமனங்கள் வழங்கப்பட்டதால் நியமனம் பெற்றவர்கள் மொழி ரீதியாக பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிமாகாணங்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டமை ஏனைய பெரும்பான்மை இனத்தவர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நியமிப்பதற்கான உத்தியாகவே கருதப்படுகிறது.

இந்த நிலையில் இலங்கை நிர்வாக சேவை தரம் III பதவிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து 49 பேர் தெரிவு செய்யப்பட்டு விசேட போட்டிப் பரீட்சையில் இருந்து நேர்முகப் பரீட்சை ஊடாக 43 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கடந்த வாரம் அலரி மாளிகையில் வைத்து நியமனம் வழங்கப்பட்டபோதே வெளி மாகாணங்களுக்கு நியமனம் கிடைக்கப்பெற்றமை தெரியவந்தது.

எனினும் வழங்கப்பட்ட நியமனங்கள் பெரும்பாலானவை சிங்களப் பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதால் தமிழ் மொழி மூலப் பட்டதாரிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

தமிழ்மொழிப் பிரதேசத்துக்கென தெரிவு செய்யப்பட்டவர்கள் சிங்கள மொழிப் பிரதே சங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களால் கேள்வி எழுப்பியபோதும் பொது நிர்வாக அமைச்சு வெளிப்படையாக எந்தவித அறிவித்தலையும் வழங்கவில்லை.

அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மை இனத்தவரை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு நியமிப்பதற்கு வசதியாகவே எந்தவித அறிவித்தலையும் வழங்காமல் நியமனம் வழங்கியுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (வ-14-11)

நல்லூர் முத்திரைச் சந்தி பூங்காவில்

## இளைஞர் கூட்டம் அட்டகாசம்



யாழ்ப்பாணம், ஓக. 21
விடுதலைப்புலிகளின் காலத்தில் கிட்டுப் பூங்கா என அழைக்கப்பட்ட நல்லூர் முத்திரைச் சந்தியிலுள்ள பூங்காவில் அண்மைக் காலமாக இளைஞர்களின் கேளிக்கை விடுதியாக மாறி வருவதாக அந்தப் பகுதி மக்கள் பலரும் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பூங்காவில் காலம் நேரம் பாராது மதுப் போத்தல்களோடு ஒன்றுகூடும் இளைஞர் குழுக்கள் பகிரங்கமாக மது அருந்துகின்றனர். போதை தலைக்கேறியதும் மேலாடைகளைக் களைந்துவிட்டு கூத்தாடுகின்றனர்.

வீதியால் செல்லும் பெண்களைச் சீண்டுகின்றனர். தகாத வார்த்தையிலும் பேசுகின்றனர்.

இதேவேளை இது சம்பந்தமாக யாராவது நியாயம் கேட்கச் சென்றால் வெற்று மதுப் போத்தல்களைக் காட்டி அச்சுறுத்தப்படுவதாகவும் இதனால் தற்போது இங்கு நல்லூர் உற்சவத்தையும் மறந்து இவர்களின் அட்டகாசம் தீவிரமடைந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

எனவே, இந்த விடயத்தில் சமூக ஒழுங்கைக் கடைப்பிடிக்கும் பொலிஸாரும் சமூக ஆர்வலர்களும் உடனடி நடவடிக்கை எடுத்து இந்த அடாவடித்தனத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். ஒ-288)

# சிறுவர் கிராம கட்டடத்தின் திறப்பு விழா வெள்ளியன்று

யாழ்.நாயன்மார்கட்டில்



கொழும்புத்துறை, ஓக.21
யாழ்.நாயன்மார்கட்டில் அமைக்கப்பட்ட எஸ்.ஓ.எஸ். நிறுவனத்தின் சிறுவர் கிராம கட்டடப் பணிகள் பூர்த்தியடைந்ததை அடுத்து சம்பிரதாயபூர்வ திறப்பு விழா நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறும் புதிய கட்டடத் திறப்பு விழாவில் வடமாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் எஸ்.விஸ்வரூபன் கலந்துகொள்வார்.

உலகளாவிய ரீதியில் இயங்கி வரும் எஸ்.ஓ.எஸ். அமைப்பால் நிறுவப்பட்டுள்ள சிறுவர் கிராமத்தில் கைவிடப்பட்ட பெற்றோரை இழந்த ஆதரவற்ற சிறுவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு அவர்களுக்குரிய சுய வாழ்வு ஆதாரத்துக்குரிய அனைத்து வசதிகளும் வழங்கப்படுகின்றது.

தற்போது இருபாலை, நக்கா வீதி, அரியாலை போன்ற இடங்களில் தற்காலிகமாக இயங்கி வந்த இல்லங்களைச் சேர்ந்த 82 பேர் புதிய கட்டடத்துக்கு மாற்றப்பட்டு அனைத்து வசதிகளுடனும் பராமரிக்கப்படவுள்ளதாக சிறுவர் இல்ல முகாமையாளர் எஸ்.கிருஷ்ணன் தெரிவித்தார்.

சகல வசதிகளுடன் கூடிய 10 இற்கும் மேற்பட்ட வீடுகள், நூலகம், விளையாட்டு வசதிகள், கணினி நிலையம், கல்வி வசதிகள் எனப் பல்வேறு அடிப்படை வசதிகளும் இந்தச் சிறுவர் கிராமத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-135)

## ஒளிராதுள்ள வீதி மின்விளக்குகள்



கொழும்புத்துறை, ஓக. 21
கொழும்புத்துறை வளன்புரம் முதலாம் ஒழுங்கையில் பொருத்தப்பட்டிருக்கும் வீதி மின் விளக்குகள் அனைத்தும் பழுதடைந்து ஒளிராது காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதிகளில் இரவு நேரத்தில் திருடர்களின் நடமாட்டம் உள்ளமையால் இருள் சூழ்ந்த இந்த வீதிப் பகுதியில் வசிக்கும் மக்கள் அச்சத்துடன் உள்ளனர்.

இனிவரும் மழை காலங்களில் இந்தப் பகுதி மக்கள் இரவு வேளைகளில் அவசர போக்குவரத்தை மேற்கொள்ள வசதியாக மின் விளக்குகளை சீரமைத்துத் தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர். (வ-135)



கிளாலி கடற்கரைப் பகுதியில் உள்ள வயல் நிலங்களில் கடல் நீர் உட்புகாதவாறு யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் பற்றிக்கல் அக்சன் நிறுவனத்தினால் மண் அணைகள் அமைக்கப்பட்டுவருவதைக் காணலாம். (ஓ-23)

## பிற்போடப்பட்டன உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 21
வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளால் நடத்தப்படவிருந்த உள்ளூராட்சி வார நிகழ்வுகள் பிற்போடப் பட்டுள்ளதாக மாகாண உள்ளூராட்சி ஆணை யாளர் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மட்டத்திலான நாடு முழுவதும் செயற்படுத் தப்படும் உள்ளூராட்சி வார வேலைத் திட்டங்கள் ஒக்ரோ பர் 15 தொடக்கம் 23 ஆம் திகதி வரை நடத்த திட்டமிடப் பட்டது.

நாட்டில் உள்ள மூன்று மாகாணங்களில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ள தால் மன்றங்களின் தவிசாளர்கள் அவற்றில் முழுமையாக ஈடுபடவுள்ளனர். எனவே உள்ளூராட்சி வாரத்தினை பிற்போடுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதன் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளூராட்சி வார நிகழ்வுகளை ஒக்ரோபர் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## சாவகச்சேரி நகர சபை அலுவலகத்தின் தொலைபேசி இலக்கங்கள்

தென்மராட்சி, ஓக. 21
சாவகச்சேரி நகர சபை அலுவலகத்துக்கு புதிய தொலைபேசி இலக்கங்கள் வழங்கப் பட்டுள்ளன.

இதன் பிரகாரம் அலுவலகத்துக்கு 021 227 0041 இலக்கமும் , தலைவருக்கு 021 227 0498 இலக்கமும், நிர்வாக அலுவலருக்கு 021 227 0234 இலக்கமும், பொதுசன தொடர்பு அதிகாரிக்கு 021 227 0806 இலக்கமும், தொலைநகலுக்கு 021 227 0079 இலக்கமும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# மின் விநியோகத்துக்கு தடையான மரக்கிளைகள் வெட்டி அகற்றல்

தென்மராட்சி, ஓக. 21
சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மின் விநியோகத்துக்குத் தடையாக உள்ள மரக்கிளைகள் மின்சார சபை ஊழியர்களால் வெட்டப்பட்டு வருகின்றன.

மழை காலம் அண்மித்துள்ளதால் குடியிருப்பாளர்கள் தமது காணி வேலிகளில் உள்ள மரக்கிளைகளை வெட்டி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மின்சார சபையினரால் வெட்டி வீதிகளில் வீழ்த்தப்படும் மரக்கிளைகளை அப்புறப்படுத்தி உதவுமாறும் நகரசபை உறுப்பினரும் சுகாதாரக் குழுத் தலைவருமான த.சுதர்சன் அறிவித்துள்ளார்.

வீதியோரங்களில் வீழ்த்தப்பட்டுள்ள மரக்கிளைகளை அப்புறப்படுத்தும் பணியில் நகர சபை ஊழியர்களை முழுமையாகப் பயன்படுத்துவதால் நகர சபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுத்திகரிப்புப் பணிகள் தாமதமடைவதால் சுகாதாரச் சீர்கேடு இடம்பெற வாய்ப் புக்கள் உள்ளன. இதனால் வரியிறுப்பாளர்களை நகர சபையுடன் ஒத்துழைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (வ-9)



# விரைவில் புனரமைப்புக் காணும் வவுணதீவு அடைச்சகல்குளம்

மட்டக்களப்பு, ஓக.21
மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேசத்துக்குட்பட்ட விவசாயிகளின் நன்மை கருதி அடைச்சகல்குளம் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.
மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் பழமைவாய்ந்த குளங்களில் ஒன்றாகக் கருதப்படும் அடைச்சகல்குளம் கடந்த 30 வருடங்களாக எதுவித புனரமைப்பும் செய்யப்படாத நிலையிலேயே இருந்துவந்தது.
இந்த குளத்தின் மூலம் நீர் ஏந்து காலங்களில் சுமார் 200 ஏக்கருக்கு மேல் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
குளத்தைப் புனரமைத்து தருமாறு இப்பிரதேச விவசாயிகள் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் கமநல அபிவிருத்தி, விவசாயத்துறை அமைச்சால் குறித்த குளம் புனரமைக்கப்படவுள்ளது.
வவுணதீவு பிரதேசத்தில் சுமார் 12 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை காணிகள் உள்ளதுடன் நீர்பற்றாக்குறை காரணமாக சுமார் 1000 ஏக்கரிலேயே நெற்செய்கைகள் செய்கை பண்ணப்படுகின்றன.
குறித்த குளம் புனரமைப்பு செய்யப்படுவதன் மூலம் சுமார் 1000 ஏக்கரில் நெற்செய்கை பண்ண முடியும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

வவுணதீவு அடைச்சகல்குளம்



குறித்த குளத்தின் புனமைப்பு பணிகள் எதிர்வரும் மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மீள்குடியேற்ற பிரதிய மைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.
அடைச்சகல் குளத்தினை ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்ட பிரதியமைச்சர் அந்த குளத்தை புனரமைப்பது குறித்து அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார். (வ)

## விதவைகளுக்கு விழிப்புணர்வு நிகழ்வு

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் செயலாளர் பிரிவிலுள்ள பாலத்தடிச்சேனை கிராம விதவைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறும்.
முதல் தடவையாக மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கமும் பாரதிபுரம் பாரதி சிறுவர் நலன்புரி சங்கமும் இணைந்து நடத்தவுள்ளனர்.

## மரக்குற்றிகள் பறிமுதல்

சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்வதற்கு எடுத்து வரப்பட்ட ஒருதொகுதி பெறுமதி வாய்ந்த முதிரை மரக் குற்றிகளைகைப்பற்றியுள்ளபொலிஸார். சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவரை கைது செய்துள்ளனர்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஓமடியாமடு வனப்பகுதியில் ஞாயிற்றுக் கிழமை இரவு இந்த முதிரை மரக்குற்றிகளை கைப் பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவரை கைது செய்துள்ளதாகவும் வாகரை பொலிஸார் தெரிவித்தனர். (வ)

## ஆலயப் பெருந் திருவிழா

திருகோணமலை, ஓக. 21
திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழா இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 4ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமைமணையாவெளிசமுத்திரக் கரையில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ-40)

# நில அளவைப் பணிகள் இடை நிறுத்தம்

## விகாரைக்கு காணி வழங்க முயற்சியா?



திருகோணமலை, ஓக.21
புல்மோட்டை பிரதேசத்தில் அரச நில அளவையாளர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் நில அளவைகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவு திருகோணமலை மாவட்டச் செயலாளர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வாவால் குச்சவெளி பிரதேச செயலாளருக்கு விடுக்கப்பட்டுள்ளது.
புல்மோட்டை பிரதேசத்தின் 14 ஆம் கட்டை அரிசி மலை பகுதியைச் சுற்றி உள்ள சுமார் 500 ஏக்கர் காணியை நாக விகாரைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதற்கான நில அளவை அரச நில அளவை யாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வருகின்றது. இதன் காரணமாக பிரதேச மக்கள் தங்களது குடியிருப்புகள் பறிபோகும் என்று அஞ்சுகின்றனர்.
இந்தவிடயமாககிழக்குமாகாண சபை உறுப்பினர் ஆர்.எம். அன்வரின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டது. இது தொடர்பாக மாவட்டச் செயலாளருக்கு

**புல்மோட்டை பிரதேசத்தின் 14 ஆம் கட்டை அரிசி மலை பகுதியைச் சுற்றி உள்ள சுமார் 500 ஏக்கர் காணியை நாக விகாரைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது**

கடிதம் மூலம் முறைப்பாடு ஒன்றை அவர் மேற்கொண்டிருந்தார். இந்த காணி நில அளவை சம்பந்தமாக நேற்று முன்தினம்திங்கட்கிழமைமாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.
மாவட்ட செயலாளர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்த கலந்துரையாடலில் குச்சவெளி பிரதேச செயலாளர் உமா மகேஸ்வரன், பிரதேச சபை தலைவர் அ.பி.முபாறக், பிரதேசசபை உறுப்பினர்களான சல்மான் பாரிஸ் மற்றும் எம். பதூர்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இதன்போது புல்மோட்டை பிரதேசத்தில் அரச நில அளவையை தற்காலிகமாக நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானம் குறித்து பிரதேச செயலாளருக்கு மாவட்டச் செயலாளர் கடிதம் ஒன்றையும் வழங்கியுள்ளார். இதன்பிரதிகள் ஜனாதிபதி செய லகம் மற்றும் அரச நில அளவையாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.
இந்த தடையையும் தாண்டி நில அளவை மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் வீதிக்கு இறங்கி தமது எதிர்ப்பைக் காட்டி யுள்ளனர்.
இது விடயம் தொடர்பாக மாகாண சபை உறுப்பினர்களான ரீ.எம். அன்வர், இம்ரான் மஹ்ரூப் மற்றும் ஜம்மியத்துல் உலமா சபையினர் என பலர் உயர் அதிகாரிகளிடம் பேசி காணி அளவீட்டை நிறுத்தியுள்ளனர். (வ)

# ஏறாவூர் மக்களுக்கு கிணறுகள் நிர்மாணம்

## 95 பேருக்கு கையளிப்பு நிகழ்வு



ஏறாவூர், ஓக.21
ஏறாவூர், மிச் நகர் கிராமத்தில் கடந்த கால வன்முறைகளினால் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு கிணறுகள் இலவசமாக நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் முதற்கட்டமாக 95 கிணறுகளைப் பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. ஏறாவூர் நகர பிதாவான அலிஸாஹிர் மௌலானாவின் ஏற்பாட்டில் தார்-அல்-பிர் அஸோஸியேசன் நிறுவனத்தின் நிதியளிப்பில் இந்தக் கிணறுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. (வ)

# விவசாயிகளின் பிரச்சினை தொடர்பில் ஆராயப்பட்டன



மட்டக்களப்பு, ஓக.21
மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பல்வேறு விடயங்கள் எதிர்கால விவசாய அபிவிருத்திகள்தொடர்பில் ஆராயப்பட்டன.
மாவட்ட அரச அதிபரும், மாவட்டச் செயலாளருமான திருமதி பி.எஸ். எம். சார்ள்ஸ் தலைமையில் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.
மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அரச அதிபருடன் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட விவசாயப் பணிப்பா ளர் பி.உலகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
இதன் போது, 2013 - 2014 பெரும்போக பயிர்ச்செய்கை ஆரம்பக்கட்டங்கள் தொடர்பிலும் திகதிகள் அறிவிக்கப்பட்டன. (வ)

# தமண பிரதேச சபைக்கு புதிய கட்டடத் தொகுதி



அம்பாறை, தமண பிரதேச சபைக்கான புதிய கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது. புறநெகும திட்டத்தின் கீழ் 37 மில்லியன் ரூபா செலவிலேயே புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை தமண பிரதேச சபையின் பிரதி தவிசாளர் வெனுர பிரதீத் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சர் [illegible]லவீர திசா நாயக்க, எம்.எஸ். உதுமாலெப்பை மற்றும் மாகாண சபை உறுப்பினர் டபிள்யூ.ஏ.டி. வீரசிங்க, உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கடலில் அள்ளுண்டு சென்ற இருவர் காப்பாற்றப்பட்டனர்

திருகோணமலை, நிலா வெளி பகுதியில் கடல் அலையில் அள்ளுண்டு செல்லப்பட்ட இருவர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.
நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் கடலில் நீராடச் சென்ற இருவரே கடலலையோடு அள்ளுண்டு சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது பொலிஸ் உயிர் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குறித்த இருவரையும் காப்பாற்றியுள்ளனர்.
அவர்கள் இருவரும் மஹியங்கனையில் இருந்து திருகோணமலைக்கு சுற்றுலா பயணம் சென்றிருந்த குழுவைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்துள்ளது. (வ)

## பால்பொருள் கைத்தொழிலுக்கு பல மில்லியன் டொலர் நட்டம்

கொழும்பு, ஓக.21
சீனாவுக்கு அளவுக்கு அதிமான நைதரேற்றுடன் கூடிய பால் உற்பத்தி பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டமை தெரியவந்ததை தொடர்ந்து நியூசிலாந்தின் பல மில்லியன் டொலர் பால்பொருள் கைத்தொழிலுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.



**நியூசிலாந்தின் முதல் நிலை கைத் தொழில் அமைச்சும் இந்த பிரச் சினையின் மைய நிறுவனமான வெஸ்டலேன் மில்க் நிறுவனமும் உற்பத்தி யான லக்ரோபெரின் தொடர் பாக அச்சப்பட வேண்டிய தில்லை என உறுதிப்பட தெரிவித்துள்ளன.**

நியூசிலாந்தின் முதல் நிலை கைத்தொழில் அமைச்சும் இந்த பிரச்சினையின் மைய நிறுவனமான வெஸ்டலேன் மில்க் நிறுவனமும் உற்பத்தியான லக்ரோபெரின் தொடர்பாக அச்சப்பட வேண்டியதில்லை என உறுதிப்பட தெரிவித்துள்ளன.

பால் தயாரிப்பு இயந்திரங்களில் முழுமையாக கழுவப்படாது தங்கியிருந்த சுத்திகரிப்பு இரசாயனங்கள் காரணமாகவே இது ஏற்பட்டது எனவும் இது ஒரு தனி நிகழ்வு எனவும் பிரதம நிறைவேற்று அதிகாரி றொட் குயின் தெரிவித்தார்.

லக்ரோபெரின் வேறு நுகர்வுப் பொருள்களில் ஒரு சிறிதளவே சேர்க்கப்படுவதனால் சீன நுகர்வோருக்கு இதனால் ஏற்படக்கூடிய பாதிப்பு எதுவுமில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## புத்தரின் புனித தந்தத்தை கொண்டுவர சீன விகாராதிபதியிடம் வேண்டுகோள்

கொழும்பு, ஓக.21
சீனாவின் பீஜிங் நகர விகாரையில் வைக்கப்பட்டுள்ள புத்தரின் புனித தந்தத்தை இலங்கைக்கு கொண்டு வருமாறு பீஜிங் நகர விகாராபதி வண ஷீ வே ஷங்க் தேரரிடம் பிரதமர் டி.எம்.ஜயரத்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரதமரின் வேண்டுகோளுக்கு விகாராதிபதி இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள வண ஷீ வே ஷங்க் தேரர் உட்பட்ட தூதுக் குழுவை கம்பளை அம்புலுவாவையில் வைத்து பிரதமர் டீ.எம்.ஜயரத்ன சந்தித்த போது இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.



இங்கு கருத்து தெரிவித்த பிரதமர்; இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் பல நூற்றாண்டு காலமாக நல்லுறவு நிலவி வருகிறது.

சமய நிகழ்வுகள் அந்நல்லுறவை மேலும் வலுப்படுத்தும்.

சீன ஜனாதிபதியின் பரிந்துரையின் பேரில் புத்தரின் புனித தந்தம் வெளிநாடுகளில் கண்காட்சிக்கு வழங்கும் சம்பிரதாயம் உள்ளது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் இலங்கைக்கு புனித தந்தத்தை வரவழைத்து கண்காட்சி ஒன்றை நடத்த அனுமதிப்பதாக விகாராதிபதி இதன்போது தெரிவித்தார் என பிரதமர் மேலும் தெரிவித்தார். (எ)



ஹோமாகமவில் கைவிடப்பட்ட 6 மற்றும் 8 வயதுடைய சிறுமிகள் இருவரை ஹோமாகம பொலிஸார் மீட்டுள்ளனர்.

## பிக்கு வேடத்தில் விஹாரைகளில் திருட்டில் ஈடுபட்டவர் கைது

கொழும்பு, ஓக.21
பிக்கு வேடமிட்டு விஹாரைகளுக்குள் சென்று திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட ஒருவரை மாத்தளை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

மாத்தளை லக்கல பிரதேசத்தில் வைத்தே குறித்த நபர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் சில காலம் பிக்குவாக இருந்துள்ளார். அதன் பின்னர் துறவறத்தை கைவிட்டுவிட்டு குடும்ப வாழ்க்கையில் நுழைந்ததாக பொலிஸாரின் விாரணையின் போது தெரியவந்துள்ளது.

மாத்தளை பொல்கொடுவ பிரதேசத்தில் விஹாரை ஒன்றில் 50,000 ரூபா பணம் மற்றும் டிஜிற்றல் கமரா ஒன்று திருடிய சம்பவம் தொடர்பாக இச் சந்தேக நபரை கைது செய்ததாக தெரிவித்த மாத்தளை பொலிஸார் சம்பவம் தொடர்பில் விாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)


## பஸ் கட்டண அதிகரிப்பை தடுக்க அமைச்சரவை உப குழு

கொழும்பு, ஓக.21
அரசின் அனுமதியின்றி பஸ் கட்டணங்களை அதிகரிக்கப் போவதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் அறிவித்துள்ள நிலையில், அதனை தடுக்கும் வகையிலான ஓர் அமைச்சரவை பத்திரத்தை தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் சீ.பி.ரத்னாயக்க சமர்ப்பித்துள்ளார்.

இந்த பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காக அமைச்சர்கள் மட்டத்திலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் அமைச்சர்களான சீ.பி.ரத்னாயக்க, குமார வெல்கம, தினேஷ் குணவர்த்தன, காமினி லொக்குகே மற்றும் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

மாகாண சபை தேர்தல் முடியும் வரை பஸ் கட்டணத்தை தாம் உயர்த்துவதை தடுக்கவே இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

அடுத்த நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக சகல தனியார் பஸ் சங்கங்களின் பிரதிநிதிகளும் கூடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ)



## 14 நாள்களுக்குள் பொருள்களை அகற்றும்

கொழும்பு, ஓக.21
நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம் பொன்ரேறா நிறுவனம் தனது உற்பத்தி பொருள்களை கடைகளிலிருந்து 14 நாள்களுக்குள் அகற்றுவதை உறுதிசெய்யும் என்று நுகர்வோர் அதிகார சபை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் வழங்கப்பட்ட கட்டளையைத் தொடர்ந்து, சகல பொன்ரேறா உற்பத்திகளும் கடைகளிலிருந்து மீளப்பெறப்படுவதைக் கண்காணித்து வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் றுமி மர்க் தெரிவித்துள்ளார்.

பொன்ரேறா நிறுவனத்தினர் சகல கடைகளிலிருந்தும் தமது உற்பத்தி பொருள்களை அகற்றியே தீரவேண்டும். இதை 24 மணிநேரத்தில் செய்யமுடியாது. பொருள்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு காலம் தேவை. அவர்கள் அதிசயம் புரிவர் என்று எதிர்பார்க்க முடியாது.

நீதிமன்ற கட்டளையின் மூலம் பொன்ரேறா பொருள்களை விளம்பரப்படுத்தல் தடுக்கப்பட்டுள்ளது. ஏதாவது விளம்பரப்படுத்தல் காணப்படின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் நுகர்வோர் விவகார அதிகார சபையும் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## பொலிஸ்காரரைத் தாக்கிய சிப்பாய்க்கு அபராதம்

கொழும்பு, ஓக.21
தனது காதலியின் முன்னிலையில் ரகளையில் ஈடுபட்டதுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைத் தாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஹுனுப்பிட்டிய, கங்காராம பகுதியில் வைத்தே இராணுவ வீரர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைத் தாக்கியுள்ளார்.

தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு 25 ஆயிரம் ரூபாவை நஷ்டஈடாக செலுத்துமாறு கோட்டை பிரதான நீதிவான் திலின கமகே நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

நஷ்டஈட்டை பகுதி பகுதியாக வழங்குமாறு இராணுவச் சிப்பாய் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கங்காராமவிற்கு அருகில் விசேட கடமையில் ஈடுபட்டிருந்தபோது அதற்கு அண்மையில் மூன்று ஜோடி காதலர்கள் மிக மோசமான முறையில் நடந்துகொண்டதாகவும் அதனைக் கண்ட கான்ஸ்டபிள் அந்த ஜோடியினரை எச்சரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போதே இராணுவச் சிப்பாய் என்று சொல்லப்படுகின்ற குறித்த நபர் பொலிஸ் கான்ஸ்டபிளை தான் இரா ணுவ வீரர் என்று எச்சரித்ததுடன் அவரைத் தாக்கியதாக கான்ஸ்டபிள் தெரிவித்துள்ளார். (எ)

## தொடர்ந்தும் அச்சத்துடனேயே வெலிவேரிய மக்கள்

கொழும்பு, ஓக.21
வெலிவேரிய மக்கள் தற்போதும் அச்சத்துடனேயே தமது வீடுகளில் வசித்து வருகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும தெரிவித்தார்.

ராஜகிரியவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**தமக்கு சுத்த மான குடிதண்ணீர் தேவையென அந்த மக்கள் 2011 ஆம் ஆண்டு முதலே தெரிவித்து வந்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெலிவேரிய ரத்துபஸ்வலவில் இடம்பெற்ற சம்பவம் மிகவும் மிலேச்சத்தனமான சம்பவம். தமக்கு சுத்தமான குடிதண்ணீர் தேவையென அந்த மக்கள் 2011 ஆம் ஆண்டு முதலே தெரிவித்து வந்துள்ளனர். அன்றே இதற்குரிய பதில் கிடைத்திருந்தால் இந்தக் கொடூரமான சம்பவம் இடம்பெற்றிருக்க வாய்ப்பிருக்காது.

உகண்டா மக்களுக்கு தண்ணீர் இல்லை என்றவுடன் இங்கிருந்து நிதி வழங்கப்பட்டு தண்ணீர் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. ஆனால் தமக்கு வாக்களித்த மக்களுக்கு துப்பாக்கியால் சன்மானம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அந்த மக்கள் அச்சத்துடன் தமது வாழ்க்கையை முன்னெடுக்க வேண்டிய நிலையில் உள்ளனர். பொய் மற்றும் கற்பனைக் கதைகளை கூறி திசைதிருப்ப இடமளிக்க முடியாது. அரசு சுயாதீன விசாரணையை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கும் வரை நாம் போராட்டங்களை முன்னெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்களின் உரிமைகள் குறித்த அரச 'தத்துவம்' மாறுமா என்ன?...!

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை பலவீனப்படுத்தக்கூடாது. அது குறித்து இலங்கை அரசு உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். அதனை முன்னோக்கி நகர்த்த வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கு உண்டு.

தம்மைச் சந்தித்துப் பேசிய இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் மேற்கண்டவாறு இடித்துரைத்து இருக்கிறார் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் முடிந்த பின்னர், பதின்மூன்றாவது திருத்தத்தை அரசமைப்பு சட்டப் புத்தகத்தில் இருந்து நீக்க கங்கணம் கட்டி நிற்கிறது இலங்கை அரசு.

இனப்பிரச்சினைக்கு, அது தொடர்பான பிரதான விவகாரங்களைப் பேசித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறிக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அரசு-தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்கள் முறிந்து போனமை தெரிந்ததே.

உருப்படியான யோசனை எதனையும் முன்வைக்காமல், வெறுமனே காலத்தைக் கடத்தும் அரசின் குள்ளநரித் தனத்தைச் சகிக்க இயலாமல், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அந்தப் பேச்சுக்களில் தொடர்ந்து கலந்து கொள்ளாமல் தூர விலகிக்கொண்டது.

அது ஒருபுறம் இருக்க, இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றைக் கண்டறிவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைப்பதற்கு அரசு தீர்மானித்தது. அதில் பங்குபற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வருந்தி அழைத்தது. ஆனால், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில், தமிழ் மக்கள் மீது அரசு வலிந்து திணிக்கும் செயற்பாட்டில் சிக்கிக் கொள்ளாமல், சமயோசிதமாகத் தப்பிக் கொண்டது கூட்டமைப்பு.

அதற்குப் படிப்பினையாக, அரசாங்கத்தின் பங்காளிகளாக உள்ள இனவாதிகளைத் தூண்டிவிட்டு, அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில், மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பிடுங்கி எடுப்பதற்குத் திட்டமிட்டது.

வடக்கு மாகாண சபைக்குத் தேர்தலை நடத்துவதற்கு முன்னர் அந்தக் கைங்கரியத்தை நிறைவேற்றும் அரசின் திட்டம் பிழைத்தது. வட மாகாணத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் (Quasi) அரைகுறை இராணுவ ஆட்சியை நீக்க வேண்டும். போர் முடிவுற்று நான்கு வருடங்கள் கழிந்த பின்னரும், ஏனைய மாகாணங்களில் இயங்கும் மாகாண சபை ஆட்சி இங்கும் வேண்டும் என்று அனைத்துலக நாடுகள் பலவும் ஓயாது கொடுத்த அழுத்தத்தினால், வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் நவம்பரில் கொழும்பில் நடைபெற உள்ள பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அழைப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் சென்ற வேளை, பதின்மூன்றாவது திருத்தத்தைக் கொழும்பு அரசு பேண வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மீண்டும் வலியுறுத்தி உள்ளார்.

தான் அமைத்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இழுத்துக் கொள்வதற்கு, இந்நாட்டு அரசு இந்தியாவின் உதவியை நாடியது தெரிந்ததே.

கடந்த மாதம் இரண்டாவது வாரத்தில் கொழும்புக்கு விஜயம் செய்த இந்திய அரசின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், தமது அரசின் நிலைப்பாட்டை இந்நாட்டு அரச தரப்பினருக்கு எடுத்து உரைத்திருந்தார்.

இலங்கையின் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்துக்காக இன்னும் பல படிகள் ஏறிச்செல்ல வேண்டி உள்ளது என்று கருத்து வெளியிட்டிருந்தார் அவர்.

இந்த நாட்டில் வாழும் அனைத்துச் சமூகங்களும் தாம் தமக்குச் சொந்தமான வீட்டில் வசிப்பதாகவும், தங்களுடைய தலைவிதியை (Destiny) தாமே நிர்ணயிப்பவர்களாகவும், சமூகத்தினதும் நாட்டினதும் வெற்றிக்குத் தமது பங்களிப்பும் உண்டு என்றும் உணர்வதற்கான சூழமைவு, அத்தியாவசியம் தேவையென்று இந்நாட்டின் அரச தலைமைத்துவத்தினருக்கு எடுத்துக் கூறியதாகவும் தெரிவித்திருந்தார். ஆனால் அவரது நிலைப்பாட்டை கொழும்புத் தலைமைகள் உள்வாங்கிக் கொண்டதற்கான எந்த அறிகுறியும் அசுகை தானும் வெளித்தெரியவில்லை.

சின்னஞ்சிறிய இலங்கையில், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்வதில் நடைமுறைப் பிரச்சினைகள் நிறையவே உண்டு. அதிகார நடைமுறை ஒன்று, நாட்டில் சகல பிரதேசங்களுக்கும் ஒரேமாதிரியாகவும், சமச்சீராகவும் இருக்க வேண்டும் -என்ற தனது நிலைப்பாட்டில் இருந்து, இரும்புப் பிடியில் இருந்து அரசு எந்த வகையான தளர்வையும் காட்டும் என்று எதிர்பார்க்க இயலாது. மேற்கண்ட தனது கோட்பாட்டில் அரசு தளர்வு எதனையும் காட்டமாட்டாது. அதற்கு அனுமதிக்காது என்பது மிகத் தெளிவாகவும் துல்லியமாகவும் தெரிகிறது அல்லவா...?

இதேவேளை-

இலங்கையும் இந்தியாவும்- இரண்டு நாடுகளின் அரசுகளும்- எமது நாட்டில் நல்லிணக்கத்தை உண்டாக்க உருப்படியான வழிதுறைகளை கையாளப்போவதில்லை என்பது, வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுற்ற பின்னரும் கனகச்சிதமாகத் தொடரும் என்று நம்பலாம்.....!

# காங்கிரஸை வீழ்த்த கூட்டணி வேண்டும்

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சோனியா காந்தியின் நிலை என்னவோ, அதுதான் காங்கிரஸின் நிலை. விலைமதிக்க முடியாத மாணிக்கத்தை இழந்துள்ளோம். அந்த இழப்பு தமிழ் மண்ணில்தான் நடந்தது. யாரால் இழந்தோம் என்பதை மக்கள் அறிவார்கள் என்று நிதி அமைச்சர் ப. சிதம்பரம் அண்மையில் உரையாற்றியுள்ளார். இதன் மூலம் ராஜீவ்காந்தி தமிழகத்தில் கொல்லப்பட்டதற்காகவே ஈழத்தமிழர்கள்அழிக்கப்பட்டனர் என நியாயப்படுத்தியதோடு. இதில் சோனியாவின் முடிவே காங்கிரஸின் முடிவு என்று கூறுகிறார். தமிழக மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவளிப்பார்கள் என்றும் கனவு காண்கிறார்.



ஈழத்தில் ஒன்றரை லட்சம் தமிழர்கள் கொல்லப்படும்போது தமிழகத்தின் 6 கோடி தமிழர்களால் வேடிக்கை மட்டும்தான் பார்க்க முடிந்தது.

ராஜீவ் காந்தி கொலையில் நடந்த சதி பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜெயின் ஆணைக்குழு தமது அறிக்கையில்; 1995 ஜூன் - ஜூலையில் சந்திரசாமியும், சுப்பிரமணியசாமியும் லண்டனுக்குப் போயிருக்கிறார்கள். இவர்களின் லண்டன் பயணத்தின் நோக்கம் குழப்பத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது. காலிஸ்தான் விடுதலைப் படையைச் சார்ந்த ஜெக்சித் சிங் சவுகான் என்பவர், அகாலிதளம் கட்சியைச் சார்ந்த சேவாதான் என்பவரிடம் ராஜீவ் காந்தியைக் கொல்லத் திட்டம் இருப்பதாக கூறி இருக்கிறார். இதை சேவாதான் என்பவர் ஜெயின் ஆணைக்குழு முன்தெரிவித்துள்ளார். லண்டனில் உள்ள சவுகான் வீட்டில் தீவிரவாதிகள் பங்கு கொண்ட கூட்டம் நடந்தது என்றும் அவர் மேலும் கூறினார். இந்த நிலையில் சவுகானை அரச தரப்பு சாட்சியாக மாற்றும்படி வலியுறுத்தவே சந்திர சாமியும், சுப்பிரமணியசாமியும் லண் டன் சென்றார்களா? என்று ஆணைக் குழு கேள்வி எழுப்பியது.

ஆணைக்குழு தனது அறிக்கையில் 8ஆவது பகுதியில் 231 ஆவது பக்கத்தில் பல தேவையான பொருத்தமுள்ள கேள்விகளுக்குச் சுப்பிரமணியசாமி பதிலளிக்க மறுத்துவிட்டதால் உண்மையைக் கண்டறிய அவர் ஒத்துழைக்கவில்லை என்று ஜெயின் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ஆதாரம் அரசியல் தரகர் சுப்பிரமணியசாமி நூல் ஆசிரியர் - விடுதலை ராஜேந்திரன்)

### ராஜீவ்காந்தி வழக்கில் ஒருபக்கச் சார்பு

மேலும் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு பின்பு விடுதலையான ரெங்கனாத் என்பவர் வீக் (ஜூன் 1998) ஆங்கில வார பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் ராஜீவ் கொலை நடப்பதற்கு 40 நாள்களுக்கு முன் புதுடில்லியில் அரித்துவார் போகும் சாலையில் உள்ள சந்திரசாமி ஆசிரமத்தில் ராஜீவ் படுகொலை வெற்றிகரமாக நடப்பதற்காக ஒரு யாகம் நடந்தது. அந்த யாகத்தைப் பார்வையிட சிவராசனை சந்திரசாமி அழைத்திருந்தார். அப்போது சிவராசனின் துப்பாக்கிக்குச் சந்திரசாமி ஆசி வழங்கினார்.

சந்திரசாமி அறை முழுவதும் தாமரை மலர்களால் குவிக்கப்பட்டிருந்தது. அடுத்த அறை முழுவதும் எலுமிச்சை பழங் களாக குவிந்துகிடந்தன. தனக்கு இந்தச் சடங்குகளில் எல்லாம் நம்பிக்கை இல்லை என்றார் சிவராசன். ராஜீவ் காந்தியை மட்டும் தனியாக சுட்டுக் கொன்றுவிட்டு தன்னால் தற்கொலை செய்துகொண்டிருக்க முடியும். ஆனால் ராஜீவ்காந்தியோடு பலரும் மடிய வேண்டும் என்றும் அப்போது தான் வெளிநாட்டிலிருந்து தனக்கு வந்து சேரவேண்டிய தொகை கிடைக்கும் என்றும் சந்திரசாமி சொன்னதாகச் சிவராசன் என்னிடம் கூறினார்.

ஒரு தலைவன் உருவாக தமிழர்கள் ஒன்றுபடப் போவதில்லை. ராஜீவ்காந்தி சாவடைந்த பிறகு மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சி நரசிம்மராவ் தலைமையில் 1991 முதல் 1996 வரை 5 ஆண்டுகள் நடைபெற்றது. மீண்டும் 2004 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தொடர்ச்சியாக 9 ஆண்டுகள் மன்மோகன் சிங் தலைமையில் காங்கிரஸ் கட்சி ஆட்சியே நடைபெறுகிறது.

சோனியா வும், சிதம்பரமும் ராஜீவ்காந்தி கொலையில் சுப்பிரமணியசாமியும் சந்திரசாமியும் எந்த அளவிற்குத் தொடர்புள்ளவர்கள் என்பதனை மத்திய புலனாய்வுத்துறை மூலம் வழக்குத் தொடர்ந்து உண்மையை அறிந்து கொள்ள ஏன் முயற்சி செய்யவில்லை? உண்மை வெளிவந்தால் பல காங்கிரஸ் கட்சி தலைவர்களே குற்றவாளிகளாக அடையாளம் காணப் படுவார்கள். அதனைத் தவிர்த்திடவே மேற்கண்ட இருவர் மீதும் வழக்குத் தொடரவில்லை.

### எழுச்சி பெற்ற மாணவர் போராட்டம்

விடுதலைப்புலிகளை அழிக்கின்றேன், தீவிரவாதத்தை ஒடுக்குகிறேன் என்ற போர்வையில் ஒன்றரை லட்சம் ஈழத் தமிழர்களை ராஜபக்ஷ கொன்று குவித்தார். இந்த இனப்படுகொலைக்கு இந்திய அரசு துணைபோனது என்பதைத் தமிழக மக்கள் தற்போது நன்கு அறிந்து கொண்டுள்ளனர். அதன் விளைவே தமிழகத்தில் மத்திய அரசுக்கு எதிரான மாணவர்கள் போராட்டம் எழுச்சிபெற்றது.

பூசணிக்காயைச் சோற்றில் மறைத்து விடலாம் என ப. சிதம்பரம் முயல்கிறார். இனிமேலும் காங்கிரசுக் கட்சியினரின் கபட நாடகம் தமிழகத்தில் வெற்றிபெறாது. தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடையும். அதனுடன் கூட்டணி அமைக்கும் கட்சிகள் சுனாமி அலைபோல் அடித்துச் செல்லப்படும்.

### வேரறுக்க இது சந்தர்ப்பம்

தமிழ் இனப் படுகொலைக்குத் துணைபோன காங்கிரஸ் கட்சியைத் தமிழகத்தில் வேரறுக்க ஒரு நல்ல வாய்ப்பு இனி நடக்கவுள்ள நாடாளுமன் றத் தேர்தலில் நமக்கு கிடைத்துள்ளது.

சிதம்பரங்களும், நாராயணசாமிகளும், ஞானதேசிகன்களும் இனி மேல் டில்லி பக்கம் தலைவைத்துப் படுக்காத நிலையைத் தமிழர்கள் உருவாக்க வேண்டும் அதற்கு ஒரே வழி நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தி.மு.க. - அ.தி.மு.க. கூட்டணி அமைய வேண்டும்.

### கூட்டணி அமையுமா?

இது காலத்தின் கட்டாயம். ஆனால் இப்படி ஒரு கூட்டணி ஏற்பட முடியுமா? என்று நீங்கள் கேட்கலாம். நீங்கள் கேட்பது உண்மை. ஆனால் இந்தக் கூட்டணியின் தத்துவமே வித்தியாசமானது. இந்தக் கூட்டணியில் தி.மு.க. அ.தி.மு.க. இணைந்து தேர்தல் பிரசாரம் செய்யத் தேவையில்லை. இரண்டு கட்சிகளின் கொடிகளும் ஒரே கம்பத்தில் பறக்கப் போவதில்லை. தி.மு.க. அ.தி.மு.க.வுக்கு வாக்கு கேட்கப் போவதில்லை. அ.தி.மு.க., தி.மு.க.வுக்கு வாக்கு கேட்கப் போவதில்லை. இரு கட்சிகளின் தலைவர்களும் ஒரே மேடையில் தோன்றப்போவதில்லை.

### தொகுதிகளைப் பிரித்து வாக்குக் கேட்டாலே வெற்றி

பிறகு இது என்ன கூட்டணி? என்று நீங்கள் கேட்கலாம். இவர்களிடையே ஒரே ஓர் உடன்பாடு. அதாவது தி.மு.க. அ.தி.மு.க. இரு கட்சிகளும் தலா 20 தொகுதிகளைப் புதுவை உட்பட - பிரித்துக் கொள்ள வேண்டும். தி.மு.க. போட்டியிடுகின்ற தொகுதிகளில் அ.தி.மு.க. போட்டியிடாது, அ.தி.மு.க. போட்டியிடுகின்ற தொகுதிகளில் தி.மு.க. போட்டியிடாது. இதுபோன்ற ஒரு கூட்டணி இதுவரை ஏற்படவில்லை. தமிழகத்தில் இப்படி ஒரு கூட்டணி அமைய வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். ஆனால் அமையாது, காரணம் கட்சிகள் செயல்படுவது மக்களுக்காகத்தான் என்ற நிலை மாறி நீண்டகாலமாகிவிட்டது. இன்று கட்சிகள் அதன் தலைவரின் விருப்பு வெறுப்புகளின்படியே செயல்படு கின்றன. ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு மறைக்கப்பட்ட கருத்து உண்டு, அதனை மையமாக வைத்தே அவை செயல்படுகின்றன.

எனவேதான் ஈழத்தில் ஒன்றரை லட்சம் தமிழர்கள் கொல்லப்படும்போது தமிழகத்தில் 6 கோடி தமிழர்களால் வேடிக்கை மட்டும்தான் பார்க்க முடிந்தது.

உலகில் அழிந்து போகும் மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என்று மொழி ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இனம் அழிந்தால் மொழி அழிந்துபோகும். எனவேதான் ஈழத்தில் தமிழ் மொழியை அழிக்க தமிழ் இனத்தை அழித்தார் ராஜபக்ஷ. இங்கே தமிழர் தலைவர்கள் தமது சுய நலத்திற்காக தமிழினத்தை அழிக்க துணைபோன காங்கிரஸ் கட்சிக்குத் துணைபோகின்றனர்.

தமிழர்களை ஒன்றுபடுத்த ஒரு தலைவன் இல்லை.

ஒரு தலைவன் உருவாக தமிழர்கள் ஒன்றுபடப் போவதில்லை.

(நன்றி: கீற்று)

# நிலையான தீர்வைத் தந்திடு சந்நிதியானே!

கந்த தியாகராசா
கோண்டாவில் கிழக்கு.

நீண்ட பாரம்பரியமும், தமிழர் பண்பாடும் கொண்ட தமிழ் மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தது முருக வழிபாடு. இந்தக் கலியுகத்தில் வருகின்ற துன்ப துயரங்களையும் பாவங்களையும் நீக்கவல்லது கந்தன் கருணையன்றி வேறில்லை என்பது வியாசரின் அருள் வாக்கு. அதனால் தான் என்னவோ கந்தபுராண கலாசாரம் இன்றும் வாழ்கிறது. முருகனுக்கு கோயில்களுக்கு குறைவேயில்லை. அருளாட்சிக்கு அளவில்லை.

வரலாற்றுப் புகழ்மிக்க கந்தன் உறை கோயில்கள் ஈழமணித் திருநாட்டில் பலவுள. தென்னிலங்கைக் காட்டில் உருவான ஆதிகாலக் கோயில் கதிர்காமம். அந்தணர் அல்லாதோர் பூசை நடத்துகின்ற அற்புதம் நிறை ஆலயம். வனமுடை வேடர் அருளிய பூசையில் மகிழ் கதிர்காமப் பெருமாள் க்ாண் என்பது அருணகிரியார் பாடி வைத்த திருப்புகழ். வேடர் நிறைவேற்றும் பூசையை தேனும் தினை மாவும் கலந்த படையலை விரும்பி ஏற்றுள்ளவன் கதிரை மலைக்கந்தன். அந்த முருகனின் வழிபாட்டோடு வள்ளியம்மை வாழ்ந்ததாகக் கூறப்படும் கர்ண பரம்பரைக் கதையோடு புகழ் பெற்று விளங்கும் கதிர்காமக் கந்தனுக்கு ஒப்பானவன் சந்நிதி முருகன். அந்தணர் அல்லாத பூசையும் மிகவும் சிறந்த முறையில் கிரியைகள் நடைபெற்று வரினும் ஆகம முறை சாராத ஆலயமாக இந்து மாகடலும், தொண்டமானாறும் சங்கமிக்கும் புனிதம் நிறை ஆற்றங் கரையோரத்தில் குடிகொண்டு அருள் மழை பொழியும் அன்னதானக் கந்தன் சந்நிதியான்.

பொதுவாக சைவ மரபில் அநேகமாக ஊரின் பெயரையும்தலமூர்த்தியின் பெயரையும்கொண்டிலங்கும் தன்மையின. ஆனால் இங்கோ செல்வச்சந்நிதியென்று விதந்தோதுகின்றார்களேயொழிய இடத்தின் பெயரைச்சூட்டவில்லை. சந்நிதியான் என்பது காலப் பழமையும் சாலப் புதுமையும் கொண்டது. எங்களுக்கு எல்லாம் பெருஞ் செல்வமாய் திகழ்பவன் சந்நிதி வேலன். அவனை நாம் தரிசிப்பது எமக்கு என்றும் செல்வம். அதனால் தான் செல்வச் சந்நிதி என்று போற்றப்படுகின்றான்.

சின்னக் கதிர்காமம், செல்லக் கதிர்காமம், காவடிக் கந்தன், ஆற்றங்கரையான் என்னும் திருப்பெயர்களால் அலங்கரிக்கப்பட்டு வணங்கப்படும் சந்நிதி முருகனின் அருள் வீச்சும், பக்தர் ஈர்ப்புச் சக்தியும் வேறெங்கும் காண முடியாதது. நோய்க்கு மருந்தாக,பசிக்கு விருந்தாக, வைதாரையும் வாழ வைத்து, பிணியறுத்து வல்வினை நீக்கி ஆட்கொண்டருளும் சக்தி கொண்ட வேல் கருவறையில் காட்சி தருகின்றது. கருவறை வேல் பக்த கோடிகளுக்கு நம்பிக்கையின் ஒளி. அருட் பிரவாகத்தின் வடிவம். துன்பத்தை சுமந்து துயர் கொண்டு வருவார்க்கு ஆறுதல் தரும் நிழல். அந்த திடமான நம்பிக்கையோடு நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருக நெக்கு நெக்கு ஏங்கி உரை தடுமாறி, மெய் சிலிர்த்து மெய்யன்போடு சந்நிதியானைச் சரண் புகுந்தார்க்கு எந்தவித பொல்லாப்புமில்லை. வருமிடரும் நில்லாதோடும். எண்ணியவையும் ஈடேறும். அனுபூதிமான்களும் ஞானிகளும் தடம் பதித்து வாழ்ந்து போன திருவீதி மண்ணும் புனிதமானது. புண்ணியம் நிறைந்தது.

சமய சமூக கலாசார விழுமியங்களின் நிலைக்களனாக விளங்கும் இந்த ஆலயம் கந்தபுராணக் கதையோடு தொடர்புபட்டது. வீரவாகு தேவர் முருகனை வெற்றி வேண்டி வழிபட்டதாகவும்,ஐராவசு தவமியற்றி முத்தி அடைந்ததாகவும் சொல்லப்படுகின்ற ஐதீகங்களும் , ஆறுமுகனின் அற்புதங்களை வியந்தோதும் செவிவழிக் கதைகளும் சந்நிதியான் கீர்த்தியை எடுத்துரைப்பன. கதிர்காமத்தில் கதிர்காமப் பெரியாரிடம் கையளித்த வேலினைப் பிரதிஷ்டை செய்து பூசை செய்யும் முறையையும் கணப் பொழுதில் காட்டி வைத்து, ஆலிலையில் அமுது படைக்க வேண்டியும் கோயில் கொண்ட கொற்றவன் சந்நிதியான் முருகனே முதல்வனாகி முன்னின்று தேவ கைங்கரியத்தை நிறைவேற்றியமையால் மேலான தெய்வத் தன்மையை அருள் வீச்சை , கருணைத் திறனை இந்த ஆலயம் எங்கும் காணலாம். கதிர்காமர் சைவ சித்தாந்தம் கற்றறிந்தவர் இல்லை. வேதம் நான்கும் தெரிந்தவரும் இல்லை. ஆனால் இப்படி முறைகளுக்கு அப்பால் சென்று உன்னத நிலையைப் பெற்றவர். முருகன் பேரன்புக்கு உரியராகி தாயாய் தந்தையாய் தோழனாய் தொண்டனாய் , தாசனா ய் நின்று ஈற்றில் குருவாக ஏற்றுக் கொண்டவர். திருப்பெருந்துறையின் குருந்த மர நிழலில் வாதவூரர் கண்ணுற்ற தரிசனம் போல தொண்டமானாற்றங்கரையோரத்தில் பூவரசு மரநிழ லில் கதிர்காமர் கண்ணுற்றதும், கலந்துரையா டியதும், அமுது பரிமாறி ஆனந்தப் பட்டதும் முருகன் பால் கொண்ட பேரன்பின் வெளிப்பாடே. அதே வேளை பாலமுருகனின் திருவிளையாட்டை மெய்ப்பிக்கும் புராணச் சான்றுகளே அவை.

பெரும் பெருமையும் , அனுக்கிரகங்களும், அற்புதங்களும், அருள் கொடையும் நிறைந்த கந்தப் பெருமானுக்கு இன்று தீர்த்தோற்சவம் பஞ்ச கிருத்தியங்களில் ஒன்றான அருளலைக் குறிக்கும் தீர்த்தோற்சவம் காண மக்கள் கூட்டம் அலை மோதும்.

தீயாரை அழித்து நீதியை நெறிப்படுத்தி எவ்வுலகத்தாரும் சீராக வாழ வழி காட்டி இலக்கணத்துக்குப் பொருள் சொல்லி தமிழ் வளர்த்த திருமுருகனே மௌன மொழி பேசி வாழ்ந்திருக்கும் எம் இனத்துக்கு நிலையான நிறைவான தீர்வொன்றைத் தந்துவிடு. சரண் புகுந்தோம் சந்நிதியானே நற்றமிழ் வாழ நல்லினம் வாழ வைப்பது உன் கடனே!



### சந்நிதியுறை சரவணனே சரணம்!

சந்நிதி முருகா நாம் வணங்கும் ஷண்முகா
அன்னதானக் கந்தா ஆறுதலைத் தந்தருள்வாய்
உமையாளின் குமரா எமை வழிநடத்தும் குருவரா
வேழமுகன் தம்பியே வேண்டும் வரம் அருளிடுவாய்
கலியுகத்தின் வரதா குறவள்ளி மணாளா
கார் மயில் வாகனனே கொடுமைகளை
களைந்தருள்வாய்
சேவற் கொடியோனே சொக்க வைக்கும் வடிவேலா
செல்வச் சந்நிதி உறை சரவணனே காத்தருள்வாய்

*இணுவை. ஜெகலோஜினி.*

### விடியலைத் தந்திடு முருகா

மாறா வழிபாட்டு நெறி தொடர
தீர்த்தமாடி தீர்வைத் தந்திடு
ஆறாத் துயரது போகிடவே
வீறாப்புடனே தீர்த்தமும் ஆடி
விடியலைத் தந்திடு சந்நிதி முருகா
உன்னுடன் தீர்த்தம் ஆடிடும் எம்
உறுதுயர் களைந்து அருள் புரிவாய்
கற்பூர ஒளியில் கண்ணீர் மல்க
உருகிடும் உளத்துயர் கேட்கிறதா
அருகினில் வந்துமே அருள்புரிவாய்.

*புலோலியூர், வேல்நந்தன்.*

# வளப் பற்றாக்குறை இருந்தும் வளரத் துடிக்கும் கெற்பேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை




தி.அபரா

தென்மராட்சி பிரதேசத்தில் சாவகச்சேரி நகரத்திலிருந்து கிழக்கே சுமார் 9 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள அரைகுறை வறள் வலய தரைத்தோற்ற அம்சத்தையொட்டிய தன்மைகொண்ட கிராமம் தான் கெற்பேலி கிராமமாகும். அதிகஷ்ட பிரதேசமாக மிகவும் பின்தங்கிய நிலையில் கடல் தொழிலோடு தொடர்புபட்ட சமூகமும், விவசாய செய்கையோடு தொடர்புபட்ட சமூகமும் செறிந்து வாழும் இந்தக் கிராமத்தில் கல்விக்கூடமாக காட்சி தருவது கெற்பேலி அ.த.க.பாடசாலை.

"கேடில் விழுச் செல்வம் கல்வி" எனும் மகுடவாசகத்துடன் எழுந்து நிற்கும் இந்தப்பாடசாலையின் ஸ்தாபகராக வ.கந்தையா நினைவுகூரப்படுகின்றார். 1960 காலப் பகுதிகளில் வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கான தொழில்வாய்ப்பை பெறும் நோக்கோடும் மாணவர்களைக் கற்றலுக்கு ஆர்வம் மிக்கவர்களாக தூண்டும் வகையில் வீடு வீடாகச் சென்று பிள்ளைகளை ஒருங்கிணைத்து திண்ணைப் பாடசாலைக் கல்வி முறைமையை ஏற்படுத்தி திண்ணைப் பாடசாலையாக உருவாக்கம் பெற்ற இந்தப் பாடசாலை பின் அன்றைய ஸ்தாபகரின் முயற்சியினாலும் தமிழரசு கட்சியின் சாவகச்சேரி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் நவரட்ணத்தின் முயற்சியாலும் அதிகஷ்ட பிரதேச பாடசாலையாக உருவாக்கம்பெற்றது. 1961 ஆம் ஆண்டு அரச பாடவிதானத்தினுள் உள்ளீர்க்கப்பட்ட பாடசாலையின் முதல் அதிபராக கா.முருகப்பா நினைவுகூரப்படுகின்றார். அவரைத் தொடர்ந்து திருமதி சி.சந்திரகாந்தி (பதில் அதிபர்), சி.க.கந்தையா, க.கார்த்திகேசு (பதில் அதிபர்), ஞா.செ.ஜோன், பொ.சற்குணநாதன், சி.கந்தையா, க.அருணாசலம், சு.க.சீவரத்தினம், க.சிவசம்பு, சி.சின்னராசா, திருமதி க.யோகநாதன், இ.நாகேஸ்வரன் (பதில் அதிபர்) அதிபர்களை தன்னகத்தே உள்வாங்கிச் செயற்பட்ட பாடசாலை 2010 தொடக்கம் சி.பொ. நடேசலிங்கத்தை அதிபராகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இந்தப் பாடசாலை தற்போது கெற்பேலி, பாலாவி வடக்கு பகுதிகளைக் கொண்ட மாணவர்களை உள்வாங்கி சுமார் 72 மாணவர்களுடன் 5 ஆசிரியர்களுடனும் இயங்கி வருகின்றது.

சுமார் 7 பரப்பு காணியை கொண்டிருக்கும் இந்தப் பாடசாலை இதுவரை காணியின் சட்ட ரீதியான ஆவணம் கூட பாடசாலைக்கென இல்லாமல் இருக்கின்றது. பாடசாலையின் பௌதிக வளம் தொடர்பாக நோக்குகையில் 1960 இன் பிற்பகுதியில் ஓலைக் கூரையினால் வேயப்பட்டு இருந்த கொட்டகை ஒன்று சி.கந்தையா அதிபரது சேவைக் காலத்தில் ஓடு போடப்பட்டு அதற்கான சுவர் அமைக்கப்பட்டது. அதன்பின் பாடசாலைக்கான மலசல கூடம், கிணறு என்பன அவரது காலத்திலேயே உருவாக்கம் பெற்றதாக கூறப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து சின்னராசா அதிபர் காலப்பகுதியில் 40X 20நீள அகலம் கொண்ட கட்ட அத்திபாரம் அமைத்து குழாய்க் கிணறு அமைக்கப்பட்டது. எனினும் பிரதேசத்தின் தரைத்தோற்ற அமைவுக்கு ஏற்ற வகையில் கிணற்று நீர் உவராகியமையால் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும் பாடசாலைக்கும் கிராமத்துக்குமான மின்சாரம் கூட கடந்த வருடத்தின் கடைசி மாதம்தான்கிடைத்தமைகுறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் கற்றல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை நோக்கும் போது இலங்கை அரசினால் 1958 ஆம் ஆண்டு தொடக்கம் கொண்டு வரப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைதான் இந்தப் பாடசாலையில் பொதுப்பரீட்சை அடைவாக காணப்படுகின்றது. பாடசாலையின் வரலாற்றிலேயே முதன் முதலாக குறிப்பாக தற்போதைய அதிபரின் சேவைக் காலத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சிறீஸ்கந்தராசா ஜெயந்தினி என்ற மாணவி 151 புள்ளிகள் பெற்று தேர்ச்சியடைந்தமை பாடசாலைக்கும் கிராமத்துக்கும் பெருமை சேர்த்துள்ளது.

நகர்ப்புற பாடசாலைகளுடன் ஒப்பிடுகின்ற போது வறுமைக்கோட்டுக்குள் பல்வேறு நெருக்கீடுகளுடன் கல்வி கற்கும் மாணவர்களின் சாதனைகள் மனங்கொள்ளத்தக்கவை. மேலும் இணைப்பாட விதான செயற்பாடுகள், வாய்ப்பாட்டு மனனம், திருக்குறள் மனனம், விரைவு கணிதம், ஆங்கில தின குழுப்பாடல் என்பவற்றில் பங்குபற்றி தேர்ச்சி பெற்றுள்ளனர். அதே நேரம் 2011 ஆம் ஆண்டில் வலய மட்ட நீளம்பாய்தல் 3 ஆம் இடத்தையும் 2012 ஆம் ஆண்டு ஏழு வயதுப் பிரிவில் பந்தெறிதல் வலய மட்டத்தில் 2 ஆம் இடத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பழைய மாணவர் சங்கத்தினரதும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரதும் ஒத்துழைப்புடன் சிறப்பாக வருடாந்தம் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இடர் நலன்புரி நிலைய 10 பாடசாலைகளில் அதிலும் குறிப்பாக தென்மராட்சி கல்வி வலயத்தில் ஒரே ஒரு இடர் நலன்புரி பாடசாலையாக மேற்குறித்த பாடசாலை செயற்பட்டு வருகின்றது.

இந்த வருடம் மஹிந்த சிந்தனையின் கீழ் 5000 ஊட்ட பாடசாலைகள் விருத்தி செய்யும் வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட இந்தப் பாடசாலை பெற்றோரின் உடல் உழைப்பையும் உள்ளீர்ந்து பிரதான மண்டபத்துக் கான நிலம் திருத்துதல், நிறப்பூச்சு வேலைகள் வலைகளுக்கு வர்ணப்பூச்சு, சேதமுற்ற வலைகளை புனரமைத்தல், விளையாட்டு முற்ற உபகரண வர்ணப் பூச்சு, பாடசாலையின் முன்பக்கம் சுமார் 85 அடி நீளமான மதில் அமைத்தல் என்பன நேர்த்தியாக நிறைவேற்றப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

மாற்றமுறும் உலக ஒழுங்கில் ஏற்றம் காண வேண்டிய சமூகமும் அவற்றை வழிப்படுத்தும் கல்விக்கூடங்களும் என்பதற்கேற்ப இந்தப் பாடசாலையினதும் சமூகத்தினதும் வளர்ச்சிக்காக பின்வரும்பௌதிகவளதேவைகள்காணப்படுகின்றன. அந்த வகையில் தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்பறைகள் கொண்ட மாணவ பரம்பல் காணப்படுகின்றபோதிலும் அவற்றுள் ஒரு வகுப்பறைக்கான பற்றாக்குறை நிலவுகின்றது. அதேநேரம் பாடசாலையில் தற்காலிக கொட்டகை ஒன்று காணப்படுகின்றது. அவற்றைபுனரமைத்துவகுப்பறை கட்டடத் தொகுதியை உருவாக்கினால் சிறப்பானதாக அமையும். மேலும் பாடசாலையின் முற்புறத்தில் வலது புறம் சுமார் 75 அடி நீளமான மதில் ஒன்றை அமைக்க வேண்டியுள்ளதுடன் விளையாட்டு முற்றத்தை மெருகூட்ட வேண்டிய தேவையும் உள்ளது. சுமார் 465 நூல்கள் வாசிப்பாற்றலை மேற்கொள்வதற்காக காணப்படுகின்ற போதிலும் அவற்றை முறையாக வைத்துப் பராமரித்து வாசிப்பதற்கேற்ப சூழலுடனான கட்டடம் தளபாடத்துடன் கூடிய நூலக வசதி இன்றியமையாததாக காணப்படுகின்றது. அத்துடன் தகவல் தொழில் நுட்ப யுகத்தில் கெற்பேலி மாணவர்கள் கணனியை முழுமையாக பயன்படுத்த முடியாத கல்விச் சாலையில் கற்கின்றார்கள் என்பது கவலைதரும் விடயமாகின்றது. மேலும் நவீன கற்றல் சாதனங்களாகிய ஒலிபெருக்கி, தொலைக்காட்சி, மேந்தலை எறியி போன்ற சாதனங்களும் மாணவர்களுக்கான செயலட்டை மற்றும் ஆக்க செயற்பாட்டு விருத்திக்கும் அலுவலக தேவைக்குமான போட்டோ பிரதி இயந்திரம் என்பன இல்லாத பாடசாலையாகவே இந்தப் பாடசாலை தொடர்ந்து இயங்குகிறது. மேலும் பாடசாலைக்கான முகப்பு வளைவு பாடசாலையின் கவின்நிலையைவிருத்தி செய்வதற்கு அவசியமானதொன்றாகவும், மாணவர்கள் உடல் திறன் விருத்தியைமேம்படுத்துவதற்குபொருத்தமான விளையாட்டு மைதானம் இல்லாமை பெருங்குறைபாடாகவும் காணப் படுகின்றது. அறியப்படாத தெரியப்படாத இந்தக் கிராமங்களுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் வரையறுக்கப்பட்ட வளப்பரம்பலுடன் காணப்படும் கல்வித் துறை சார் நிறுவனங்களினால் மாத்திரம் நிறைவேற்றிவிட முடியாது என்பதை உணர்ந்து உரியவர்கள் அக்கறை கொள்ள வேண்டும் என்பதே காலத்தின் கட்டாய தேவையாகின்றது.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

# நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம், ஓக. 21

நல்லூர் கந்தன் ஆலய பத்தாம் திருவிழாவான இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் 'மணவாளன்' என்ற பொருளில் நித்தியதுசிதரனின் சிறப்புச் சொற்பொழிவும், மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை, மாதகல் சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் ஞான ஏந்தல் மா.ந.பரமேஸ் வரனின் திருப்புகழ் கச்சேரியும் இடம்பெறும்.

★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு தெய்வீக இசையரங்கம் நடைபெறவுள்ளது.

இசை அரங்கில் வயலின் கச்சேரியை உ.இராதா கிருஷ்ணன், திருமதி சைந்தவி நிஷாகரன் ஆகியோர் வழங்க, அணி சேர் கலைஞர்களாக மிருதங்கம்- க.கண்ணதாசன், கெஞ்சிரா- பிரம்மஸ்ரீ வி.ரமணா, முகர்சிங்- எஸ். சக்திதாசன், தபேலா-சதாவேல்மாறன் ஆகியோர் கலந்து கொள்வர்.

★ ★ ★

நல்லூர் கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் ப்ரம்மகான சபா மண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசை அரங்கில் மாலை 6.30 மணிக்கு போஜராஜசர்மா விஜயலக்ஷ்மியின் பாட்டுக்



கச்சேரி நடைபெறவுள்ளது.

★ ★ ★

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் வருடந்தோறும் நடைபெறும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரை இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா 'மகாபாரதம்' பற்றி இசைப் பேருரையை நிகழ்த்துவார். (ந-86-7-14)

# மாற்றுவலு உடையோரை பதிவு செய்ய நடவடிக்கை

## சமூக சேவை திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.21

மாற்றுவலு உடையவர்கள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் கணக்கெடுப்பு ஒன்றை நடத்தி அவர்கள் தொடர்பான தரவுகளைப் பதிவு செய்ய சமூக சேவைத் திணைக்களம் முன்வந்துள்ளது.

2001 ஆம் ஆண்டின் பின்பு இவ்வாறான கணக்கெடுப்பு. எதுவும் இதுவரை இடம்பெறவில்லை எனவும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வாழும் மாற்றுவலுவுள்ளவர்கள் தொடர்பான தரவுகள் எதுவும் இல்லை எனவும் சமூக சேவை திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாற்றுவலுவுள்ளோரை அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிக்காக அமர்த்தப்படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் பற்றிய தரவுகள் முதன்மை பெறுகின்றது என சமூக சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலேயே குறித்த கணக்கெடுப்பு இடம்பெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-122)

# பாம்பை மடக்கிப் பிடித்தார் பாம்பினால் கடியுண்டவர்

தென்மராட்சி, ஓக.21

வேலி அடைப்பதற்காக துப்புரவு செய்த பற்றைக்குள் மறைந்து கடித்த பாம்பை மடக்கிப் பிடித்து வைத்திய சாலைக்கு கொண்டு வந்தார் பாம்பினால் கடியுண்டவர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நுணாங்கிளப்புப் பகுதியில் உள்ள காணிக்கு வேலி அடைப்பதற்கு இடைஞ்சலாக காணப்பட்ட பற்றையை வெட்டித் துப்புரவு செய்தபோது மறைந்திருந்த பாம்பு இவரைக் கடித்தது.

பாம்பு கடித்ததை உணர்ந்து கையில் வைத்திருந்த மண்வெட்டியால் அமத்திப் பாம்பை உயிருடன் அடித்து பையொன்றில் வைத்து வைத்தியசாலைக்கு கொண்டு வந்தார்.

சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த செல்லையா யோகராசா (வயது-50) என்பவரே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் .(ந-9)

## அலங்காரத் திருவிழா

கைதடி, ஓக.21

ஊரெழு கிழக்கு ஆனந்தகான வேலவன்பதி பழனி முருகன் ஆலய அலங்காரத் திருவிழா 7 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து இன்று வரைதிருவிழா இடம்பெறுகின்றது. திருவிழாக் காலத்தில் தொடர் சொற்பொழிவாற்றி வருகின்ற யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் எஸ். கே.என்.தங்கராஜாவை பாராட்டி பட்டமளிக்கும் நிகழ்வு இன்று ஆலயத்தில் இடம்பெறும். (வ-288)

# குழந்தையின் காப்புக்கள் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக.21

சந்நிதி முருகன் கோயில் திருவிழாவின் போது தாயார் தூக்கி வைத்திருந்த குழந்தையின் கையிலிருந்து ஒன்றரைப் பவுண் நிறையுடைய நான்கு காப்புகள் திருடப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சங்கானையைச் சேர்ந்த பெண் ஒருவர் கோயிலுக்குச் சென்றுள்ளனர். தனது 2 வயதுக் குழந்தையை தூக்கி வைத்திருந்துள்ளார். அதன் போது குழந்தையின் கையில் இருந்த காப்புக்கள் திருடப்பட்டுள்ளன. குழந்தையை கீழே இறக்கிய போது காப்புகள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்தது.

சம்பவம் தொடர்பில் அங்கு அமைக்கப்பட்டுள்ள சுற்றுலா நீதிமன்றப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டு, முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சில வாரத்துக்கு முன்னர் கோயிலின் திருடப்பட்ட 3 கைத் தொலைபேசிகளுடன் 2 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கசிப்பு வைத்திருந்த பெண் கைது

யாழ்ப்பாணம், ஓக.21

சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் குளிர்பானத்துடன் கசிப்பைக் கலந்து தன்வசம் வைத்திருந்தார் என்று குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த பெண் ஒருவரே கைதாகியுள்ளார். சந்தேகத்தின் அடிப்படையில் தாம் அவரைப் பரிசோதித்த போது கசிப்பு வைத்திருந்தமை தெரியவந்ததாகவும் அதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)





யாழ். புனித மரியாள் பேராலய வருடாந்த திருவிழாவில் கடந்த வியாழன் நடைபெற்ற அன்னையின் திருச்சொரூப ரதப் பவனியின் போது.... (ந-135)

# பாண் வியாபாரிக்கு வாள்வெட்டு இரு கைகளிலும் பலத்த காயம்

## போட்டியால் ஏற்பட்ட சம்பவமா?

வலி.தென் மேற்கு, ஓக.21

நடமாடும் பாண் வியாபாரத்தில் ஈடுபட்ட வாலிபர் ஒருவர் இனந்தெரியாதவர்களின் வாள் வெட்டுக்கு இலக்காகி இரு கைகளிலும் பலத்த காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டுள்ளார்.

வெதுப்பகங்களுக்கிடையில் ஏற்பட்ட போட்டி வியாபாரமே இதற்குக் காரணம் என்று பேசப்படுகிறது.

குடாநாட்டில் இயங்கி வரும் அநேகமான வெதுப்பகங்கள் விற்பனையை அதிகரிக்கும் நோக்குடன் போட்டி போட்டுக் கொண்டு ஓட்டோக்கள் மூலம் நடமாடும் பாண் விற்பனையை ஆரம்பித்துள்ளன.

இந்த நடமாடும் விற் பனையால் பாவனையாளர்கள் நன்மையடைந்துள்ள போதிலும் இதுவரை காலமும் பாண் விற்பனையில் ஈடுபட்டு வந்த சிறு சிறு வியாபாரிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சில கடைகளில் பாண் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது.

ஒரு ஓட்டோ மூலம் நடமாடும் பாண் விற்பனையை ஆரம்பித்த வெதுப்பகங்கள் தற்பொழுது சேவையின் தூரத்தை விஸ்தரித்ததுடன் ஒன்றுக்கு மேற்பட்ட ஓட்டோக்களைப் பயன்படுத்தி போட்டி மனப்பான்மையுடன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில் சுதுமலையில் உள்ள ஒரு வெதுப்பகம் ஓட்டோ மூலம் பாண் விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைக்கால் என்னும் இடத்தில் வைத்து ஓட்டோவை வழிமறித்த இனந்தெரியாத நபர்கள் வியாபாரத்தில் ஈடுபட்ட வாலிபரை வாளால் வெட்டி விட்டு ஓடிவிட்டனர். இரு கைகளிலும் வெட்டுக் காயங்களுடன் வாலிபர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-115)

# விசேட தரத்துக்கு 4 நிர்வாக அதிகாரிகள் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், ஓக.21


வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த நான்கு நிர்வாக சேவை அதிகாரிகள் அச் சேவையில் விசேட தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர் என பொதுச் சேவை ஆணைக் குழுவின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ். சார்ள்ஸ், யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் விவகார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி றஞ்சினி நடேசபிள்ளை ஆகியோரே விசேட தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்ட தமிழ் மொழி மூல அதிகாரிகளாவர். (ஒ-8)

# கிராம அலுவலர் பதவி உயர்வுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றோர்

வடமராட்சி, ஓக.21

திறமை அடிப்படையில் கிராம அலுவலர் சேவையின் அதி உயர்தரத்துக்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் 22 பேர் சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்த கிராம அலுவலர்கள் விவரம் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:

திருமதி சி.அகிலா (ஊர்காவற்றுறை), நா.சுந்தரராசா (யாழ்ப்பாணம்), ந.சர்வகுணசீலன், வை.சுரேஸ், த.நேத்திரானந்தம், தி.சிறிஸ்கந்தராசா (நல்லூர்), அ.தனபாலரத்தினம், இ.துரைராசா, வை.கி. தனபாலா (சண்டிலிப்பாய்), ம.ஸ்ரீமுருகவேள், க.சிவபாலன் (சங்கானை), ச.நாகசோதிரூபன், நா.மகாநேசன் (கரவெட்டி), மு.கந்தசாமி (பருத்தித்துறை), ந.இராசகுமாரன் (சாவகச்சேரி), சி.எழிலரசன், எஸ்.ரி. வரதராசன், சி.உதயகுமார், சு.சண்முகவடிவேல், ஜ.சிவானந்தம் (கோப்பாய்), ந.பாலசுந்தரம், சி.வித்தியாபதி (மருதங்கேணி). (ந-8)




அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் புதுவருட நிர் வாகிகளின் பதவி ஏற்பு நிகழ்வு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மாவட்ட உதவி ஆளுநர் இக்னேசியஸ் கமிலன்ஸுக்கு லயன்ஸ் கழக பொருளாளர் க. ஸ்ரீஸ்கந்தராசா நினைவுப் பரிசில் வழங்கி கௌரவிப்பதை காணலாம். (ந-11)

# இசைப் பேரொளி விருது வழங்கி கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஓக.21

யாழ்ப்பாணத்தின் இசைப் பேராசான் நா.வி.மு.-நவரெத்தினத்துக்கு இந்தியாவில் தெய்வத் தமிழ் இசைப் பேரொளி விருது கிடைக்கப்பெற்றுள்ளது.

அனைத்துலக தெய்வத் தமிழ் 11 ஆவது மாநாடு தமிழ்நாடு காஞ்சிபுரம் பச்சையப்பன் கல் லூரியில் கடந்த மாதம் நடைபெற்றபோது யாழ். பல் கலைக் கழக இசைப் பேராசானுக்கு இந்த விருது கிடைக்கப்பெற் றுள்ளது. இந்த மாநாட்டில் இந்தியா, மலேசியா, இலங்கை, சிங்கப் பூர், க[illegible]டன் உட்படப் பல நாடுகளில் இருந்தும் நானூறுக்கும் மேற்பட்ட அறிஞர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-14)

# கணக்காளர் சேவைக்கு 20 தமிழர் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக.21

இலங்கை கணக்காளர் சேவை வெற்றிடங்களை நிரப்பு வதற்கு நடத்தப்பட்ட விசேட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் 20 தமிழர்கள் நியமனத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப் பரீட்சை மூலம் தேசிய மட்டத்தில் 48 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 28 சிங்களவர்களும், 20 தமிழர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஒ-8)

# அழிக்கப்பட்டு வருகின்றன ஆற்றின் வளங்கள்

முல்லைத்தீவு.ஓக.21
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்கிளாய் ஆற்றின் வளங்கள் அழிக்கப்படுவதுடன், சட்டவிரோத தொழில்கள் தடையின்றி மேற்கொள்ளப்படுவதாகவும் ஆற்றினை அண்டி வாழும் குடும்பங்கள் கவலையுடன் தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுகடற்றொழிலை மேற்கொள்ளும் முக்கிய பகுதியாக கொக்கிளாய் ஆறு காணப்படுகின்றது. இந்த ஆற்றை நம்பி கருநாட்டுக்கேணி, தென்னமரவாடி, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 23 ஆயிரம் குடும்பங்கள் உள் ளன.

இந்தக் குடும்பங்கள் சிறுகடல் தொழில் அனுமதிகளின் பிரகாரம் வீச்சுவலை, குல்லா, கரப்பு, தூண்டில் ஆகியவற்றின் மூலமாக பாரம்பரிய தொழில்களையே மேற்கொண்டு வந்தன. கடந்த 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் காரணமாக இந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து சென்றதால் ராணுவத்தினரின் ஆதரவுடன் வேறுபகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் தொழில்நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மீண்டும் கடந்த 2010 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியமர்ந்ததையடுத்து குறித்த ஆற்றில் தொழில் செய்வதற்கான அனுமதிகளும் வழங்கப்பட்டன. ஆனால் இவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை சீராக மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.





இதற்கு பெரியகருக்குப் பனை, சிறிய கருக்குப்பனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆற்றுப் பகுதியில் தடைசெய்யப்பட்ட தொழில்களை மேற்கொண்டு வருகின்றமையே காரணமாகும்.

அதேவேளை குறித்த ஆற்றினை மாசுபடுத்தும் வகையில் இவர்கள் செயற்படுவதாகவும் இங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் தாம் கடலுணவுகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவலநிலை காணப்படுவதாகவும் இந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (க-6)

## குழாய்க்கிணறு பழுதடைந்ததால் நீரைப் பெறுவதில் அவலங்கள்

துணுக்காய், ஓக.21
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனிஞ்சியன் குளம் செபஸ்ரியார் ஆலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள குழாய்க்கிணறு கடந்த ஆறு மாதங்களாகப் பழுதான நிலையில் காணப்படுவதால் இந்தக் கிணற்றை நம்பிய சுமார் முப்பது குடும்பங்கள் நீரைப் பெறுவதில் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றன.

இந்தக் குழாய்க் கிணறு 1996 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதனைப் போன்று மேலும் 35இற்கும் மேற்பட்ட குழாய்க்கிணறுகள் இந்தப் பகுதியில் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-415)



## குடமுருட்டி ஆற்றில் களவாக மணல் ஏற்றும் நடவடிக்கைகள்



அக்கராயன், ஓக. 21
பூநகரி குடமுருட்டி ஆற்றில் களவாக மணல் ஏற்றும் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இரவுவேளைகளிலேயே இந்த மணல் ஏற்றும் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பூநகரிப் பிரதேச செயலகத்தில் இடம்பெறும் கூட்டங்களில் மணல் ஏற்றுவது தடை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் நிரந்தர வீட்டுத் திட்டங்களைச் சாட்டாகக் கொண்டு வகை தொகை யின்றி மணல் ஏற்றப்படுகின்றது.

மேலும் மரங்களும் சட்ட விரோதமான வகையில் அழிக்கப்பட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

## தொழில்களை மேற்கொள்ள முடியாத நிலையில் கண்ணகை நகர் மக்கள்


கிளிநொச்சி, ஓக. 21
கிளிநொச்சி கண்ணகை நகர் கிராமத்தில் வசிக்கும் கடற்றொழிலை மேற் கொள்ளும் 265 குடும்பங்கள் தொழில்களை மேற்கொள்ள முடியாத நிலையில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கண்ணகை நகர்க் கிராமத்தில் தற்போது சுமார் 365 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன. இதில் 265 குடும்பங்கள் தமது வாழ்வாதாரத் தொழிலாக சிறு கடற்றொழிலையே நம்பியுள்ளன. ஆனால் கடந்த காலங்களைப் போன்று தற்போது சிறுகடற்றொழிலை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதால் தாம் வாழ்வாதார நெருக்கடிகளை எதிர்கொள்வதாக இந்த மக்கள் தெரி விக்கின்றனர்.

முன்னர் இந்தக் குடும்பங்கள் சுண்டிக்குளம், ஆனையிறவு, தட்டுவன்கொட்டி ஆகிய பகுதிகளில் உள்ள சிறுகடற் பகுதிகளில் இறால் கூடு கட்டுதல் மற்றும் ஏனைய சிறு தொழில்களை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தைப் பெற்று வந்தனர்.

கடந்த ஆண்டின் இறுதியிலும், இந்த ஆண்டின் முற்பகுதியிலும் ஏற்பட்ட காலநிலை மாற்றம், வெள்ளப் பாதிப்பு ஆகியவை காரணமாக தொழில்கள் பாதிக்கப்பட்ட நிலையில் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக இவர்களின் இறால் பிடிக்கும் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் உரிய தொழில் உபகரணங்கள் இவர்களிடம் இல்லாததால் ஆபத்தான வகையில் தாம் தொழிலை மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகியிருப்பதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். (க-6)



கடும் வறட்சி காரணமாக மல்லாவி அனிஞ்சியன்குளத்தின் நீர் வறண்டு காணப்படுவதால் கால்நடைகள் குளப் பகுதியில் மேய்ச்சலில் ஈடுபடுகின்றன. (க-415)

## நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரை இடும் பணிகள்

கிளிநொச்சி, ஓக.21
கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரை இடும் பணிகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் பணிகள் எதிர்வரும் 22, 23, 26, 27 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகள், ப.நோ.கூ. சங்கக் கிளைக்ள் உள்ளிட்ட நிறுத்தல் அளவைக் கருவிகளைப் பயன்படுத்துவோர் அவற்றுக்கு முத்திரை இட்டுக்கொள்ள வேண்டும் என கிளிநொச்சி நிறுத்தல் அளவைகள் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

இவற்றுடன் இலத்திரனியல் தராசுகளுக்கும் முத்திரை இட்டுக்கொள்ள வேண்டும் எனவும் அவரால் மேலும் தெரிவிக்கப்பட்டது. (க-8)

## மழைக்கு முன்னர் வீதி வேலைகளை பூர்த்தி செய்க

### முக்கொம்பன் மக்கள் கோரிக்கை

அக்கராயன், ஓக.21
எதிர்வரும் மழை காலத்துக்கு முன்னர் பூநகரியின் 10 ஆம் கட் டைக்கும் முக்கொம்பன் கிரா மத்துக்கும் இடையில் இடம் பெற்று வரும் கொங்கீறிட் வீதி அமைக்கும் பணிகளைத் துரிதமாகப் பூர்த்தி செய்யுமாறு முக்கொம்பன் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ள னர்.

இந்த வீதி வேலை 5 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இந்தப் பகுதி மக்கள் எந்தவித போக்குவரத்து வசதிகளும் இல்லாது வயல்வெளிகள் ஊடாகப் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். மேலும் மக்கள் பூநகரி மருத்துவமனை, பிரதேச செயலகம் ஆகியவற்றுக்குச் செல்ல முடியாத நிலையும் காணப்படுகின்றது.

மழை காலம் தொடங்கிவிட்டால் வயல் நிலங்களுக்கு ஊடாகவும் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிடும். எனவே எதிர்வரும் மழை காலத்துக்கு முன்னர் இந்த வீதி வேலையைப் பூர்த்தி செய்யுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

## இடம்பெறாத போக்குவரத்துச் சேவைகள்

### மாலை வேளைகளில் மக்கள் திண்டாட்டம்

பூநகரி, ஓக. 21
மாலை வேளைகளில் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறாததால் பூநகரியின் பல்வேறு கிராமங்களையும் சேர்ந்த மக்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின் றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பகுதி களில் ஒன்றாக பூநகரிப் பிர தேசம் காணப்படுகின்றது. இங்கு சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக ஏ-9 வீதியின் பரந்தன் சந்தியில் இருந்து ஆலங்கேணி, நல்லூர், செல்லையாதீவு, வாடியடி, கௌதாரிமுனை, கறுக்காய்தீவு ஆகிய இடங்களுக்கு போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறுவதில்லை. காலை வேளைகளில் மருத்துவமனைகள் மற்றும் இதர இடங்களுக்குத் தமது தேவையின் பொருட்டு கிளி நொச்சிக்கு வரும் மக்கள் திரும் பிச் செல்ல முடியாது சிரமங் களை எதிர்கொள்வதைக் காண முடிகின்றது.

இதேபோன்று ஸ்கந்தபுரம் பிரதான சந்தியில் இருந்து முக்கொம்பன் கிராமத்துக்கு எந்தவிதமான போக்கு வரத்து வசதிகளும் இல்லை. இதனால் இந்தக் கிராம மக்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் நஞ்சுண்டகாடு, கண்ணகை புரம் பகுதிகளுக்கான போக்குவரத்து வசதிகளும் மாலை வேளைகளில் இல்லாததால் மக்கள் வீதிப் புனர மைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் டிப்பர் வாகனங்கள் உட்பட ஏனைய வாகனங்களில் பல அசௌகரியங்களுடன் பயணிக்கும் அவல நிலை காணப்படுகின்றது. (க-6)

## மின்கம்பிகளைப் பார்த்து ஏங்கும் வட்டக்கச்சி மக்கள்

கிளிநொச்சி, ஓக.21
கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதேச மக்களில் பலர் தங்களுக்கும் மின்சாரம் கிடைக்காதா என மின்கம்பங்களைப் பார்த்து ஒரு வருடத்துக்கும் மேலாக ஏங்கிக் கொண்டு இருப்பதைக் காண முடிகின்றது. இந்தப் பகுதிக்கு ஒரு வருடத்துக்கு முன்னரே மின்சாரம் வழங்கப்பட்டபோதிலும் பெரும்பாலான மக்களுக்கு இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லை.

மின்கம்பிகள் செல்லும் பிரதான வீதியில்கூட இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. குறிப்பாக சிவிக்சென்ரர், ஆறுமுகம் வீதி, மாயவனூர் போன்ற பகுதிகளில் உள்ள மக்களுக்கு இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லை. இதனை விட இராமநாதபுரம் பகுதியிலும் பல இடங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. இது தொடர்பில் பல முறை மின்சார சபையினருடன் தொடர்பு கொண்ட போதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லை என இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது உயர்தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்கள்கூட தொடர்ந்தும் குப்பி விளக்குகளிலேயே தம்மைத் தயார்ப்படுத்தி வருகின்றனர். தாம் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும் என அவர்கள் கேள்வியும் எழுப்புகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இது தொடர்பில் கவனம் செலுத்தி விரைவாகத் தமக்கு மின்சாரம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-405)



நல்லூரில் முருகன் வீதியுலா வரும் வேளையில் நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பகுதி, இந்து ஆலயங்கள் ஒன்றியம், சின்மயானந்த மிஷன் ஒருங்கிணைந்து நடத்தும் பஜனை நிகழ்வையே காண்கிறீர்கள். (ஒ-7)

## பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்றோர்

யாழ்ப்பாணம்,ஒக. 21

யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவினரால் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் நல்லைக்குமாரன் மலர்-21 இன் வெளியீடும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் 10 தொடக்கம் 15 வயதுக்கு உட்பட்டவர்கள் பிரிவில் முதலாம் இடத்தை பிரகலாதன் நிசாங்கன், இரண்டாம் இடத்தை ரேணுகா கருணாகரன், மூன்றாம் இடத்தை இந்திர குமார் அரன் ஆகியோரும், 16 தொடக்கம் 21 வயதுக்குப் பட்டவர்கள் பிரிவில் முதலாம் இடத்தை என்.எம்.அப்துல்லா, இரண்டாம் இடத்தை நாகரத்தினம் சுஜீவன், மூன்றாம் இடத்தை அபர்ணா கருணாகரன் ஆகியோரும் பெற்றுக் கொண்டுள்ளனர். (ஒ-14)

## மாற்றுவலுவுள்ள பயனாளிக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவு

கிளிநொச்சி, ஒக.21

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மாற்றுவலுவுள்ள இரண்டு பயனாளிகளுக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவாக தலா 25ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிதி சமூக சேவைகள் அமைச்சின் அங்கவீன முற்றோருக்கான தேசிய செயலகத்தால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேசத்தில் வதியும் மாற்றுவலுவுள்ளோர் அனைவருக்கும் இக் கொடுப்பனவை பெற்றுக் கொடுக்க பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

கால்நடை வளர்ப்பு, சிறு வியாபாரம் தவிர்ந்த சாத்தியமான பிறதொழில்களைச் செய்ய விரும்பும் மாற்று வலுவுள்ளோர் தான் செய்யவுள்ள சுயதொழில் தொடர்பான விவரங்களுடன் கடிதம் எழுதி தாம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பம் என்பதை கிராம அலுவலர் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். அந்தப் பிரதியுடன் வைத்திய சாலையில் பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ் ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து வழங்குமாறு பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (வ-9)

## புத்தூர் சந்தி விபத்தில் தம்பதியர் படுகாயம்

தென்மராட்சி, ஒக.20

மீசாலை - புத்தூர் சந்தியில் நேற்று முன்தினம் திங்கள் மாலை இடம்பெற்ற டிப்பர் மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் தம்பதியினர் படுகாயமடைந்தனர்.

கொடிகாமம் நாவலடியைச் சேர்ந்த நடராசா நவதீபன் (வயது-30) அவரது மனைவி நவதீபன் சுதர்சினி (வயது-20) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (ஒ-9-400)

## கிணற்றில் தவறி விழுந்து பெண் சாவு

யாழ்ப்பாணம், ஒக.21

வீட்டுக் கிணற்றில் தண்ணீர் அள்ள முற்பட்ட பெண் தவறிக் கிணற்றுக்குள் வீழ்ந்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார்.

சுழிபுரம் பண்ணாகத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சபாரட்ணம் புனிதவதி (வயது-58) என்பவரே உயிரிழந்தார்.

கிணற்றில் தவறி விழுந்த பெண்ணை அங்கிருந்தவர்கள் வெளியே தூக்கி யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். எனினும் அவர் இடைவழியில் உயிரிழந்து விட்டமை பரிசோதனையில் தெரியவந்தது. விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (து-4-78)

### மல்லாவி நகரில் அமைக்கப்படும் கால்வாய்களால்

## வர்த்தக நிலையங்கள் பாதிப்பு மல்லாவி வர்த்தகர்கள் விசனம்

துணுக்காய்,ஒக. 21

மல்லாவி நகர் பகுதியில் கால்வாய் அமைக்கப்படுவதால் தமது வர்த்தக நிலையங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

மல்லாவி நகரப் பகுதியில் துணுக்காய் மாங்குளம் பிரதான வீதி காப்பெற் வீதியாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த வீதி உயரமாக அமைந்துள்ளதால் மழையின் போது வெள்ளநீர் கடைப் பகுதிகளுக்குள் உட்புகும் நிலை ஏற்படும் என்பதால் வீதியோரமாக கால்வாய்களை அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.

இதனால் வர்த்தக நிலையங்களின் முன்பகுதிகள் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றன. இதனால் வர்த்தகர்கள் கவலை அடைந்துள்ளனர்.



இது தொடர்பாக வர்த்தகர்கள் தெரிவிக்கையில்:

போரினால் பாதிக்கப்பட்டு மீளவும் நாம் குடியமர்ந்த நிலையில் எமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இங்கு வாய்க்கால் அமைப்பது எமக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும் வர்த்தக நிலையங்களின் ஒரு பகுதி யைத் தகர்ப்பது கவலையை அளிக்கின்றது என்றனர். (க-415)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?



**மேடம்**: மன நிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். முன்கோபம் விலகும். அரசுப்பணிகள் சுமுகமாக முடியும். வேற்று மதத்தினரின் ஆதரவு கிடைக்கும்.அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.



**இடபம்**: குடும்பத்தில் அமைதி நிலவும். நட்பு வட்டாரம் விரிவடையும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்துகொள்வார்கள்.



**மிதுனம்**: வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சி வசப்படாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.



**கடகம்**: பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்திலுள்ளவர்களிடம் மனம் விட்டுப்பேசுவீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**சிங்கம்**: தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் மிகுதிகளை வசூலிப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு



**கன்னி**: மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். உறவினர்களால் மன நிம்மதி கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபாரத்தில் பரபரப்பான சூழல் ஏற்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**நாளை**

ஆவணி-06 வியாழக்கிழமை 22.08.2013
திதி: துதியை பி.இ.05.13 வரை
நட்சத்திரம்: சதையம் பி.ப.12.27 வரை
சுபநேரம்: 07.35 - 09.05 வரை
இராகுகாலம்: 01.35 - 03.05 வரை



**துலாம்**: சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.



**விருச்சிகம்**: நட்பு வட்டாரம் விரிவடையும். உறவினர்களின் வருகையுண்டு. பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளை சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.



**தனுசு**: சில தினங்களாக தடைப்பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் மறைமுக போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.



**மகரம்**: சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. யாரையும் நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்காதீர் கள். நண்பர்கள், உறவினர்களுடன் உரிமையில் வரம்பு மீறிப் பேச வேண்டாம். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம்.



**கும்பம்**: யாரையும் யாருக்கும் நீங்கள் பரிந்துரை செய்ய வேண்டாம். உறவினர், நண்பர்களுடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். அரச காரியங்கள் இழுபறியாகும். வியாபாரத்தில் வேலையாளர்களால் பிரச்சினைகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும்.



**மீனம்**: வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தி யோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | | | 4 |
| 4 | 8 | 1 | | | | | 7 | |
| | | 5 | 9 | 4 | 1 | 3 | 2 | 8 |
| | | 8 | 4 | 1 | 3 | | | |
| 5 | | | | | | | | |
| | | | 7 | 5 | 9 | 8 | | |
| 8 | 3 | 7 | 1 | 9 | 2 | 6 | | |
| | 4 | | | | | 7 | 8 | 9 |
| 9 | | | | | | | | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 7 | 4 | 3 | 9 | 9 | 1 | 2 |
| 9 | 6 | 1 | 8 | 2 | 7 | 4 | 5 | 3 |
| 4 | 3 | 2 | 5 | 9 | 1 | 6 | 8 | 7 |
| 7 | 4 | 6 | 3 | 1 | 2 | 8 | 9 | 5 |
| 2 | 8 | 3 | 6 | 5 | 9 | 7 | 4 | 1 |
| 1 | 9 | 5 | 7 | 4 | 8 | 3 | 2 | 6 |
| 6 | 7 | 9 | 2 | 8 | 5 | 1 | 3 | 4 |
| 5 | 1 | 4 | 9 | 7 | 3 | 2 | 6 | 8 |
| 3 | 2 | 8 | 1 | 6 | 4 | 5 | 7 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# உள்ளூர், இறக்குமதிப் பழங்களிலும் இரசாயன நச்சுப் பொருள் உள்ளதா?

## ஆராயப்படும் என்கிறார் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, ஓக. 21

நியூசிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால் மாக்களில் டி.சி.டி என்ற (டைசையான்டியமைட்) எனும் ஆரோக் கியத்துக்கு கேடு விளைவிக்கும் பொருள் அடங்கி இருப்பதாக கண்டுபிடித்துள்ள தொழில் துறை தொழில்நுட்ப நிறுவனம் இப்பொழுது இறக்குமதி செய்யப்படும் மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பழவகைகளிலும் இந்த மாதிரி இரசாயன நச்சுப் பொருள் அடங்கியிருக்கிறதா என்பது பற்றி ஆராய்வதற்கு திட்டமிட்டு வருகின்றது.

இவ்வாறு தெரிவித்தார்அமைச்சர் சம்பிக்க.

பழங்களை பழுக்கச் செய்யவும் நீண்டகாலம் பழுதடையாமல் இருக்கச் செய்யவும் இரசாயனப் பொருள்கள் பயன்படுத் தப்படுவதால் அவைகளில் இரசாயன நச்சுப் பொருள் படிந்திருக்கலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளது. பழங்களை கட்டம் கட்டமாக பரிசோதனைக்குட்படுத்துவதற்குத் தாம் ஆலோசித்திருப்பதாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். அப்பிள் பழங்களில் ஒருவகை பிசின் தடவப்படுகின்றது. உள்ளூரில் காய்களை பழுக்கச் செய்வதற்கு கார்பைட் பயன்படுத்தப்படு வதாகக் கூறப்படுகின்றது. இவைகளை விஞ்ஞான முறை யில் ஆராய்ந்து அவைகளால் கெடுதி உண்டா என்பதை கண்டறிய வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

**பால்மாவில் டி.சி.டி**

பால்மாவில் டி.சி.டி நச்சு காணப்பட்டது தொடர்பாக அமைச்சர் கூறியிருப்பதாவது:

> இரசாயனப் பொருள்கள் பயன்படுத் தப்படுவதால் அவைகளில் இரசாயன நச்சுப் பொருள் படிந்திருக்கலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளது.

நியூசிலாந்தில் தயாரிக்கப்படும் பால்மாவில் டி.சி.டி இருப்பது அந்த நாட்டில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் வாயிலாக 2012 டிசெம்பர் மாதத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டதாக நியூ சிலாந்து தெரிவித்திருந்தது. அதன் பிறகு 2013 ஜூன் 1 ஆம் திகதிக்குப் பின்னர் அங்கு உற்பத்தி செய்யப்பட்ட பால்மாவில் டி.சி.டி இருக்கவில்லையென்றும் அந்த நாடு தெரிவித்தி ருந்தது. எனவே கைத்தொழில் நுட்ப நிறுவனம் கண்டு பிடித்தவற்றுக்கும் நியூசிலாந்து நாட்டின் நிலைப்பாட்டுக்கும் எதுவித முரண்பாடும் தென்படவில்லை. ஆனால் பால் மாவை ஆய்வுக்குபட்படுத்த அவர்கள் பயன்படுத்தியுள்ள முறையானது விவாதத்துக்குரியதாகவே தென்படுகின்றது. ஏனென்றால் டி.சி.டி பால்மா பிரிவுகளில் கலந்துவிடும் என்பதை அவர்கள் ஆரம்ப நிலையிலேயே அறிந்திருக்கவில்லை என்றார் அமைச்சர்.

டி.சி.டி கெடுதல் விளைவிக்காத ஒரு பொருள் என்று கூறப்படுவது பற்றி அமைச்சர் கூறியது:

டி.சி.டி யானது மெலமைன் என்ற இரசாயனத் தன்மையை அடையக்கூடியது. அந்த வகை யில் 2008 ஆம் ஆண்டு சீனாவில் குழந்தைகள் இறப்புகள் எற்பட்டன. எனவே அவர் களின் பரிசோதனைக்கு எமது குழந்தைகளை சீமை எலி களாக பயன்படுத்த அனுமதிக்க முடியாது. அந்த வகையில் எமது தொழில்நுட்ப நிறுவனத்தின் கண்டுபிடிப்பை விமர்சிப் பதற்கு பொன்ரேரா நிறுவனத்துக்கு உரிமை இல்லை என்றார். (ப)

# மோட்டார் சைக்கிள் திருட்டு

கிளிநொச்சி, ஓக. 21

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாற்று வலுவுடைய ஒருவரின் மோட்டார் சைக்கிள் திருடப் பட்டுள்ளது.

கிளிநொச்சி நகருக்குத் தமது தேவையின் நிமித்தம் சென்ற மாற்றுவலுவுடை யவரான கிளி நொச்சி பொன் நகரைச் சேர்ந்த த.சுதாகர் என்பவர் கிளிநொச்சி கச் சேரிக்கு அருகில் கடை ஒன் றின் முன்னே தமது மோட் டார் சைக் கிளை 11 மணியளவில் நிறுத்தி வைத்து விட்டுக் கடைக்குச் சென்று விட்டு வந்து பார்த்தபோது மோட் டார் சைக்கிள் காணாமல் போனதை அறிந்து கொண்டார்.

அயலில் நின் றவர் களுக்கு இது தொடர்பாகக் கூறி விட்டுத் தேடிய போதும் மோட் டார் சைக்கிள் கிடைக் கவில்லை. கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தி லும் அவரால் முறைப் பாடாகப் பதியப்பட்டுள்ளது. (க-426)

# மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவோரின் விவரம் கோருகிறார் உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஓக. 21

வடக்கு மாகாண சபைத் தேர்த லில் போட்டியிடுகின்ற அரச அலு வலர்கள், ஊழியர்கள் ஆகியோ ரின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு வடமாகாண உத வித் தேர்தல்கள் ஆணையாளர் சி.அச்சுதன் சகல திணைக்கள அலுவலகத் தலைவர்களையும் கேட்டுள் ளார்.

அத்துடன் மாகாண சபைத் தேர் தலில் போட்டியிடுகின்ற அமைச் சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடா ளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோ ரின் அண்மித்த உறவினர்கள் பற்றிய விவரங்களையும் தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிட முன் வந்துள்ள அமைச்சு அலுவலகங்க ளின் அலுவலர்கள், அரச நிறுவனங் களின் தலைவர்கள், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஆகியோரின் விவரங்களையும் அனுப்பி வைக்கு மாறும் அறிவித்துள்ளார். (வ-9)

# போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையமும், நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகமும் இணைந்து மாபெரும் விளையாட்டு விழா ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இவ் விளையாட்டு விழாவில் யாழ். மாவட்ட ரீதியாக தாச்சிப் போட்டியும் தென் மராட்சி ரீதியாக கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்டம் ஆகிய போட்டி களையும் நடத்த இருப்பதனால் இப் போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப் பங்களை நாவற்குழி கேரதீவு வீதியிலுள்ள கணேஸ் வெல்டிங் வேலை யகத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகச் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-288)

# 6 மாத காலத்தில் மட்டும் 227 பேர் சேமலாப நிதி திட்டத்தில் இணைவு

வடமாகாண தொழில் திணைக் களத்தில் கடந்த 6 மாத காலப் பகுதிக்குள் 227 பேர் ஊழியர் சேமலாப நிதியத்தில் இணைந்துள்ளனர் என்று வட மாகாணத் தொழில் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கே.கனகேஸ் வரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் தொழில் புரியும் ஊழி யர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் தொழில் தருணர்களால் தொழில் திணைக்களத்தில் செலுத்தப்படவேண்டியது கட்டாயமாகவுள்ளது.

இதன் அடிப்படையில் வடமா காணதொழில் திணைக்களத்தில் கடந்த 6 மாத காலப் பகுதிக்குள் 227 ஊழியர்கள் சேமலாப நிதியத்தில் அங்கத்த வர்களாக இணைக்கப்பட்டுள்ளனர். வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்க ளிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களிலும் இருந்து 227 பேர் இணைக்கப்பட்டுள்ளனர். (வ-14)

# நூலகர்களுக்கு பயிற்சிப் பட்டறை

சாவகச்சேரி, ஓக. 21

தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையால் யாழ். பொது நூலக நிலையரங்கில் நாளை வியாழனும் மறுநாள் வெள்ளிக் கிழமையும் பொது நூலக தினத்தை யொட்டி பயிற்சிப் பட்டறை யொன்று நடைபெற வுள்ளது.

யாழ்ப்பாணம், கிளி நொச்சி மாவட்டங் களில் உள்ள உள்ளூ ராட்சி சபைகளின் பொது நூல கங்களில் பணி புரியும் நூலகர்களுக்கு காலை தொடக்கம் பிற் பகல் வரை இந் தப் பயிற்சிப்பட் டறை நடைபெறவுள்ளது. (ஒ-13)

## புவேந்தன் பாலர் நிலைய சிறுவர்கள் சுற்றுலா

தென்மராட்சி, ஓக. 21

சாவகச்சேரி கண்டு வில் ஒழுங்கை புவேந் தன் பாலர் பகல் பரா மரிப்பு நிலையச் சிறார் கள் முல்லைத்தீவுமாவட் டத்தில் உள்ள பிரபல இந்து ஆலயங்க ளுக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் சிறார் கள் அவர் தம் பெற் றோர் மற்றும் ஆசிரி யைகள் நிலையப் போசகர் ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை விசேடபஸ்ஸில்அழைத் துச் செல் லப்பட்டு வற் றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலயம், புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆல யம்உள்ளிட்டபல்வேறு ஆலயங்களுக்குச் சென்று திரும்பினர். (வ-9)

## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி

**செல்வி கந்தவனம் தர்ஷிகா**

(மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி)

திதி:21.08.2013

சிந்தாமணி விநாயகர் அருளியது 25.05.1990

சிந்தாமணி விநாயகர் கழல் சேர்ந்தது 23.08.2002



கந்துவனம் மனையில்
களித்தூறி மீண்டென்கால்
வந்திடுவாய் என்றேதான்
வரந்தந்தனுப்பினரோ?
சிந்தாமணி கஜனார்
செல்வி தர்ஷிகா மகளே!
சிந்தாமணியின் பாதும்
தித்திக்க வாழி அம்மா!

'கவி போட்டோ', நவாலி தெற்கு.

அப்பா, அம்மா, சகோதரர், சகோதரிகள், உற்றார், உறவினர்.

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

**கணபதிப்பிள்ளை சிவபாதம்**



மண்ணில் 29.06.1936

விண்ணில் 10.09.2003

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எங்களின்
உத்தம தந்தையை உலகினில் மறப்போமா?
நித்தமும் எமது உயர்வுக்காய் உழைத்த
அப்பாவே உங்களை இனியென்று காண்போம்.

(31372) (3)

855, நாவலர் வீதி, அரியாலை.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 26.05.1934

மறைவு 22.07.2013

அமரர்

**சிற்றம்பலம் தம்பிராசா**

(முன்னாள் ஆசிரியர் - யாழ் மத்திய கல்லூரி, இளைப்பாறிய உப அதிபர்- காரைநகர் இந்துக் கல்லூரி)

அன்பின் திருவுருவாய் பண்பின் இருப்பிடமாய்
இன்ப வாழ்வில் எல்லோருக்கும் இனியவராய்
தனக்கென் வாழாப் பிறர்க்குரியானவராய்
கல்வியே கருந்தனமென மாணாக்கர்க்குணர்த்திய
செல்வச் சீமானே! எங்கு நீ மறைந்தாய்?
குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிவீசிப் பிரகாசித்து
தொண்டுகள் பலசெய்த எங்கள் பெருந்தலைவர்
புன்சிரிப்புத் தவழும் முகமும் காந்தக் கண்களும்
இன்சொலால் கவரும் இனிய பண்பும் மறக்கமுடியுமா?
முப்பத்தொரு நாளென்ன முப்பத்தொரு ஆண்டானாலும்
உருவம் மட்டும் உள்ளத்தில் நிழலாடிடுமே!
உங்கள் ஆத்மா ஈழத்துச் சிதம்பரத்தான் திருவடியில்
சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்!

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்து துயரில் பங்கு கொண்டவர் களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அஞ்சலி நிகழ்வுகள் செய்த பாடசாலைகளுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட் டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த 22.07.2013 கனடா, ரொரன்ரோவில் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சிற்றம்பலம் தம்பிராசா அவர்களின் அந்தியேட்டிக்கிரியையும், ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் இன்று (21.08.2013) கனடா, ரொரன்ரோவில் நடைபெறும். நாளை (22.08.2013) வியாழக்கிழமை ந.ப 12 மணியளவில் அவ ரது பிறப்பிடமான பொன்னாவளை, களபூமி, காரைநகரிலுள்ள, இல்லத்தில் நடை பெறும் மதிய போசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

'சி.சங்கரப்பிள்ளை' பொன்னாவளை, களபூமி, காரைநகர்.

(39030)(10,16)

குடும்பத்தினர்.

# 100% பரீட்சையை நோக்கி

புலமை 45




2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான புலமைச்சுடர் கையேடு எதிர்வரும் செப்ரம்பர் 30 ஆம் திகதியிலிருந்து வெளிவர இருக்கின்றது.

இறுதி எதிர்பார்க்கை வினாத்தாள்கள் உள்ளடங்கலாக

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855

வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6188188, 021 5677222



## ஐஸ்கிறீம் வான் விற்பனைக்கு

PZ-xxxx தொடரிலக்கமுடைய Body உடன் நல்ல நிலைலுள்ள TATA Butta ஐஸ்கிறீம் வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு 078 621 4616



## விற்பனைக்கு

TC-xxxx, தொடர் இலக்கத்தை உடைய CT-100 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 257 7496



## காணி விற்பனைக்கு

"புத்தூர் சந்தி, முதியோர் இல்லம், சேர்ச்சுக்குப் பின் பக்கத்தில்"

6½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 679 2967



## பதவி வெற்றிடங்கள்

புதிய தொழில்நுட்ப முறையில் நவீன இயந்திரங்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள Sylo Ice Cream கம்பனிக்கு பின்வரும் வெற்றிடங்கள் உண்டு.

1. Project Manager (அனுபவமுள்ளவர்கள் மட்டும்)
2. கிறீம் மேக்கர்ஸ் (அனுபவமுள்ளவர்கள் மட்டும்)
3. கணக்காளர்
4. விற்பனையாளர்கள்
5. ஐஸ்கிறீம் வான் விற்பனையாளர்
6. ஐஸ்கிறீம் வான் சாரதி
7. ஐஸ்கிறீம் வான் வைத்துள்ளவர்கள்
8. வாகனங்கள் பராமரிப்பாளர்கள்

அனுபவத்திற்கும் செயற்திறனுக்கும் ஏற்ப சம்பளத்துடன் விற்பனை ஊக்குவிப்புத் தொகை, EPF/ETF Insurence என்பன வழங்கப்படும். மாற்றுத் திறனாளிகளும் விண்ணப்பிக்கலாம்.

உடன் தொடர்பு கொள்ளவும்.
*Sylo Food and Baverages (Pvt) Ltd.*
*76, Amman Temple Road,*
*Kokuvil.*
*077 771 0785 (குமார்)* (31490) (7.3)


## பயிற்சி வகுப்புகள்

அரச உத்தியோகத்தர்களுக்காக தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் மும்மொழிப் பயிற்சித் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் சிங்கள மொழியின் வகுப்பு II,III ஆகிய பயிற்சி மொழிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி மொழிகளில் பங்குபற்றவுள்ள உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களின் விவரங்களை உடனடியாக தொலை நகல் அல்லது மின் னஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூசகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவித்துள்ளார். (ரு-9)

## சிறுவனின் கை முறிவு

மதில் மேல் ஏறி விளையாடிய சிறுவன் மதிலிருந்து தவறி விழுந்ததினால் இடது கை முறிந்தநிலையில் நேற்று நண்பகல் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். ஏழாலை மேற்கில் வசிக்கும் றமேஸ் கண்ணா- சிருசாந் வயது-8 சிறுவனே இச்சம்பவத்தில் விழுந்து கையை முறித்துள்ளார். (ஒ-36)


நிதியியலில் சர்வதேச அங்கீகாரமுடைய பிரித்தானியத் தராதரம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான அரிய சந்தர்ப்பம்

CISI
CHARTERED INSTITUTE FOR SECURITIES & INVESTMENT

ADB EKSP
Education for Knowledge Society Project

GATEWAY

கல்வி அமைச்சின் EKSP செயற்றிட்டத்தின் கீழ் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் புலமைப்பரிசில்கள் பற்றிய விபரங்களுக்கு அழையுங்கள்....

021 567 5555


**Invitation For Bid**
**University of Jaffna**
**Construction and commissioning of 6 nos Tube Wells**

1. The Vice Chancellor of the University of Jaffna on behalf of the University Procurement Committee will receive sealed bids for **Construction and Commissioning of 6 nos Tube Wells for the Faculty of Engineering and the Faculty of Agriculture, University of Jaffna at Ariviyalnagar, Kilinochchi.** This work consists of drilling of 200 mm diameter tube wells, construction of pump houses and supplying and installing electrically operated deep well pumps.
2. Interested bidders who have **valid Business Registration and experience** in this field may submit their bids. Bid document can be purchased from the Capital Works & Planning branch of the University of Jaffna upon the payment of non-refundable fee of Rs. 500.00 **until 03.09.2013**. Further information can be obtained from Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna, Thirunelvely, Jaffna (021-2219201).
3. Deadline for submission of bids shall be at **2.00 p.m on 04.09.2013**. The bids will be opened immediately thereafter.

Chairperson, Procurement Committee,
University of Jaffna. (1427)(3)

## கூறுவிலை கோரல்
## வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை

எமது தீவகக் கல்வி வலயத்திற்குத் தேவையான கீழ்க்குறித்த பொருள்கள் விநியோகம் செய்வதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

**பொருள்கொள்வனவிற்கான திட்டம்** - TSEP - 2013
**செயற்றிட்ட இலக்கம்** - NP/41/20/03/TSEP/2013

**கணினி உபகரணங்கள்** Desktop Computer-08, Dot Matrix Printer - 01, Scaner - 01, Camera - 02, Multimedia Projector - 01, Photo Copier - 01

**தளபாடங்கள்** Conference Table With 24 Chairs, Office Table - 08, Office Chair - 08, Filling Cabinet - 05, Stecl Cabinet - 03, Executive Table - 02, Executive Chair - 02

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி -22.08.2013 தொடக்கம் 30.08.2013 பி.ப. 4மணிவரை

கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும். கடைசித் திகதி - 10.09.2013 மு.ப. 10 மணிவரை

* அலுவலக நேரத்தில் எமது அலுவலகத்தின் நிதிக்கிளையில் மீளளிக்க முடியாத வைப்புப்பணம் ரூபா100ஐ செலுத்தி கூறுவிலைப்படிவத்தினைப் பெற்றுப் பூர்த்தி செய்யப்பட்ட கூறுவிலையினை வலயக்கல்வி அலுவலகம். தீவகம், வேலணை எனும் முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். எம்மால் குறிப்பிடப்படும் திகதியில் பொருள்கள் அலுவலகத்திற்கு ஒப்படைக்க வேண்டும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

தி.ஜோன் குயின்ரஸ்.
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை. (சி 11439)(3)

# 10 ஆயிரம் அபராதம்

## அனுமதியின்றி மாட்டிறைச்சி வைத்திருந்தவருக்கு

தென்மராட்சி, ஒக.21
அனுமதிப் பத்திரமின்றி 60 கிலோ மாட்டிறைச்சி வைத்திருந்த கிளிநொச்சி வாசிக்கு சாவகச்சேரி நீதி மன்றில் திங்கட்கிழமை 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் இறைச்சியை அழிக்கவும் உத்தரவிடப்பட்டது.
சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் பச்சை நிற உரப்பையிலிருந்து இரத்தம் வழிந்தோடுவதைக் கண்ட பொதுமக்கள் கடமையிலிருந்த பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.
பொலிஸாரின் அழைப்பை யடுத்து அங்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் பொதி யாருடையது என வினவ ஒருவர் உரிமை கோரினார்.
இதனையடுத்து அதனைப் பிரித்துப் பார்க்கையில்- மாட்டிறைச்சி இருப்பதைக் கண்டு இறைச்சியைக் கைப்பற்றியதுடன் அந்த நபரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.
வழக்கை விசாரித்த நீதிவான் எதிரிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும், சான்றுப் பொருளாக நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்ட இறைச்சியை அழிக்குமாறும் உத்தரவிட்டார். (ந-9)

## மோ.சைக்கிளில் பயணித்த நபர் தூக்கி வீசப்பட்டு காயம்

தென்மராட்சி, ஓக.21
வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியில் பரவப்பட்டிருந்த களி மண்ணுக்குள் சிக்கி சில்லு சறுக்கியதில் அதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டு காயமுற்றார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு வடமராட்சி கிழக்கு நாகர்கோயிலில் இடம்பெற்றது.
மிருசுவில் வடக்கைச் சேர்ந்த ஜெகநாதன் இராஜேஸ்வரி (வயது-35) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இதேவேளை மீசாலை வடக்கைச் சேர்ந்த மயில்வாகனம் சிவகுமார் (வயது-38) என்பவர் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் நேற்று செவ்வாய் அதிகாலை வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டார்.(ஒ-9)

## வெளிநாட்டிலிருந்து வந்த பெண் காவடி

சாவகச்சேரி, ஓக.21
மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவ உற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த திங்களன்று பக்தி பூர்வமாக நடைபெற்றது. இந்த உற்சவத்தில் பெண் பக்தர் ஒருவர் முதுகில் முள் பாய்ச்சியும் அலகில் முள் பாய்ச்சியும் காவடி எடுத்து பக்தர்கள் மத்தியில் தேரின் முன்னால் பக்தி பரவசமாக ஆடினார். இந்தப் பெண் வெளிநாடு ஒன்றில் இருந்து வந்து தமது நேர்த் திக்கடனை நிறைவு செய்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-131)

## மோட்டார் வாகன பழைய இரும்புகள் ஏல விற்பனை

யாழ்ப்பாணம், ஓக.21
யாழ். மேல் நீதிமன்றில் உரிமை கோரப்படாத மோட் டார் வாகனத்தின் பழைய இரும்புகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி மேல் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.
இந்த ஏல விற்பனையில் பங்கு பற்றுவோர் தேசிய அடையாள அட்டையுடன் வருகை தந்து உடனடி யாகப் பணம் செலுத்தி பொருள்களைப் பெற்று வளாகத்தில் இருந்து எடுத்துச் செல்ல வேண்டும் என்று யாழ். மேல் நீதிமன்றச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஓ-14)

## காணிக்குள் தேங்காய் திருடியவர் விளக்கமறியலில்

தென்மராட்சி, ஓக.21
அடுத்தவரின் காணிக்குள் அத்துமீறி தேங்காய்கள் திருடிய நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதி மன்றில் திங்கட் கிழமை உத்தரவிடப்பட்டுள்ளது.
கொடிகாமம் பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப் பட்டது.
அனுமதியின்றி அடுத்தவரின் காணிக்குள் செல்வதும் அங்குள்ள உடைமைகளைத் திருடுவதும் குற்றமாக கருதப் படுமென எச்சரிக்கை செய்து நபரை எதிர் வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ந-9)

---

## மரண அறிவித்தல்

### சினியப்பா செல்லத்துரை இளமுருகன்
(உரிமையாளர் இசையருவி)



நந்தாவில், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் மில்லேன், சண்டிலிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இளமுருகன் 18.08.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-விஜயலட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற இராமசேகரம் மற்றும் பத்மாவதி தம்பதியரின் மருமகனும், ரஜனியின் பாசமிகு கணவரும், இளங்கோவன் (ஜேர்மனி), ஜனனி (3ஆம் வருட முகாமைத்துவபீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்), இளரமணன் (தரம் 13 வர்த்தகப் பிரிவு மாணவன், யாழ். இந்துக் கல்லூரி), செல்வரதன் (தரம் 11 மாணவன், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமுதாம்பிகை, ஞானாகரன் (கனடா), செல்வராசா (நாதன்), சிவகுமார் (பிரான்ஸ்), கமலாம்பிகை, ரவீந்திரன் (அமெரிக்கா), செல்வகுமார் (கனடா), சகாதேவன் (பிரான்ஸ்), ஸ்ரீநிவாசன் (மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர், வவுனியா), குகதாஸ் (கனடா), தணிகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் யோகேந்திரன் (சாரதி.இ.போ.ச), ராகினி, உதயகுமார் (ஜேர்மனி), ரஞ்சினி (ஜேர்மனி), ரமணி, இந்திரகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் சர்மிளாவின் (ஜேர்மனி) மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2013) புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில்லேன், சங்கானை வீதி,
சண்டிலிப்பாய் மேற்கு.
(சி/11429)
தகவல்: இளங்கோ (மகன்)

---

## மரண அறிவித்தல்

### திருமதி அன்ரனிப்பிள்ளை வேஜினி றீற்றா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்ரனிப்பிள்ளை வேஜினி றீற்றா 18.08.2013 அன்று பிரான்ஸில் காலமானார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 21.08.2013 பிரான்ஸில் நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம்.

(சி 11444) (3)
தகவல்: குடும்பத்தினர்.

---

## கண்ணீர் அஞ்சலி



எமது ஸ்தாபனத்தின் கட்டட உரிமையாளரான **ராஜாராம்** அவர்களின் அன்புத் தாயார்

**பரமரத்தினம் (ருக்குமணி) முத்துலிங்கம் செட்டியார்**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜெமெக்ஸ் ஹோட்டல்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(39020) (45.3)
உரிமையாளரும், ஊழியர்களும்.

---

## மரண அறிவித்தல்

### இராமநாதன் வீரவாகு
(நயினாதீவு)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமாதன் வீரவாகு 17.08.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - இலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், சற்குணத்தின் அன்புக் கணவரும், தேவிகா (ஜேர்மனி), தேவதாஸ் (லண்டன்), மோகனதாஸ் (வலயக் கல்வி அலுவலகம்-வேலணை), காலஞ்சென்ற ரேணுகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம், பரமலிங்கம், புனிதவதி மற்றும் தனரெத்தினபூபதி, புஸ்பராணி, பூலோகசுந்தரி, ஞானசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வள்ளியம்மை, காலஞ்சென்ற பூபதி மற்றும் இராசநாயகம், காலஞ்சென்ற கனகசபை மற்றும் சண்முகரெத்தினம், கமலாதேவி, குலசிங்கம், காலஞ்சென்ற விமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுஷாந்த் (ஜேர்மனி), சந்தோஷ், நாகபூஷணி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை (22.08.2013) காலை 7 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.09, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
(31387) (45.6.7)
தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே.021 [illegible]

---

## கண்ணீர் அஞ்சலி

எமது தீவகக்கல்வி வலய ஊழியரான **வீரவாகு மோகனதாஸ்** அவர்களின் அன்புத்தந்தையார்

### இராமநாதன் வீரவாகு

அவர்கள் 17.08.2013 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/11438) (45.3)
நலன்புரி கழகம்,
வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை.

---

## மரண அறிவித்தல்

### திருமதி மனோரஞ்சிதம் மகேசன்

யாழ். கொட்டடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோரஞ்சிதம் மகேசன் 09.08.2013 அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ந.மகேசன் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-செல்லாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி-சிவபாக்கியம் தம்பதியரதும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம்-கமலம் தம்பதியரதும் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.08.2013 திங்கட்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

61, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(31500) (10,3)
தகவல்: குடும்பத்தினர்.

---

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி மனோரஞ்சிதம் மகேசன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.*

திருமதி - வி.மதிவதனி,
(தம்பிச் சித்தப்பா குடும்பத்தினர்)

61, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.
(39021) (3)

---

## மரண அறிவித்தல்



### திருமதி பரமரத்தினம் (ருக்குமணி) முத்துலிங்கம் செட்டியார்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இராமையாச் செட்டியார் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமரத்தினம் முத்துலிங்கம் செட்டியார் நேற்று (20.08.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெகநாதன் செட்டியார்- அன்னப்பா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான இராமையாச் செட்டியார்-மனோன்மணி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற முத்துலிங்கம் செட்டியாரின் அன்பு மனைவியும், ராஜாராமின் அருமைத் தாயும், செல்வராணியின் மாமியும், சாயிமா,டக்ஷாயினி, லிங்காயீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், செந்தில்ராசா செட்டியார், சண்முகரத்தினம் (இந்தியா), மகாதேவா செட்டியார், பூமதி (தென்.ஆபிரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேசரத்தினம், காலஞ்சென்ற R.L.கந்தசாமி செட்டியார் மற்றும் சியாமளாதேவி (ரஞ்சி), V.இராஜேந்திரா ஆகியோரின் மைத்துனியும், குருசுமுத்து- அன்னம்மா தம்பதியரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(21.08.2013) புதன்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக் காகப் பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

236/5, இராமையாச் செட்டியார் லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(39024)(3.5)
இராஜாராம்(மகன்)
021 222 3343
077 991 9562

உதயன்
21/08/2013

## கடலில் தத்தளித்த இருவரை காப்பாற்றிய பொலிஸார்

திருகோணமலை, ஓக.21
திருகோணமலை நிலாவெளி கடலில் உயிருக்குப் போராடிய சுற்றுலாப்பயணிகள் இருவரை நிலாவெளி பொலிஸார் காப்பாற்றியுள்ளனர்.
இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.
நிலாவெளி கடலில் குளிப்பதற்கு இரண்டு சுற்றுலாப் பயணிகள் இறங்கியுள்ளனர். கடல் கொந்தளிப்பு காணப்பட்டதால் கடலில் குளிப்பதற்கு இறங்கிய இருவரும் அலைகளால் அடித் துச்ெல்லப்பட்டு கடலில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தனர்.
இதனைக்கண்ட பொலிஸார் உடன் செயற்பட்டு அவர்கள் இரு வரையும் காப்பாற்றியுள்ளனர். (எ)

# பிரதான வங்கிகள் அனைத்தும் சீன வங்கிகளாக உருமாறலாம்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக.21
நாட்டின் பிரதான வங்கிகள் பெரிய நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளன. இந்த நிலை மேலும் தொடருமானால் பிரதான வங்கிகள் அனைத்தும் சீன வங்கிகளாக மாற்றமடையலாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அச்சம் வெளியிட்டுள்ளார்.
ராஜகிரியவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:



நாட்டின் பிரதான வங்கிகளான மக்கள் வங்கி, தேசிய மேிப்பு வங்கி என்பன பெரிய நிதி நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. மக்களின் பணங்கள் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் வங்கிகள் செயலிழக்கும் நிலை உருவாகலாம். அவ்வாறான நிலை உருவானால் எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும். இந்த நிலையில் இந்த வங்கிகள் எதிர்காலத்தில் சீன வங்கிகளாக உருமாறலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## பெற்றோரின் ஆலோசனையை கேட்க மறுத்து உயிரை மாய்த்த மகன்

தாய் மற்றும் தந்தையின் ஆலோசனையை தாங்கிக் கொள்ள முடியாத சிறுவன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றினால் தனக்குத்தானே உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக நவகத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.
நவகத்தேகம - மகபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதான சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவராவர்.
ஞாயிறு மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இச்சிறுவன் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.
தாய் மற்றும் தந்தையின் ஆலோசனையைத் தாங்கிக் கொள்ள முடியாத சிறுவன் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## இலவச ஆயுள்வேத மருந்தகம் நவாலியில் இன்று திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21
வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நவாலிப் பகுதியில் ஆயுள்வேத மத்திய மருந்தகம் இன்று புதன் கிழமை மு.ப. 9 மணிக்கு ஹேமலதா ஞாபகார்த்த நிதியத்தால் திறந்து வைக்கப்படவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி திருமதி அன்பரசி கேதீஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.
"குறித்த மருந்தம் வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சி.துரைரட்ணத்தின் அனுமதியுடன் ஆரம்பிக்கப்படுகிறது. இங்கு வாரத்தில் இரு நாள்கள் சேவை இடம் பெறும்" என்று ஹேமலதா ஞாபகார்த்த நிதியத் தலைவர் செ.ரமேஷ் தெரிவித்தார். (ங)

## நீர் மற்றும் வளத்துறையினை மேம்படுத்த நாடுகள் முன்வந்தன

நீர் மற்றும் வளத்துறையினை பரஸ்பரம் மேம்படுத்த இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகள் முன்வந்துள்ளன.
பாகிஸ்தானிய நீர் மற்றும் வளத்துறை ராஜாங்க அமைச்சர் அபட் அலியுடனான சந்திப்பின் போதே இது குறித்து தீர்மானிக்கப்பட்டது.
நீர் விநியோக மற்றும் வடிகால் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரண்டாவது சர்வதேச நீர் கூட்டுறவு தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பாகிஸ்தானிய அமைச்சர் இலங்கை வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நுவரெலியா மாநகர சபைக் கட்டடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## ஜூலையில் 729 சொகுசு வாகனங்கள் இறக்குமதி

கொழும்பு, ஓக.21
729 அதிசொகுசு மோட்டார் வாகனங்கள் கடந்த மாதத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டதாக சுங்கப் பகுதியின் தகவல் மார்க்கங்கள் தெரிவிக்கின்றன.
கடந்த ஜூலை மாதத்தில் 135 சொகுசு மோட்டார் கார்களும் ஏனைய வகைகளைச் சேர்ந்த 594 சொகுசு வாகனங்களும், இறக்குமதி செய்யப்பட்டன. வரிச் சலுகைகளுடனான சொகுசு வாகனங்களை அதிக அளவில் இறக்குமதி செய்து கொள்வதற்கு அனுமதிப் பத்திரங்களை வழங்கியமையே இதற்குக் காரணமாக இருப்பதாக நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மக்கள் வங்கிக்கு மீளச் செலுத்த தவறியுள்ள கடன் ரூ.4,063 கோடி

கொழும்பு, ஓக.21
மக்கள் வங்கியில் 4,063 கோடி ரூபா கடன்கள் மீளச் செலுத்தப்படாமல் இருப்பது தெரிய வந்துள்ளது.
கடந்த 2012 ஒக்டோபர் 25 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த "கோப்" அறிக்கையில் இந்த விடயம் வெளிப்பட்டுள்ளது.
மக்கள் வங்கியென்பது அரசுக்குச் சொந்தமான பிரதானமான இரு வர்த்தக வங்கிகளுள் ஒன்றாகும். மக்கள் வங்கியின் வைப்பில் இடப்பட்ட மக்களின் பணத்தில் 3,138 கோடி ரூபாய்களுக்கு மேற்பட்ட பணத்தை 52 வர்த்தகர்கள் கடன்களாகப் பெற்றுள்ளதோடு, அக்கடன்களைத் திருப்பிச் செலுத்தாதுள்ளனர்.
இவ்விதம் நபர் ஒருவரால் திருப்பிச் செலுத்தாது விடப்பட்ட பணத் தொகையானது 60 கோடியே 35 லட்சங்களுக்கும் மேற்பட்டதாகும்.
மேலும் வங்கியிலிருந்து மேலதிகப் பற்றுக் கடன் வசதிகளைப் பெற்றுள்ள 22 பேர் 177 கோடியே 82 லட்சத்து 24 ஆயிரத்து 427 ரூபா செலுத்தாது உள்ள னர்.
மேலும் 109 வாடிக்கையாளர்கள் 587 கோடியே 78 லட்சத்து 12 ஆயிரத்து 467 ரூபா செலுத்தாது உள்ளனர்.
செலின்கோ குழுமத்திலிருந்து 11 கோடியே 71 லட்சம் ரூபாவும் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் பங்குகள் கொள்வனவு



செய்யப்பட்டதால் 29 கோடி ரூபா வரையில் நட்டம் ஏற்பட்டுள்ளது.
மக்கள் வங்கி மாத்திரமே வெளிச்சத்துக்கு வந்துள்ளது. அரசுக்குச் சொந்தமான ஏனைய வர்த்தக வங்கியான இலங்கை வங்கி மற்றும் அரசுக்குச் சொந்தமான வர்த்தக வங்கியல்லாத தேசிய சேமிப்பு வங்கி சம்பந்தமான தகவல்கள் இந்த "கோப்" அறிக்கையில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. (எ-22)

# மருந்து விஷமாகி 85 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு

கொழும்பு, ஓக.21
மருந்து விஷமாகியதன் காரணமாக கடந்த மூன்று மாத காலப் பகுதியில் 85 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டதாக விஷங்கள் தொடர்பான தேசிய மையம் தெரிவிக்கிறது.
நிர்ணயிக்கப்படும் அளவை விட அதிகளவில் பரசிற்றமோல் வில்லைகளைப் பயன்படுத்தியமை காரணமாகவே மருந்து விஷமாகி பெருமளவிலானோர் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.
மருந்து விஷமாகி வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டவர்களில் பெண்களே அதிகமாக உள்ளனர்.
அதிக அளவில் பரசிற்றமோலை பயன்படுத்துவதன் காரணமாக ஈரலுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதன் காரணமாக சிறோஸிஸ் நோய்க்கு ஆளாகி உயிரிழப்பும் ஏற்பட வாய்ப்பிருப்பதாக தேசிய மையம் மேலும் தெரிவிக்கிறது. (எ-22)

**நிர்ணயிக்கப்படும் அளவை விட அதிகளவில் பரசிற்றமோல் வில்லைகளைப் பயன்படுத்தியமை காரணமாகவே மருந்து விஷமாகி பெருமளவிலானோர் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.**


## மரண அறிவித்தல்

### செல்வி பசுபதிப்பிள்ளை யோகாம்பிகை மணி (USA)



சரவணைமேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பசுபதிப்பிள்ளை யோகாம்பிகை (மணி,USA) கடந்த (15.08.2013) வியாழக்கிழமை அமெரிக்காவில் அகாலமரணமானார்.
அன்னார் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை -அமிர்தவல்லி தம்பதியரின் அன்பு மகளும், கௌசலாதேவி (colombo), அமிர்தகௌரி (பிரான்ஸ்), பாலகௌரி (நவாலி வடக்கு), தேவதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சச்சிதானந்தசிவம், தயாநிதி ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் (SP HI)-அமிர்தசுரபி(புலவர் வீதி, நவாலி வடக்கு) ஆகியோரின் பெறாமகளும், பரிமளாநாயகி, பத்மயா, மதுனாளினி, யாழினி, திருமாவளவன், கரிகால்வளவன், அனபாயவளவன், யோகநாதன், மகேந்திரன், இளங்கோ(புலவர் வீதி, நவாலி வடக்கு), ஆகியோரின் அன்பு மைத்துனியும், குணாளினி, பார்த்தீபன், துர்க்காயினி, அமிர்தினி, ஆகியோரின் அன்பு மாமியும், ராமுவின் உடன் பிறவா அன்புச் சகோதரியும் ஆவர்.
அன்னாரின் பூதவுடல் இன்று(21.08.2013) புதன்கிழமை அமெரிக்காவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புக்கு:-
சு. திருமாவளவன்(USA) 781 7843955
த. கரிகால்வளவன்(USA)5088792727
க. யோகநாதன் (COLOMBA) 2345603
ந. இளங்கோ (Navaly North)077 1739237
ப. தேவதாசன் (France) 0134810865
சே. மகேந்திரம்(France) 09- 54067658

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# கூட்டமைப்பு 30 ஆம் திகதி நவிப்பிள்ளையுடன் சந்திப்பு

அத்துடன் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பிலும், வட மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளது.
இலங்கைக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேசுவதுடன் வட பகுதிக்கும் பயணத்தை மேற் கொள்ள வுள்ளார். அவர் இலங்கையை விட்டு வெளியேற முன்னர் எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப் பினரைச் சந்திக்கவுள் ளார். சந்திப்புக்கான அழைப்பு கிடைக் கப்பெற்றுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலை மையிலான குழு அவரைச் சந்திக்கும் என்று சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

(த-5)

# கையறு நிலையில் தேர்தல் ஆணையாளர்

இடம்பெற்ற இராணுவத்தினரின் உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வில் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஆளும் கட்சி வேட்பாளர் றெமிடியஸ் பங்கெடுத்திருந்தார்.
இதனை அறிந்த தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்றபோது குறித்த வேட்பாளர் தலைமறைவானதுடன் அங்கு சென்ற தேர்தல் திணைக்கள அதிகாரிகளையும் படையினர் மிரட்டியுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் கூறியதாவது:
தேர்தல் காலத்தில் இராணுவப் பிரசன்னம் இருக்கக் கூடாதென்று நாம் இவ்வாறான காரணங்களுக்காகத்தான் முன்னரே வலியுறுத்தியிருந்தோம். நீதியானதும் சுதந்திரமான துமான தேர்தல் இடம்பெறாது என்பதற்கு இந்தச் சம்பவம் நல்லதொரு எடுத்துக்காட்டு.
வழமையாகத் தேர்தல் விதிமுறைகளை மீறி நடத்தப்படும் கூட்டம், தேர்தல் திணைக்கள அதி காரிகளால் நிறுத்தப்படும். இங்கு இராணுவத் தினரால் கூட்டம் நடத்தப்பட்டமையால் தேர்தல் திணைக்களத்தினராலேயோ, தேர்தல்கள் ஆணை யாளராலேயோ எந்த விதமான நடவடிக்கை களும் எடுக்க முடியாத கையறு நிலை ஏற் பட்டுள்ளது.
இவ்வாறானதொரு நிலையில் வடமாகாண சபைத் தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும். எனவே தான் இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (த-5)

# ஈழ அகதிகள் மூவரை நாடுகடத்த உத்தரவு

னையில் உள்ள சட்டவாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர் களின் உதவியை நாடியுள்ளனர் எனத் தகவல்கள் தெரி விக்கின்றன.
செங்கல்பட்டில் உள்ள வருவாய்த்துறை அதிகாரிகள் தன்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நாடு கடத்தல் தொடர்பான தகவலைத் தெரிவித்ததாக, தற்போது திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஈழநேரு தெரிவித்துள்ளார். செங்கல்பட்டு சிறப்பு முகாமில் இருந்து விடுவிக் கப்பட்ட செந்தூரன் தற்போது தாம்பரத்தில் தங்கி யுள்ளார்.
அதேவேளை, ஆஸ்திரேலியாவுக்கு ஆள்களை அனுப்ப முயன்ற வழக்கில் சிறைத் தண்டனை பெற்ற இத்தாலி ராஜன், புழல் சிறையில் சிறைவாசம் அனுபவித்து வருகிறார்.
இவர்கள் மூவருக்கு எதிராகவும், இலங்கையில் வழக்குகள் உள்ளதாகவும், குறிப்பாக, விடுதலைப் புலிகளுக்கு விநியோகங்களை மேற் கொண்டதாக செந்தூரன் மீது வழக்கு உள்ள தாகவும் கூறப்படுகிறது.
தன்னையும் மேலும் இரண்டு பேரையும் இலங்கைக்கு நாடு கடத்த இந்திய அரசு உத்தர விட்டுள்ளதாக, செங்கல்பட்டு வருவாய்துறை அதிகாரி நேற்றுக் காலை தனக்குத் தெரியப்படுத்தியுள்ளதாக ஈழநேரு தெரிவித்துள்ளார்.
இதற்காக கடவுச்சீட்டு அளவு ஒளிப்படம் மற்றும் பிறப்புச் சான்றிதழ்களை ஒப்படைக்குமாறு தான் கேட்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (த).

# வடக்கில் இராணுவத் தலையீடு தேர்தல் அமைப்புகள் கண்டனம்

ரிகள் இராணுவத்தினரால் மிரட்டப்பட்டுள் ளனர்.
குறித்த சம்பவம் தொடர்பில் இந்த அமைப்புகள் கண்டனம் வெளி யிட்டுள்ளன.
இதுகுறித்து 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்திதென்னக்கோன்தெரிவித்ததாவது-
"யாழ். நாவாந்துறையில் இராணு வத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் எம்.றெமிடியஸ் கலந்துகொண்டது குறித்து கபே அமைப்பு வியப்படைகின்றது.
சட்டத்தரணியான றெமிடியஸுக்கு தேர்தல் சட்டங்கள் தொடர்பில் சிறந்த அனுபவம் இருக்கின்றது. எனவே, இராணுவத்தினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் பங்கேற்றதன் மூலம் தேர்தல் பிரசார நடவடிக்கையில் இலாபம் பெறமுயற்சித்துள்ளார். இது சட்டவிரோத நடவடிக்கையாகும்.
இவ்வாறானதொரு சம்பவம் மீண்டும் இடம் பெறாமல் இருப்பதற்கு சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களும், செயலாளர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
தேர்தல் நடவடிக்கையில் எந்த வொரு சந்தர்ப்பத்திலும் இராணுவம் ஈடுபட முடியாது. தேர்தல் செயற்பாடு என்பது சிவில் நிர்வாகத்தின் ஒரு பாகமாகும். பாதுகாப்பு தரப்பு தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது எனக் கட்சித் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் தேர்தல் ஆணையாளர் இணக் கப்பாட்டுக்கு வந்தார்.
அதேவேளை, நாவாந்துறை சம்பவம் தொடர்பில் தேர்தல் திணைக்களத்துக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு இணங்க, தேர்தல் அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்றவேளை, இராணுவத்துக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. தேர்தல் அதிகாரிகள் தமது கடமையைச் செய்வதற்கு சுதந் திரம் அளிக்கப்படல் வேண்டும்.
வடக்குக்குச் சென்றுள்ள தேர்தல் ஆணையாளர் இது தொடர்பாகக் கவனம் செலுத்துவார் என நம்புகிறோம்" - என்றார்.

# கூட்டமைப்பின் வேட்பாளர் மீது யாழ். நகரில் நேற்று தாக்குதல்

அப்போது வேட்பாளர் அங்கஜனின் தந்தையார் இராமநாதன், கண்ணாடியால் காரைநகர் தவிசாளரைத் தாக்க முயன்றார். மறு புறத்தில் அவரது உதவியாளர் ஒருவர் சாரதி ஆசனத்திலிருந்து எனது பக்கமாக வந்து எனது வாகனக் கண்ணாடியை உடைத்தார். இதனால் நான் காயமடைந்தேன்.
இராமநாதன் சிங்களத்தில் தனது குழுவினருடன் உரையாடிக்கொண்டு பிஸ்டலை எடுக்குமாறு கூறினார். அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு இரண்டு பொலிஸார் பிஸ்டலுடன் வருவதைக் கண்டதும் இராமநாதன் குழுவினர் அங்கிருந்து ஓடித் தப்பினர்.
இவற்றை நான் எனது கைத் தொலைபேசியில் வீடியோ எடுத்ததை கண்ட இராமநாதன் அதனைப் பறிக்க முற்பட்டார் -என்றார்.
இதன் பின்னர் சம்பவ இடத்தில் இராணுவத் தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டுப் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.
சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் தாக் கப்பட்ட தம்பிரா சாவை பொலிஸ் நிலையத் துக்கு வந்து முறைப்பாடு செய்யுமாறு வற்புறுத்தினர். எனினும் அவர் தாக்குதல் நடைபெற்ற இடத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்குள் இரா மநாதன் நிற்கிறார் என்றும் அவரை கைது செய்யுமாறும் பொலிஸாருக்கு தெரிவித்ததுடன், குறித்த வர்த்தகநிலையம்முன் பாக இருந்து போராட்டம் நடத்தினார்.
நீண்ட இழுபறியின் பின்னர் அவரைப் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.
இது குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி வேட்பாளரும் இராமநாதனின் மகனுமான அங்கஜனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, சம்பவத்தை அவர் முற்றாக மறுத் தார். தனது கடைக்கு வந்த தம்பிராசா, நீங்கள் இங்கு வியாபாரம் தான் செய்யலாம். அரசியல் செய்ய முடியாதென்றும் தெரிவித்ததுடன் கடை ஊழியர்களையும் மிரட்டி உள்ளார் என்றும், எங்களைக் கெட்டவர்களாகக் காட்டி தாங்கள் அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பதாகவும் அங்கஜன் தெரிவித்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ். மாவட்டத் தேர்தல் ஆணையாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, தொலைபேசி ஊடாக குறித்த வேட்பாளர் முறைப்பாடு செய்தார். நான் பொலிஸாருக்கு இதுபற்றி அறிவிப்பதாக அவரிடம் தெரிவித்தேன். அத்துடன் தேர்தல் விதிமுறைகளை மீறி அவர்கள் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவதை ஒளிப்படம் எடுத்து ஆதாரத்துடன் சமர்ப்பிக்குமாறும் தெரிவித்தேன் - என்றார்.
இதேவேளை, குறித்த தாக்குதல் சம்பவத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதன்மை வேட்பாளரான தவராசா கடுமையாகக் கண்டித்துள்ளார்." தேர்தல் பிரசாரத்தில் எவரும் வன்முறையை பிரயோகிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல" என்று அவர் தெரிவித்துள்ளார்.

(த-5-17)


## தொலைந்துவிட்டது

கோபிந்திரனாதன், சிவனேஸ்வரி 'என்பவரின் தேசிய அடையாள அட்டையைக் கண்டு எடுத்துக் கொடுப்பவருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (கொடிகாமம் To நெல்லியடி) Bus

(37685)(3) தொடர்பு : 077 198 2192

## லப்டொப்கள் தேவை Used Laptops

நல்ல நிலையில் உள்ள பாவித்த லப்டொப்கள் கணினிகள் தேவை. 0779086737

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## வேலையாள்கள் தேவை

01. சாரதி (கனரக வாகனம் செலுத்தக்கூடியவர்)
02. சாரதி உதவியாளர் (பொருள்களை ஏற்றி இறக்கக்கூடியவர்)

தொடர்புகளுக்கு:- ராஜா ஸ்ரோர்ஸ், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்
0777 890398

## வீடு, காணி விற்பனைக்கு

ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை நாயன் மார்க்கட்டில் (2¾ பரப்பு) வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- 0779873361

## கணிதம் / விஞ்ஞானம்

ஆங்கிலமொழி, தமிழ்மொழிமூலம் 6இல் இருந்து GCE O/L வரை ஆங்கிலமொழி மூல பட்டதாரி ஆசிரியரால் மிகச் சிறப்பாக தனிப்பட்ட முறையில் ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும். பிரபல கல்லூரிகளில் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியர், பெற்றோர்கள் மட்டும்.

தொடர்பு: 077 242 3400, 077 887 1217 (39029)(10,16)


## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ சிவசுந்தரசர்மா சுந்தரராசகுருக்கள்

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ சிவசுந்தரசர்மா சுந்தரராசகுருக்கள் கடந்த 17.08.2013 காலமானார்.

அன்னார் சுபத்திரா, கலியாணி, கெங்கேஸ்வரி ஆகியோரின் கணவரும் கணேசகுருக்கள், ராகுலன், யதுகுலன், சர்மிளா, கோகுலன், யதுர்சனா, யடிலன், சுவர்யெலாவினா ஆகியோரின் தந்தையும் காயத்திரி, கரிகரகுருக்கள், கிரிராஜசர்மா (உடுவில்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2013) புதன்கிழமை இந்தியாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(39043) தகவல்: மருமகன் கிரிராஜசர்மா (உடுவில்)


## பதவி வெற்றிடம் (Annai Naga Food city)

விற்பனை உதவியளார்கள் (ஆண்கள்)
வேலை நேரம்: 01.00P.M. -10.00P.M.
அடிப்படைத் தகைமை: G.C.E.(O/L)
வயதெல்லை: (18-35)
அடிப்படைச் சம்பளம்: 9000/=
இடம்: 175,கே.கே.எஸ். றோட்.
காலம்: 21.08.2013-30.08.2013
நேரம்: 10.00A.M. -01.00P.M.
மேலதிக விபரங்களுக்கு:
077 477 3481/021 739 0191 (C/11443) (6)

## குறைந்த விலையில் சொகுசான பயணம்

கொழும்பு - சென்னை - கொழும்பு
சேவை Rs. 13,500/-
one way Rs. 7,430/- upwards
திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்




கொழும்பு/சென்னை/திருச்சி/சென்னை/கொழும்பு
Rs. 20,700 upwards & Stopover allowed in Chennai
கொழும்பு/சென்னை/மும்பாய்/சென்னை/கொழும்பு
Rs. 28,600 upwards & Stopover allowed in Chennai

✓ Baggage allowance 37 kgs.
✓ Complementary Meals provided
✓ Groups fares offer only over 10 passengers.

AIR - INDIA express

Contact for further information: www.airindiaexpress.in
World of Hayleys
47, Stanley road, Jaffna. Ph: 021 2221878, 0777730818

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள BAIRAHA Chickan கடைக்கு அனுபவமுள்ள ஆண், பெண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 077 734 8883

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி கிராம்புலில் 2 -3 பரப்புக்காணித்துண்டு கள் (15 பரப்பு) விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம்.

தொடர்பு: 072 966 4616, 075 741 7536

## வீடு விற்பனைக்கு

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில், யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில் வீடுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 305 0469, 077 259 8250

## பணிப்பெண் தேவை

சமையலுக்கும் நோயுற்ற ஒரு அம்மாவுக்கு உதவவும் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய ஒரு பெண் தேவை. ஏனைய விவரம் நேரில் பேசிக் கொள்ளலாம்.

கண்ணன்
244/4, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### கந்தையா மதியாபரணம்



மாரீசன் கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும் மாவத்தை அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா மதியாபரணம் நேற்று (20.08.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரசிங்கம் கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குகதாஸின் (முன்னாள் ஆசிரியர், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி) அன்புத் தாயும் பவானியின் பாசமிகு மாமியும் சகானா, மோசீகீரன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), ரசிகரன் (யா/மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2013) புதன்கிழமை 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவத்தை, அளவெட்டி மத்தி, அளவெட்டி. (39042)

தகவல்: குகதாஸ், பவானி

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 21
நவாலி.சென்பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கு.நேசராஜா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று புதன்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள்.

பி.ப. 3.30 மணி
இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஊரெழு விளையாட்டுக் கழகம்.

பி.ப 4.30 மணி
பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் எதிர் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகம். (ற-23)

— — — — — — — —

யாழ்ப்பாணம், ஓக. 21
மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று புதன்கிழமை கழக மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
7 மணிக்கும் இடம்பெறும் முதலாம் சுற்று ஆட்டம் ஒன்றில் கைதடி குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கெருடாவில் ஐங்கரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
அதில் வெற்றிபெறும் அணி 9 மணிக்கு இடம்பெறவிருக்கும் காலிறுதியாட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியுடன் மோதவுள்ளது.
8 மணிக்கு இடம்பெறவுள்ள காலிறுதியாட்டம் ஒன்றில் மீசாலை சீமா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கச்சாய் சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)



— — — — — — — —

யாழ்ப்பாணம், ஓக. 21
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று புதன்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரம்:

பி.ப. 4 மணி
நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் செஞ்சுடர் விளையாட்டுக் கழகம். (ற-23)

# "இளைஞர்களின் போரில்" கரவெட்டி ஞானம்ஸ் வாகை

பருத்தித்துறை, ஓக. 21
கிரிக்கெட் வீரர்களிடையே நட்புறவை ஏற்படுத்தும் விதமாக கொக்குவில் ஏபி விளையாட்டுக் கழகத்துக்கும் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற "இளைஞர்களின் போர்" என வர்ணிக்கப்படும் மென்பந்தாட்ட ஆட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் 31 ஓட்டங்களால் வெற்றியடைந்தது.
கடந்த வெள்ளிக்கிழமை ஞானம்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றியடைந்த கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தனர்.
ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிய அந்த அணியினர் ஓட்டங்களை வேகமாக குவித்தனர். எனினும் பின்கள வீரர்கள் பெரிதளவில் சோபிக்காத நிலையில் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது கரவெட்டி ஞானம்ஸ்.
அவ் அணியின் சார்பாக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ஜொனி 22 ஓட்டங்களையும், துஷ்யந்தன் 15 ஓட்டங்களையும், அகிலன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்து வீச்சில் கொக்குவில் ஏபி அணி சார்பாக சாஜித் மற்றும் பாத்தீபன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், கிருபரன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
81 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பாட ஆரம்பித்த கொக்குவில் ஏபி விளையாட்டு கழகத்தினர் மிகவும் நிதானமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினர். இலக்குகள் கைவசம் இருந்தபோதும் ஓட்ட வேகம் மிகக் குறைவாகக் காணப்பட்டது. அதனால் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் 15 ஓட்டங்கள் என்ற ஓட்ட வேகம் தேவைப்பட்டபோதும், கொக்குவில் ஏபி அணியினர் சடுதியாக இலக்குகளை இழந்தனர். முடிவில் பத்துப் பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது கொக்குவில் ஏபி அணி.
துடுப்பாட்டத்தில் பார்த்தீபன் 13 ஓட்டங்களையும், உத்தமன் 8 ஓட்டங்களையும், கிருபரன் 6 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.
பந்து வீச்சில் ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தின் குணதீபன் மற்றும் துவாரகன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், சேந்திரன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
ஆட்டநாயகனாக கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஜொனி தெரிவு செய்யப்பட்டார். (ற-34)

மட்டுவில் ஐங்கரன் கரப்பந்துத் தொடர்


## போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம், ஓக. 21
மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம், கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மீசாலை சீமா விளையாட்டுக் கழக அணி மோதியது. அதில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மறவன் புலோ அம்பிகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது. அதில் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

# பொதுநலவாய விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சிகளுக்கு வடமாகண வீரர்கள் தெரிவு

வலி.வடக்கு, ஓக. 21
பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் வீர, வீராங்கனைக்கான இரண்டாம் கட்டப் பயிற்சிகளுக்கு வடமாகாணத்தில் இருந்து 12 வீர, வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
2018ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளும் தேசிய மட்ட மெய்வல்லுநர் அணியில் சிறந்த கனிஸ்ட குறுந்தூர ஓட்ட வீரர்களை இணைத்துக்கொள்வதற்காக மாகாணங்கள் ரீதியாக மேற்கொள்ளப்பட்டுவரும் தெரிவு நிகழ்ச்சித்திட்டத்தின் வடமாகாண வீர வீராங்கனைகளுக்கான பயிற்சியும் தெரிவு கடந்த 15 ஆம், 16ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.
மேற்படி பயிற்சி, தெரிவுகளை விளையாட்டு அமைச்சின் வளவாளராகிய சுசந்திகா ஜெயசிங்க மற்றும் எதிர் வீரசிங்கம் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர். இதில் வடமாகாணப் பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகளில் மிகச்சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய 20 குறுந்தூர ஓட்ட வீர வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தனர்
இவர்கள் அனைவருக்கும் இருநாள்கள் பயிற்சி வழங்கப்பட்டு இறுதியில் 12 வீர, வீராங்கனைகள் மேலதிக பயிற்சிக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான மேலதிக பயிற்சிகள் எதிர்வரும் செம்ரெம்பர் 3,4 ஆகிய இரு தினங்களும் கொழும்பில் நடைபெறும் என வளவாளர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் 12 வீர வீராங்கனைகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.



யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட ஏழு பேரும், வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட மூன்று பேரும், மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட இரண்டு பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.
13, 15, 21 வயதுப் பிரிவுகளில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.
தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம்:
யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சோந்த 13 வயதுப் பிரிவு எஸ்.டிலக்சன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), என்.விதுசனா ( கொக்குவில் இந்துக் கல்லூரி), 15 வயதுப் பிரிவு ஜீ.ஜ.கோல்ட்சஜன் (யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி), கே.டிலக்சன் (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) எஸ்.செந்தூரியன் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), யு.மஞ்சிதா (யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), 21 வயதுப் பிரிவு சி.மடோன் எல்விஸ் (யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி).
வலிகாமம் கல்வி வலயம் 13 வயதுப் பிரிவு ஜே.பிரவின்ரன் (இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரி) 15 வயதுப் பிரிவு கே.நீபத்ராஜ்ஜோய்சன் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி) எம்.கஜவரன் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி).
மன்னார் கல்வி வலயம் 13 வயதுப் பிரிவு எ.அனுசலா (மன்னார் கற்கிடந்தகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), எஸ்.பிரியதர்சினி (மன்னார் கௌரியம்பாள் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை). (றீ-86)

# தேசிய மட்டப் போட்டிகள் 7 ஆம் திகதி

கொழும்பு, ஓக. 20
அகில இலங்கை பாடசால்லைகளுக்கு இடையிலான தேசிய மட்டப் போட்டிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.
இரண்டு கட்டங்களாக இடம்பெறவுள்ள பெருவிளையாட்டுக்களில் முதலாம் கட்டத்தில் 7 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை ஜிம்மாஸ்ரிக் போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கிலும்-
அதே தினங்களில் கூடைப்பந்தாட்டம் ராஜகிரிய வித்தியாலயம், சென். ஜோசப் வித்தியாலயம், சென்.பீற்றர்ஸ் கல்லூரி ஆகிய மைதானங்களிலும்-
அதே தினத்தில் உதைபந்தாட்டப் போட்டிகள் அநுராதபுரம் சிறைச்சாலை விளையாட்டரங்கு, அநுராதபுரம் மகாஜனா விளையாட்டரங்கு மற்றும் அநுராதபுரம் ஜோசெப் வித்தியாலயம் ஆகியவற்றிலும்-
கபடிப்போட்டிகள் வவுனியா தேசியக் கல்விலியல் கல்லூரியிலும்-
கிரிக்கெட் மற்றும் கரம் என்பன மட்டக்களப்பிலும் இடம்பெறவுள்ளன.



9, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் ஹொக்கிப் போட்டிகள் கொழும்பு ஹொக்கிச் சம்மேளன மைதானம், சானிக்க விளையாட்டரங்கு மற்றும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க விளையாட்டரங்கிலும்-
பூப்பந்தாட்ட மற்றும் மேசைப்பந்தாட்டம் என்பன 8ஆம், 9 ஆம் திகதிகளில் கல்கிசை சென்.தோமஸ் உள்ளரங்கிலும்-
நீச்சல் போட்டிகள் 7ஆம், 8ஆம் திகதிகளில் சுகததாஸ நீச்சல் தடாகத்திலும்-
உடற்பயிற்சிப் போட்டிகள், சைக்கிளோட்டம் என்பன 7ஆம், 8 ஆம திகதிகளில் அனுராதபுரத்திலும் இடம்பெறவுள்ளன.
தொடர்ந்து 14 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை இடம்பெறும் இரண்டாம் கட்டப்போட்டிகளில் குத்துச்சண்டை சுகததாஸ உள்ளரங்கிலும், கரப்பந்தாட்டம், தேவி சாமர மகா வித்தியாலயத்திலும், ரெனிஸ் ரெனிஸ் சம்மேளனத் தலைமையகத்திலும், மல்யுத்தம் கொழும்பு அசோக வித்தியாலயத்திலும், கராத்தே விகாரமாதேவி மகளிர் வித்தியாலயத்திலும்-
எல்லே பணாந்துறை ஹவத்துவ விளையாட்டரங்கிலும், எறிபந்து தங்வெல்ல ராஜ சிங்க மத்திய மகா வித்தியாலயத்திலும், பளுதூக்கல் போட்டிகள் பிலிமத்லாவ சீரனந்த மகாவித்தியாலயத்திலும், சதுரங்கம் கண்டி கிங்ஸ் ஆட் வித்தியாலயத்திலும், ஜீடோ, கம்பளை விக்கிரமபாகு மத்திய மகாவித்தியாலயத்திலும்-
அரை மருதன் பாணந்துறை ஸ்ரீ சுமங்கல ஆண்கள் வித்தியாலயத்திலும், வலைப்பந்தாட்டம் வியாங்கொட சின்ன தேசிய கல்வியியற் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.
தொடர்ந்து இறுதி நிகழ்வாக தடகள மற்றும் மைதான நிகழ்வுகள் ஒக்ரோபர் 2 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கிலும் இடம்பெறவுள்ளன. (ற-400)

## போட்டி முடிவுகள்

நவாலி சென்.பீற்றர்ஸ் வி.க. உதைபந்துத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக. 21
நவாலி.சென்பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கு.நேசராஜா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் பாஷையூர் சென்.அன்ரனிஸ், இளவாலை யங் கென்றிஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன.
முதல் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங் கென்றிஸ் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் இளவாலை யங் கென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றெஞ்சஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)



# ‘20/20’ தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு



இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும் இங்கிலாந்து அணிக்குமிடையிலான '20/20' சர்வதேச கிரிக்கெட் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஷஸ் தொடரைத் தொடர்ந்து இந்த மாதம் 29ஆம் திகதி மற்றும் 31ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள '20/20' சர்வதேசக் கிரிக்கெட் தொடருக்கான இங்கிலாந்து அணியே அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ருவேர்ட் புரோட் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த அணியில் இங்கிலாந்தின் வழக்கமான '20/20' அணி வீரர்களோடு அண்மைக் காலத்தில் ஆட்டங்களில் பங்குபற்றியிருக்காத வீரர்களுக்கும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. உலகக் கிண்ண '20/20' தொடர் அடுத்தாண்டு பங்களாதேஷில் ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கான அணியைத் தயார்படுத்துவதைக் கருத்திற் கொண்டு இந்த அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

13 பேர் கொண்ட அணியாக அறிவிக்கப்பட்டுள்ள இந்தக் குழாமில் இங்கிலாந்தின் நட்சத்திர வீரர் கெவின் பீற்றர்சனுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. ஆஷஷ் தொடரையடுத்து அவருக்கு ஓய்வு தேவைப்படும் என்பதைக் கருத்தில் கொண்டே அவர் அணியில் சேர்க்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அறிவிக்கப்பட்டுள்ள அணி:
ஸ்ருவேர்ட் புரோட், ரவி போப்பாரா, டனி பிறிக்ஸ், ஜொஸ் பட்லர், மைக்கல் கர்பெரி, ஜேட் டேர்ண்பக், ஸ்டீவன் பின், அலெக்ஸ் ஹேல்ஸ், மைக்கல் லம்ப், ஒய்ன் மோர்கன், போய்ட் ராங்கின், ஜோ றூட், ஜேம்ஸ் ட்ரெட்வெல், லூக் ரைட். (ற)

குடிபோதையில் ரகளை

# சசக்ஸ் அணியில் இருந்து தூக்கப்பட்டார் பனேசர்

குடிபோதையில் ரகளையில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளரான மான்டி பனேசர், சசக்ஸ் கவுண்ட் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்திய வம்சாவளி வீரரரான இவர், மோசமான ஆட்டத்தரம் காரணமாக ஆஷஸ் தொடருக்கான இங்கிலாந்து அணியில் சேர்க்கப்படவில்லை.

இந்தநிலையில், அண்மையில் குடிபோதையில் களியாட்ட விடுதி ஒன்றில் காவலாளிகள் மீது சிறுநீர் கழித்து மோசமாக நடந்து கொண்டார் என்று குற்றஞ் சாட்டப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டை அடுத்து பனேசருடனான ஒப்பந்தத்தை சசக்ஸ் கவுண்ட் அணி முடித்துக் கொள்ள முடிவெடுக்கப்பட்டது.

இதுகுறித்து பனேசர் கருத்துத் தெரிவிக்கையில்,
“2010ஆம் ஆண்டு முதல் சசக்ஸ் அணியில் விளையாடி வருகிறேன். இந்த அணியில் விளையாடி ஆட்டங்களில் எனது திறமையை வெளிப்படுத்தியதால், இங்கிலாந்து அணியில் இடம்பெறும் வாய்ப்பு கிடைத்தது.
ஆனால் இந்த ஆண்டு களத்துக்கு வெளியே நடந்த சில செயல்களால் ஏமாற்றமே மிஞ்சியது. அதற்காக எனது சசக்ஸ் கவுண்ட் அணி நிர் வாகம், நண்பர்கள் மற்றும் ரசிகர்களிடமும் அனைவரிடமும் மன்னிப்பு கேட்டுக் கொள்கின்றேன்” என்று தெரிவித்தார். (ற)



# சிறப்பாகச் செயற்படுகிறார் விராட் கோஹ்லி

## டோனி புகழாரம்

இளம் வீரரான விராட் கோஹ்லி அணித் தலைமைப் பொறுப்பில் சிறப்பாகச் செயற்படுகின்றார் என்று பாராட்டியுள்ளார் இந்திய அணித் தலைவர் மகேந்திரசிங் டோனி.

இந்திய கிரிக்கெட் அணியின் துணை அணித்தலைவரான விராட் கோஹ்லி, சிம்பாப்வேக்கு எதிரான சுற்றுப்பயணத்தின் போது அணித் தலைவராக செயற்பட்டார்.

அந்தத் தொடரின் 5 ஆட்டங்களிலும் வென்று இந்திய அணி சாதனை படைத்தது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த மகேந்திரசிங் டோனி,
“அணித்தலைவராக கோஹ்லி மிக சிறப்புடன் செயல்படுகிறார். கடந்தாண்டை விட இந்த ஆண்டில் கோஹ்லியிடம் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.
வெற்றிக்காக களத்தில் துணிச்சலுடன் ஆடுவது தான், அணித் தலைவருக்கு உதவியாக இருக்கும். அவரது அணுகுமுறை களத்தடுப்பிலும் நல்ல மாற்றத்தை தந்தது. சிம்பாப்வே தொடரில் அவரது செயற்பாடு மிகவும் சிறப்பாக இருந்தது.
எதிர்காலத்தில் சிறந்த அணித் தலைவராக வருவார்.
இளைஞர்களை கொண்ட அணியை நான் உருவாக்கியுள்ளேன் என்று கூறப்படுவதை ஏற்கமுடியாது. அணிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு உடல்தகுதி மற்றும் திறமையே காரணம்.
40 அல்லது 42 வயது வீரராக இருந்தாலும் உடல் தகுதியே முக்கியம். உடல் தகுதியுடன் இருந்தால் தான் சிறப்பாக களத்தடுப்பு செய்யமுடியும். அனைத்து காலக்கட்டத்திலும் விளையாடிய சிறந்த வீரர்களை வைத்து கனவு அணியை தெரிவு செய்வது கடினம்.
எனது கிரிக்கெட் வாழ்வில் எப்போதும் சிறந்த இந்திய் கனவு அணியை தெரிவு செய்யப் போவதில்லை. ஏனெனில் இந்திய அணிக்காக விளையாடிய அனைத்து வீரர்களுக்கும் மதிப்பு கொடுக்க வேண்டும்” என்று தெரிவித்துள்ளார். (ற)



# பிஸ்டோரியஸுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல்

தனது காதலியைக் கொலை செய்தார் என்று கூறப்படும் வழக்கில் சிக்கிய பிஸ்டோரியஸ் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த 'பிளேட் ரன்னர்' என்று அழைக்கப்படும் மாற்றுத் திறன் வீரரான பிஸ்டோரியஸ் (வயது 26) இரண்டு கால்களையும் இழந்தவர்.

செயற்கை கால்களுடன் தடகள போட்டிகளில் பங்கேற்ற இவர், கடந்த பிப்ரவரி 14ல் காதலி ரீவா ஸ்டீன்கெம்ப்பை சுட்டுக் கொன்றார் என்ற குற்றச்சாட்டில் கைதானார்.


தனது வீட்டுக்குள் யாரோ ஒருவர் நுழைந்து விட்டதாக நினைத்துத் தாம் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ளார் பிஸ்டோரியஸ். எனினும் அது குறித்து விசாரித்த பொலிஸார், வீட்டில் ஏற்பட்ட தகராறுக்குப் பின்னர்தான் பிஸ்டோரியஸ் காதலியை சுட்டுக்கொன்றுள்ளார் என்று கூறுகின்றனர்.

இது தொடர்பாகக் கடந்த ஆறு மாதமாக நடைபெற்று வரும் விசாரணைகளில் புலனாய்வு அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறையினர் இணைந்து இவருக்கெதிராக வலுவான ஆதாரங்களை திரட்டியுள்ளனர். அது தவிர 100க்கும் அதிகமான சாட்சிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஸ்டீன்கேம்ப்பின் 30ஆவது பிறந்த நாளான நேற்றுமுன்தினம் பிஸ்டோரியஸ் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றத்தில் அழுதபடி காணப்பட்ட இவர், தனது உறவினர்களின் கையை பிடித்துக்கொண்டு நின்றார்.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து, வழக்கு உயர்நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. அங்கு பிஸ்டோரியஸ் நிரபராதியா அல்லது குற்றவாளியா என்று முடிவு செய்யப்படும்.

தென்னாபிரிக்காவில் தூக்கு தண்டனை இல்லாத நிலையில், பிஸ்டோரியஸ் குற்றவாளி என இனங்காணப்பட்டால் குறைந்தது 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்க வாய்ப்புண்டு. (ற)




> செயற்கை கால்களுடன் தடகள போட்டிகளில் பங்கேற்ற இவர், கடந்த பிப்ரவரி 14ல் காதலி ரீவா ஸ்டீன்கெம்ப்பை சுட்டுக் கொன்றார் என்ற குற்றச்சாட்டில் கைதானார்.

விற்பனைப்பிரதிநிதி தேவை
(SALES REP)
எமது நிறுவனத்தின் விநியோகவலையமைப்புக்கு ஐந்து வருடங்களுக்குக் குறையாத 25 -50 வயதுக்குட்பட்ட அனுபவமுள்ள ஆண் உடன் தேவை.
தொடர்புகளுக்கு:-
S.V.S ENTERPRISES
T.P:-077 5833045, 021 320 7585
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

IIS CITY CAMPUS
edexcel
advancing learning, changing lives
18 வருட கல்விச் சேவை உத்தரவாதம்
பிரித்தானிய பொறியியல் பட்டத் தகைமைகள்
BTEC HND
CIVIL ENGINEERING
QUANTITY SURVEYING
புதிய பிரிவு ஆரம்பம் : 14-09-2013
மாணவர்களுக்கு இலகு கல்விக் கடன் வசதி செய்து தரப்படும்
மேலதிக விபரங்களுக்கு
021 4 900 900
Web: www.iis.edu.lk
IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 8060

# அசத்தக் காத்திருக்கும் அஸ்வின்




சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் அசத்த வேண்டும் என்ற தீராத ஆவலுடன் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறாராம் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின்.

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின். இதுவரையிலும் 16 டெஸ்ட்டில் 92 இலக்குகளையும், 58 ஒருநாள் போட்டிகளில் 80 இலக்குகளையும் கைப்பற்றியுள்ளார்.

எனினும் அவர் கடைசியாக பங்கேற்ற மேற்கிந்திய தீவுகளுடனான முத்தரப்பு தொடரில் 5 ஆட்டங்களில் 6 இலக்குகளை மாத்திரமே கைப்பற்றினார்.

இதுகுறித்து அஷ்வின் கூறுகையில்,

"தற்போது ஆட்டங்களில் பங்கு பெறாததால் ஓய்வு கிடைத்துள்ளது. அதனை பயன்படுத்தி எனது பந்துவீச்சு திறமையை வளர்க்க முயற்சித்து வருகிறேன்.

தற்போது பந்தை வீழ்த்தும் நீளத்தை குறைத்து வேகமாக செல்லும் வகையில் பயிற்சி எடுத்து எடுகிறேன். அத்தோடு வலது கை துடுப்பாட்ட வீரர்களுக்கு கேரம் முறையில் பந்துவீச முயற்சி செய்து வருகின்றேன். எதிர்வரும் ஆட்டங்களில் அசத்துவேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)

மதுரை செல்லும் பயணிகளுக்கு
யாழ் மக்களுக்காக 24 மணித்தியால சேவையை விஸ்தரித்துள்ளோம்
கொழும்பு - மதுரை 15950/=
Colombo-madurai
RTN (மாதாந்த கொடுப்பனவுமுறையில்) 1640/= HNB
Nation Popular Travels & Tours
#128,Brown Road, Jaffna
0214 920 920

கால்களை பராமரியுங்கள்
லாவா வைத்தியசாலை
Tel :021-2224333
கிரமமான சோதனை இன்மையால் நாட்பட்ட நோய்களின் விளைவாக கால்களை இழக்கவேண்டி வரலாம்!
கால்களின் நரம்புப்பாதிப்பினை அறிந்து கொள்ள கணினி மயப்படுத்தப்பட்ட பரிசோதனையும் வைத்திய ஆலோசனையும்.
Foot Care Centre
Lava Hospitals
LH
No 75,temple road.Jaffna

வடமாகாணசபைத் தேர்தல் - 2013
யாழ்.மாவட்டம்
தமிழ்தேசியக்கூட்டமைப்பு
இலங்கைத் தமிழரசுக் கட்சி





முதன்மை வேட்பாளர்
ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர்
சீ.வி.விக்கினேஸ்வரன்
10
துணிச்சல் மிக்க இளம் சட்டத்தரணி
கே.சஜந்தன்
13
இருப்பதைக் காப்போம்!
இழந்ததை மீட்போம்!
சுயாட்சி வெல்ல வாக்களிப்போம்
பிரித்தானியா வாழ் சுளாநகர் மக்கள் சார்பில் பா.இராகுலன்

வேலையாட்கள் தேவை
யாழ். நகரில் உள்ள கல்வி நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை.
★ எழுதுவினைஞர்
(ஆண், பெண் இருபாலாரும்- முழுநேரம், பகுதி நேரம்)
★ சிற்றூழியர் (ஆண்)
26.08.2013
காலை 9 மணி
நேரில் வரவும்.
NEW SCIENCE WORLD
E-SOFT அருகில்,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

IELTS
வெளிநாடு செல்வோருக்கானது
Listening, Reading, Writing
Practical
Spoken English வகுப்புகள் ஆரம்பம் 26.8.2013
பிரிவு 1 09-11.00
பிரிவு 2 11-01.00
SAMSON
Language Research Centre
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம்.
077 621 4567

## மரண அறிவித்தல்

### திருமதி முருகேசு றோஸ்மலர்



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு றோஸ்மலர் நேற்றுமுன்தினம் (19.08.2013) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் செ.முருகேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசதுரை, முருகேசு மற்றும் துரைசிங்கம், நாகராசா, செல்வராஜா, இராசமலர், கனகமலர் (சறோ) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராஜகுலசிங்கம் மற்றும் சின்னத்துரை, பொன்னையா, குட்டிப்பிள்ளை, இரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் குயின்ஜெசிலி (ஆசிரியை), குயின்சிசிலி, குயின்றோசலி, அனிற்றசத்தியா (சுவிஸ்), ரவிச்சந்திரன், ஜெபிச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும் கலாமணி (கல்வித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்), குணராசா (சுவிஸ்), பாலசிங்கம், முத்துராசா, லீலாவதி, பாலராகினிதேவி ஆகியோரின் அன்பு மாமியும் பரணீதரன், முரளீதரன், மதனாஹரன், ரஜீகரன், சுகிர்தரன், திவர்ணன், நிதர்சன், பாதுசன், ராஜீவன் (லண்டன்), பார்த்தீபன் (சுவிஸ்), லவதீபன், செந்தூரன், கோகுலன், அபிரா, ஜெனனி, கஜானா, தர்ஷிகா, நிவர்ஷி ஆகியோரின் பேர்த்தியும் ஹரீஸ், ரிஷான், சரணியா, துளசி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2013) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆர்.சி. சேர்ச் லேன்,
உடுவில்.

தகவல்:
செ.முருகேசுவும் குடும்பத்தினரும்.

(39031)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழியை கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேஒரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே.இச்சர்வதேச நிறுவனத்தில் France மற்றும் Canada முதலியநாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் French விரும்பும் யாவரும் கற்றுக்கொள்கிறார்கள்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள். அழையுங்கள் 021.222.8093
61, Kachcheri-Nallur Road, Jaffna E-mail: alliancejaffna@yahoo.com

## மரண அறிவித்தல்

### கந்தையா இராசரத்தினம்



புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வறுத்தலைவிளான் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும், சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் நேற்று (20.08.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், புஸ்பகுமாரி (ராணி-கனடா), காலஞ்சென்ற இராஜேஸ்வரி (ராசு) மற்றும் சிவகுமாரன் (சிவம்), செல்வகுமார் (செல்வம்-ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2013) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பொன்னகம்" சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(39026) (10,16)

Personal Class
GCE O/L and Grade 9, 10 Maths in English and Tamil Medium.
Contact; 077 2119034

உடன் விற்பனைக்கு
புடைவைக் கடைக்குத் தேவையான அலுமினிய ராக்கைகள், சோக்கேஸ்கள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0771742426

பணிப்பெண் தேவை
நல்லூர் வீடு ஒன்றில் தங்கிநின்று சமையல் வேலை செய்யக்கூடிய 40 வயதிற்குட்பட்டவர் தேவை.
சம்பளம் - 15000
தொடர்பு 0779063025

Sky Computers (Pvt) Ltd
Sky
அனைத்துப் பாடத்திற்குமான புதிய பிரிவு ஆரம்பம்
மேலதிக விபரங்களிற்கு அலுவலகத்துடன்-தொடர்பு கொள்ளவும்
89, கண்டி றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே. 021-222-1417

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிறர் உனக்குச் செய்த
தீமையெல்லாம்
விரைவில் மறைந்து
போகும்படி
பிரார்த்தனை செய்.
-ஸ்பர்ஜியன்


# புதன் பொய்கை A

உதயன் ஓகஸ்ட் 21 2013 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு


# இவர்கள் பிழைக்க தெரிந்தவர்கள்



■ ராஜராஜன்



மனிதர்களில் ஒருவர் மற்றவர்போன்று இருப்பதில்லை. இவர்களிடத்தில் பல்வேறு வகையிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஏழை - பணக்காரன், கற்றவன் - கல்லாதவன், நாத்திகன் -ஆன்மிகவாதி, வள்ளல்-கருமி, ஊக்கமுடையோர்- சோம்பேறி, நல்லவன்-கெட்டவன் இவ்வாறு மனிதர்கள் வேறுபடுகின்றனர். இதன் அடிப்படையிலேயே மனிதர்கள் மதிக்கப்படுகின்றனர் அல்லது ஒதுக்கி வைக்கப்படுகின்றனர்.

இன்று எம்மில் பலர் தமது மனம் போனபோக்கில் வாழ்கின்றனர். இவர்களுக்கென நிரந்தரமான கொள்கைகள் எதுவும் இருப்பதில்லை. அந்த நேரத்துக்கு எது கிடைக்கின்றதோ அதை இவர்கள் பயன்படுத்திக்கொள்வார்கள். 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்பது இவர்களின் தாரக மந்திரமாக இருக்கும்.

வேறுசிலர் தாம் கொண்ட கொள்கையிலிருந்து ஒருபோதுமே பிறழ்ந்திருக்க மாட்டார்கள். இவர்களை எவரும் எளிதில் வசப்படுத்தவும் முடியாது. இதனால் இவர்களின் வாழ்க்கை எப்போதுமே கரடு முரடானதாக அமைந்திருக்கும்.

இந்த இரு சாராரில் முதலில் கூறப்பட்டவர்கள் பிழைக்கத் தெரிந்தவர்கள் எனவும், பின்னர் கூறப்பட்டவர்கள் பிழைக்கத் தெரியாதவர்கள் எனவும் சுருக்கமாக ஏனையோரால் அழைக்கப்பட்டு வருகின்றனர்.

எமது இலங்கைத் திருநாட்டைப் பொறுத்தளவில் பிழைக்கத் தெரிந்தவர்களையே அதிகளவில் காணமுடிகின்றது. அரசியல், பொருளாதாரம், கல்வி, பொதுச்சேவை என எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் அங்கு பிழைக்கத் தெரிந்தவர்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

அதிலும் தென்பகுதி அரசியலில் இவர்களின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கின்றது.

முன்னர் தற்போதைய எதிர்க் கட்சியில் முக்கியபங்கு வகித்த பலர் தற்போது ஆளும் கட்சியுடன் ஒட்டியுள்ளனர். தாம் செல்லுகின்ற புதிய இடத்தில் வரப்பிரசாதங்கள் அதிகளவில் கிடைக்குமென்ற எதிர்பார்ப்பே இதற்கான முக்கிய காரணமாகும். எதிர்க்கட்சியில் இருந்தால் மாற்றுச் சட்டை கூட வாங்க முடியாது என்ற யதார்த்தத்தை உணர்ந்த தீர்க்கதரிசிகள் இவர்கள். இவர்கள் ஆளும் தரப்புடன் இணைந்ததால் அமைச்சர், பிரதி அமைச்சர், ஜனாதிபதியின் ஆலோசகர், இணைப்பாளர் எனப் பல்வேறு பதவிகளில் ஒட்டிக்கொண்டு வளமாக வலம் வருவதைக் காண முடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் கூட சிலர் தாம் சார்ந்திருந்த கட்சியை விட்டு விலகி ஆளும் தரப்புடன் இணைந்திருப்பதைக் காணமுடிகின்றது. அதுவும் வடக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெறும் சமயம் பார்த்து இவர்கள் ஆளும் தரப்புக்குத் தாவியுள்ளமை அதிக வரப்பிரசாதங்கள் இவர்களுக்குக் கிடைப்பதற்கான வாய்ப்பைப் பிரகாசமாக்கி விடும் என்பதில் ஐயமே இல்லை. இவர்கள் பிழைக்கத் தெரிந்தவர்கள்.

இறுதிப் போரின்போது தமிழர்கள் கொடூரமான வகையில் அழித்தொழிக்கப்பட்டதன் பின்னர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இனவாதிகளின் கவனம் மற்றொரு சிறுபான்மை இனத்தவரான முஸ்லிம்களின் பக்கம் திரும்பியுள்ளது. இதனால் பள்ளிவாசல்கள் சில அவற்றின் அமைவிடங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளன. சில மோசமான வகையில் சேதமாக்கப்பட்டுள்ளன. சிலவற்றை அகற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதைவிட முஸ்லிம்களின் மாட்டிறைச்சி வர்த்தகத்துக்கு எதிரான நடவடிக்கைளும் இடம்பெற்று வருகின்றன.

> இன்று எம்மில் பலர்
> தமது மனம் போன
> போக்கில் வாழ்கின்றனர்.
> இவர்களுக்கென
> நிரந்தரமான கொள்கை
> கள் எதுவும் இருப்ப
> தில்லை. அந்த
> நேரத்துக்கு எது
> கிடைக்கின்றதோ
> அதை இவர்கள்
> பயன்படுத்திக்கொள்
> வார்கள். 'காற்றுள்ள
> போதே தூற் றிக்கொள்'
> என்பது இவர்களின்
> தாரக மந்திரமாக
> இருக்கும்.

முஸ்லிம் மதத்தைப் பொறுத்தளவில் புலால் உண்ணல் என்பது விலக்கப்பட்ட ஒன்றல்ல. இதனால் ஏனைய புலால் உணவுகளுடன் மாட்டிறைச்சியையும் முஸ்லிம் மக்கள் உட்கொண்டு வருகின்றனர். மேலும் முஸ்லிம்களால் நடத்தப்படும் இறைச்சிக்கடைகளில் மாட்டிறைச்சி முக்கிய பங்கை வகிக்கின்றது.ஏனைய இறைச்சிகளுடன் ஒப்பிடும்போது மாட்டிறைச்சி மலிவாகக் கிடைப்பதுவும் இதற்கொரு முக்கிய காரணமாகும். இதேவேளை இந்த நாட்டிலே வாழுகின்ற ஏனைய மதப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் மாட்டிறைச்சியை ஒதுக்கி வைப்பதில்லை. இந்து மற்றும் பௌத்த மதங்கள் காருண்யத்தையும், கொல்லாமையையும், புலால் உண்ணாமையையும் வலியுறுத்திக் கூறுகின்ற போதிலும் அந்த மதங்களைச் சார்ந்துள்ள பலரும் புலாலை விரும்பி உண்ணுகின்றனர். இந்த நிலையில் இனவாதிகளின் மாட்டிறைச்சிக்கு எதிரான கோஷம் முஸ்லிம் மதத்தினரைக் குறி வைத்தே எழுப்பப்படுகின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்த நிலையில் ஆளும் தரப்புடன் பெருமளவு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து செயலாற்றி வருகின்றனர். இவர்கள் பல்வேறு பதவிகளில் அமர்ந்து சுகபோகங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஆனால் தமது சுகபோக வாழ்வுக்குப் பங்கம் ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தினால் இவர்கள் முஸ்லிம் மக்களுக்கெதிரான செயற்பாடுகளை கவனத்தில் கொள்வதில்லை. தமது இனம் பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை. தாம் அனுபவிக்கும் வரப்பிரசாதங்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படக் கூடாது என்பதில் இவர்கள் மிகுந்த கவனத்துடன் இருக்கின்றனர்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல். தேர்தலுக்குப் பிந்திய அரசியல் நடவடிக்கை என்பனவற்றின்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தமிழர்களின் முதுகில் குத்தியமையும் இதே காரணத்துக்காகத்தான் என்பதை மக்கள் அறிவார்கள். இவர்கள் பிழைக்கத் தெரிந்தவர்கள்.

இன்றும் கூட போர் தந்த அவலங்களிலிருந்து எமது மண் மீளமுடியாத நிலையிலுள்ளது பெருமளவு மக்கள் தமது சொந்த நிலங்களை எட்டிப் பார்க்கக்கூட முடியாத நிலையில் உள்ளனர். அவர்களின் வாழ்விடங்கள் வேற்று மனிதர்களின் காலடியில் மிதிபடுகின்றன. இனிமேல் ஒருபோதுமே இவர்கள் தாம் வாழ்ந்த இடங்களுக்குச் செல்ல முடியாத அளவுக்கு நிலைமைகள் மோசமாகிக் காணப்படுகின்றன. இந்த மக்கள் இன்னமும் முகாம்களில் முடங்கிக் கிடக்கின்றனர். கண்ணீரும், கவலையும்தான் அரசு இவர்களுக்கு அளித்துள்ள பரிசுகள். ஆனால் இவற்றையெல்லாம் தெரிந்தும்கூட அரசுடன் இணைந்திருக்கும் இங்குள்ள அரசியல்வாதிகள் இந்த மக்களுக்கு விமோசனத்தை ஏற்படுத்தித் தருவதை விடுத்து ஆசை வார்த்தைகளை அள்ளி வீசுகின்றனர். அவ்வப்போது ஏதோ எலும்புத் துண்டுகளையும் வீசிவிடுகின்றனர். இவர்கள் உண்மையான இனப்பற்று உள்ளவர்களாக இருப்பின் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களை ஆளும் தரப்பினருக்கு எடுத்துக் கூறி ஏதாவது விமோசனம் வழங்கியிருக்க வேண்டும். ஆனால் இவர்கள் ஒருபோதுமே இதனைச் செய்யமாட்டார்கள். அடிமட்டத்தில் மக்கள் உழலும் போதுதான் தம்மைப் பற்றி அவர்கள் சிந்திப்பார்கள் என்பதை இவர்கள் நன்கு அறிந்து வைத்திருக்கின்றார்கள். எனவே இவர்கள் வீசுகின்ற எலும்புத் துண்டுகளுக்கு எப்போதுமே மதிப்பு இருக்கும். இவர்களும் பிழைத்துக் கொள்வார்கள். ஏனென்றால் இவர்கள் பிழைக்கத் தெரிந்தவர்கள்.

தந்தை செல்வா ஒரு பிழைக்கத் தெரியாத அரசியல்வாதியாக இருந்த காரணத்தினால் தான் தமது இறுதி நாள்களில் தமது பாவனைக்கென சொந்தமாக ஒரு கார்கூட இல்லாத நிலையில் வாடகைக்காரில் பயணித்தார். இவர் நினைந்திருந்தால் தமது அரசியல் வாழ்வில் பெரும் வசதிகளைப் பெற்றிருக்க முடியும். ஆனால் அவர் இதனை ஒருபோதுமே விரும்பியதில்லை. இதனால்தான் அவர் இன்னமும் மக்கள் மனங்களில் நிறைந்திருக்கின்றார்.

ஆனால் தவறான நோக்கத்துடன் தமது பிழைப்பைத் தேடிக்கொள்பவர்கள் தமது இறுதிநாள்களில் மக்களால் வெறுத்து ஒதுக்கப்படுவார்கள் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

> எமது இலங்கைத் திருநாட்டைப்
> பொறுத்தளவில் பிழைக்கத்
> தெரிந்தவர்களையே அதிகளவில்
> காண முடிகின்றது. அரசியல், பொரு
> ளாதாரம், கல்வி, பொதுச்சேவை
> என எந்தத் துறையை எடுத்துக்
> கொண்டாலும் அங்கு பிழைக்கத்
> தெரிந்தவர்களே ஆதிக்கம் செலுத்தி
> வருகின்றனர். அதிலும் தென்பகுதி
> அரசியலில் இவர்களின் ஆதிக்கம்
> கொடிகட்டிப் பறக்கின்றது.

# கோடையிலும் குளு.. குளு... வருகின்றது 'ஏசி' உடை

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, வடிவ மைக்கப்பட்டுள்ள இந்த மேலாடை, 200 கிராம் எடை கொண்டது.மிகவும் குறைந்த எடை உடையதாக இருப்பதால் இதை அணிவது சுமையாக இருக்காது. குண்டு துளைக்காது, மிக மெல்லிய இழைகளால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தமேலாடை, காற்றை மறு சுழற்சி செய்து உடலில் வெளிப்புற வெப்பநிலை அதிகரிக்காமல் தடுக்கிறது.

கடும் கோடையிலும், வியர்வை வெளியேறாமல் இருக்கவும் குளுமையை உணரும் வகையிலும், ஏசி ஜாக்கெட் எனப்படும், குளிர்வூட்டும் சட்டையை, ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஆய்வாளர் வடிவமைத்துள்ளார்.

**எடை 200 கிராம்:**

கோடை காலங்களில் நிலவும் கடும் வெப்பத்தால் மக்கள் வெளியில் செல்லத் தயங்குகின்றனர். மீறிச் செல்பவர் கள் வியர்வையில் நனைந்து அவதிக்குள்ளாகின்றனர். வெப்பம் தாங்காமல் அலுவலகம் அல்லது வீட்டிலேயே பெரும்பாலும் முடங்கிக் கிடக்கும் சூழல் நிலவுகிறது.

இதற்குத் தீர்வு காண எண்ணிய ஆஸ்திரேலிய ஆய்வாளர், வில்லியம் ஸ்ட்ரோக், தன் நீண்ட நாள் ஆய்விற்குப் பின், ஏசி உடையை வடிவமைத்துள்ளார்.

இதுகுறித்து வில்லியம் கூறியதாவது:

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, வடிவ மைக்கப்பட்டுள்ள இந்த மேலாடை, 200 கிராம் எடை கொண்டது. மிகவும் குறைந்த எடை உடையதாக இருப்பதால் இதை அணிவது சுமையாக இருக்காது. குண்டு துளைக்காத, மிக மெல்லிய இழைகளால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தமேலாடை, காற்றை மறு சுழற்சி



செய்து உடலில் வெளிப்புற வெப்பநிலை அதிகரிக்காமல் தடுக்கிறது.

வெப்பநிலையைக் குறைத்து அதை நிலைநாட்டுகிறது. இதனுடன் கைக்கடிகாரம் போன்ற, சிறிய அளவிலான கருவி ஒன்றும் தரப்படும். இது, ஜாக்கெட்டின் செயல்பாட்டை, கட்டுப்படுத்தும் கருவியாக செயல்படுகிறது.


மெல்லியதாக இருந்தாலும், குண்டு பாயாத வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதால், வெயில் நேரங்களில் தெருக்களிலும், எல்லைப்பகுதியில் காவல் புரியும், பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்களும் இந்த உடையை அணியலாம். இதன் மூலம் அவர்கள் விரைவில் சோர்வடைவது தவிர்க்கப்படும்.

**கண்காணிப்பு :**

சுறுசுறுப்புடன் நீண்ட நேரம் பணி புரியவும் இந்த உடைகள் உதவி புரியும். இந்த ஏசி சட்டைக்கு, க்ளிமா ஜாக் என, பெயரிடப்பட்டு உள்ளது. இந்த ஜாக்கெட் டுடன் பொருத்தப்பட்டுள்ள கைக்கடிகாரம் போன்ற கருவி, இதை அணிபவரின், இதயத் துடிப்பு, சுவாசம் மற்றும் உடல் சார்ந்த நடவடிக்கைகள் போன்றவற்றையும் கண்காணிக்கிறது. இவ்வாறு, வில்லியம் கூறினார்.

# அதிசய வீடுகளைப் பற்றி

மரக்கிளைகளிலோ, கட்டடங்களிலோ, சிலவேளைகளில் உங்களது வீட்டு மொட்டை மாடியின் மூலையிலோ சிறிய பறவைகள் கூடுகள் கட்டியிருப்பதை நிச்சயமாக நீங்கள் பார்த்திருக்க வேண்டும். இவைகள் எல்லாம் நீங்கள் அறிந்திருக்கும் சில சாதாரண பறவையினங்களின் கூடுகளே. ஆனால் இந்த உலகில் வாழும் பறவையினங்களில் நீங்கள் அறியாத எண்ணற்ற பறவையினங்கள் முற்றிலும் வித்தியாசமான முறையில் தங்களது கூடுகளை அமைத்துக் கொள்கின்றன. இந்த கூடுகளைப்பற்றி சிறிது பார்க்கலாம்.




ஏனைய சகல காரணங்களையும் கருத்தில் கொள்ளும் முன்பு பறவைகள் தாங்கள் வாழும் இயற்கைச் சூழலுக்கு ஏற்ப தங்களது கூடுகளைக் கட்டிக்கொள்கின்றன என்பதை நாம் முதலில் கவனத்தில் கொள்ள வேண்டும். இங்கு நாம் கடற்கரை ஓரத்தில் வாழும் பறவையினங்களை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளலாம். கடற்கரை ஓரத்தில் வாழும் பறவையினங்கள் கடல்நீரின் மேற்பரப்பில் தண்ணீரில் மூழ்கி விடாதபடி தங்களது கூடுகளை அமைத்துக்கொள்கின்றன.

கடல்நீரின் மட்டம் அதிகரித்தாலும் கடல் நீரில் அவைகளின் கூடுகள் மூழ்காத வடிவத்திலும் தண்ணீரில் மிதக்கக்கூடிய பொருள்களையும் கொண்டே பறவைகள் இத்தகைய கூடுகளை உருவாக்குகின்றன. பறவைகள் உலகில் தோன்றும் போதே, இத்தகைய கூடுகளை உருவாக்கும் திறமை கொண்டதாகவே பிறக்கின்றன. மேலும் அவைகளுக்கு எப்படி கூடு கட்ட வேண்டும் என யாரும் பயிற்சி அளிக்க வேண்டிய அவசியமே இல்லை. அல்லது பறவைகள் நீண்ட காலமாக கூடு கட்டும் முயற்சியை மேற்கொண்டு தண்ணீரில் மூழ்காத கூடுகளை உருவாக்கியிருக்க லாம் என கற்பனை செய்து பார்த்தோம் எனில் பறவைகள் எடுக்கும் முதல் முயற்சியிலேயே அவைகளின் கூடுகள் கடல் நீரில் மூழ்கிப் போயிருக்கும். எப்படியிருப்பினும் அது போன்ற செயல் ஒருபோதும் நடைபெறவில்லை. ஏனெனில், இவ்வவுலகில் தோன்றிய முதல் நாளிலிருந்தே மேலே குறிப்பிடப்பட்ட அதே முறையில்தான் பறவைகள் தங்களது கூடுகளை உருவாக்கி வருகின்றன.

சதுப்பு நிலப்பகுதியில் வாழும் பறவையினங்கள் தங்களது கூடுகளின் சுவர்களை சற்று உயரமாக அமைத்துக் கொள்கின்றன. ஏனெனில் தாங்கள் இடும் முட்டைகள், வேகமாக காற்று வீசும்போது கீழே விழுந்துவிடாமல் இருக்க பறவைகள் மேற்கண்ட முறையைக் கையாளுகின்றன. முட்டைகள் கீழே விழுந்தால் உடையக்கூடிய அபாயம் உண்டு என்பதை உணர்ந்து தங்களது முட்டைகளை முழுக்கவனத்துடனும் பாதுகாக்க வேண்டும் என்கிற இந்த அறிவு இச்சிறிய பறவைகளுக்கு எப்படி வந்தது? பறவைகள் எடுக்கும் மதிநுட்பமுள்ள ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையைத்தான் இங்கு நாம் காண்கிறோம்.

சதுப்பு நிலப்பகுதியில் வாழும் மற்றொரு பறவையினம் நிலத்தை விட்டு விட்டு புதர்களில் தம்முடைய கூட்டை அமைத்துக் கொள்கின்றன. அவ்வாறு அவை புதர்களில் தனது கூட்டை அமைத்துக்கொள்ள வேண்டிய காரணம் என்னவெனில் நிலத்திற்கும் புதருக்கும் இடையேயுள்ள தட்பவெப்ப நிலை. நிலத்தில் இருக்கும் வெப்ப நிலையை விட பத்து டிகிரி சென்ரிகிரேட் குறைவாகவே இருக்கும் புதர்களின் வெப்ப நிலை. நிலத்துக்கும் புதருக்கும் இடையில் வெப்பநிலையில் மாறுதல் உண்டு என்கிற விவரம் எம்மில் அநேகம் பேருக்கு தெரியாது. ஆனால் இச்சிறிய பறவைகள் நிலத்துக்கும் புதருக்கும் வெப்ப நிலையில் மாறுதல் உண்டு என்கிற விவரத்தைத் தெரிந்து கொண்டு தங்களையும் தங்களது குஞ்சுகளையும் சூடான வெப்ப நிலையிலிருந்து பாதுகாத்துக் கொள்ள சூடான வெப்பநிலை உள்ள நிலத்தை விட்டு விட்டு குளிர்ந்த வெப்பநிலை உள்ள புதர்களில் தங்களது கூடுகளை அமைத்துக்கொள்கின்றன.

■ மிது



ஐந்தறிவு மட்டுமே கொண்டு பகுத்தறியும் திறன் இல்லாதவைகள் என நாம் கருதிக் கொண்டிருக்கும் இச்சிறிய பறவைகள் எப்படி இத்தனை நேர்த்தியான திறமைகள் கொண்டிருக்கின்றன என்பது பற்றி எப்போதாவது நீங்கள் சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா?

பல ஆண்டுகள் படித்து பட்டம் பெற்று தங்களது துறையில் பயிற்சியும் பெற்றுக்கொண்ட பொறியியலாளர்கள் கொண்டுள்ள image005 திறமையை இச்சிறிய பறவைகள் கொண்டுள்ள திறமைக்கு ஒப்பிடலாம். ஒரு வீட்டைக் கட்ட வேண்டுமெனில் திறமையான பொறியாளர் ஒருவர் விவரமாகத் திட்டமிடுவார். அதாவது - கட்டப்பட வேண்டிய வீட்டுக்குத் தேவையான பணத்தைக் கணக்கில் கொள்வார். அதற்கு பயன்படுத்த வேண் டிய பொருள்களை பட்டியலிடுவார். கட்டப்படக்கூடிய பூமியின் தன்மையை ஆராய்ந்து கட்டடத்தைக் கட்டுவது என தனது வேலையை ஆரம்பிப்பார்.

இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொண்டிருக்கும் பறவைகளும் தங்களது கூட்டை ஒரு வகுக்கப்பட்ட ஒரு திட்டத்தின் படிதான் கட்டுகின்றன. ஆனால் அவைகளுக்கு தங்களது கூடுகளை கட்ட எந்த வித உபகரணமோ அல்லது படிப்பறிவோ அவசியமில்லை. அவைகள் தாங்கள் செயலாற்ற எடுத்துக் கொண்ட காரியங்களை கடவுள் வழங்கிய தூண்டுதல் மூலம் மிகவும் எளிதாகச் செய்து முடிக்கின்றன.

# 8 வயதிலும் குழந்தையாகவே இருக்கும் சிறுமி

அமெரிக்காவில் 8 வயது சிறுமி ஒருவர் 5 கிலோ எடையுடன் இன்னும் குழந்தையாகவே இருக்கிறார்.


அமெரிக்காவின் மன்டானா பகுதியில் உள்ள பில்லிங்ஸ் என்ற இடத்தை சேர்ந்தவர் மேரி மார்க்கரெட் வில்லியம்ஸ்.

இவரது மகள் கேப்பி வில்லியம்ஸுக்கு 8 வயது ஆகிறது.

ஆனாலும் இன்னும் குழந்தையாகவே இருககிறார். உடலின் தோலும் குழந்தைக்கு இருப்பதை போன்று மிக மென்மையாகவே உள்ளது.

மரபணுவில் ஏற்பட்ட மாற்றமே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

கேப்பி வில்லியம்ஸின் உடல் வளர்ச்சி குறித்து மருத்துவ ஆராய்ச்சியாளர் ரிச்சர்ட் எப்பால்கர், தனது குழுவினருடன் கடந்த 2 ஆண்டுகளாக ஆய்வு செய்து வருகிறார்.



# கைத்தொலைபேசியைக் கொண்டே பார்வைத் திறன் பரிசோதனை

கைத்தொலைபேசியில் பார்வைத் திறன் பரிசோதனைக்கான புதிய மென் பொருள் வந்துள்ளது. தற்போது எல்லோர் கைகளிலும் காணக்கிடைக்கின்ற நவீன கைத்தொலைபேசிகளைக் கொண்டே கண்களைப் பரிசோதித்து பிரச்சினைகளை கண்டுபிடிக்க முடிவது சாத்தியமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்? அது விரைவில் சாத்தியமாகும் என்பது போன்ற ஒரு கண்டு பிடிப்பை லண்டன் ஆராய்ச்சியாளர்கள் செய்துள்ளனர்.

ஆமாம், பார்வைத்திறன் பரிசோதனையை பலருக்கும் கொண்டு சேர்க்கும் விதமான கைத்தொலைபேசி அப்ளிகேஷன் ஒன்றை லண்டன் ஸ்கூல் ஒஃப் ஹைஜீன் அண்ட் டிராபிக்கல் மெடிசினைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பார்வைத் திறன் பரிசோதனை கைத்தொலைபேசியில் வருவதால் ஏற்படக் கூடிய நன்மைகள் யாவை?


புதுச்சேரி அர்விந்த் கண் மருத்துவமனையின்தலைமை மருத்துவ அதிகாரியும், கண் அறுவை சிகிச்சை நிபுணருமான டாக்டர் ரெங்கராஜ் வெங்கடேஷ் நவீன கைத் தொலைபேசிகளில் இருக்கும் கமராக் களையும் ஃபிளாஷ்ஷையும் பயன் படுத்தி இந்த அப்ளிகேஷன் கண்ணின் விழித்திரையை ஸ்கேன் செய்கிறது.

தவிர ஒருவருடைய பார் வைத் திறனை அளக்க உதவும் சின்னதாகிக் கொண்டே போகும் எழுத்துக்களும் இந்த அப்ளிகேஷனில் உண்டு.

இந்த அப்ளிகேஷனைப் பயன்படுத்தி ஒருவரது விழித்திரையையும் பார்வைத் திறனையும் சோதிக்கும்போது அந்த விவரங்கள் கைத்தொலைபேசியிலேயே பதியப்படுகின்றன. அந்த விவரங் களை ஒரு மருத்துவருக்கு மின்னஞ்சல் செய்ய முடியும்.

பீக் அப்ளிகேஷனைக் கொண்டு கென்யாவில் பலருடைய கண்களைப் படமெடுத்து, அந்தப் படங்கள் லண்டனிலுள்ள மூர்ஃபீல்ட் கண் மருத்துவமனைக்கு அனுப்பப் பட்டன.





மிக அதிக விலைகொண்ட கண் பரிசோதனைக் கருவிகளின் படங்களையும் இந்தப் படங்களையும் நிபுணர்கள் ஒப்பிட்டபோது கைத்தொலைபேசி எடுத்த படங்களைக் கொண்டும் கண் கோளாறுகளை ஓரளவுக்கு கண்டுபிடிக்க முடிந்தது.

இந்த ஆய்வு இன்னும் முழுமை அடையவில்லையென்றாலும், கைத்தொலைபேசி எடுத்த படங்களை வைத்து ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு ஏதோ ஒரு வகையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

**பார்வைத் திறன் பாதிப்பு**

உலக அளவில் 28 கோடிப்பேருக்கும் அதிகமானவர்கள் கண்பார்வை பாதிக் கப்பட்டோ, இழந்தோ இருக்கிறார்கள் என உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. பெரும்பாலான கண் கோளாறுகள் எளிதில் குணப்படுத்தக்கூடிய பிரச்சினைகள்தான். பொருத்தமான கண்ணாடியை அணிவதாலோ புரை நீக்க சிகிச்சை மூலமாகவோ அவற்றைக் குணப்படுத்தி விட முடியும்.

ஏழை நாடுகளிலும்கூட பெருநகரங்களிலும் ஊர்களிலும் கண் மருத்துவர்கள் இருக்கின்றனர். ஆனால் ஏழை மக்களும் கிராமவாசிகளும் கண் மருத்துவர்களைச் சென்று பார்ப்பதில்லை.


உலகில் கண்பார்வை பாதிப்புள்ளவர்களில் 90 சதவீதம் பேர் ஏழை நாடுகளில் உள்ளனர். இந்தியா, ஆபிரிக்கா போன்ற இடங்களில் கண் மருத்துவர்கள், கண் பார்வைத்திறன் பரிசோதகர்கள் போன்றோர்களால் குறிப்பிட்ட சில பேருக்கே சேவை வழங்க முடிகிறது ஏனென்றால் குறைவானவர்களே இவர்களிடம் வருகின்றனர்.

அந்த வகையில் இந்தப் புதிய தொழில்நுட்பம் முன்னேற்றம் கண்டால் பெரிய பயன் இருக்கும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

நவீன கைத்தொலை பேசிகளில் இருக்கும் கமராக்களையும் ஃபிளாஷ்ஷையும் பயன்படுத்தி இந்த அப்ளி கேஷன் கண்ணின் விழித் திரையை ஸ்கேன் செய்கிறது. தவிர ஒருவருடைய பார்வைத் திறனை அளக்க உதவும் சின்ன தாகிக்கொண்டே போகும் எழுத்துக்களும் இந்த அப்ளி கேஷனில் உண்டு.

- இணையவன்

# காட்டுக்குள் சிறுவனை காப்பாற்றிய கங்காரு



மறுநாள் சுமார் 24 மணி நேரத்துக்குப் பின்னர் புதரில் இருந்து சிறுவன் சீமோன் பத்திரமாக மீட்கப்பட்டான். அவனிடம் விசாரித்ததில் கங்காரு ஒன்று நண்பரைப் போல இரவு முழுவதும் அவன் கூடவே இருந்து அரவணைத்து குளிரில் இருந்து அவனைக் காப்பாற்றியமை தெரியவந்தது.

ஆஸ்திரேலியாவின் தேசிய விலங்கு கங்காரு ஆகும். அது ஒரு சிறுவனுக்கு நண்பனாக இருந்து உயிரை காப்பாற்றிய சம்பவம் நடந்துள்ளது. அடிலயிட் பகுதியில் அமைந்துள்ள வனவிலங்கு பூங்காவிற்கு கரூகெர்-லிண்டா தம்பதி தங்களது 7 வயது மகன் சீமோனுடன் சென்றனர். அங்குள்ள காட்டுப் பாதை வழியாக அவர்கள் நடந்து செல்லும்போது சிறுவன் திடீரென்று மாயமானான். உடனே வனப்பிரிவினர் பொலிஸாரின் உதவியுடன் ஹெலியில் காடு முழுவதும் இரவு வரையில் தேடினார்கள். ஆனால் சிறுவன் கிடைக்கவில்லை. அங்கு இரவு நேரத்தில் கடும் குளிர் வாட்டும் என்பதால் சிறுவனின் கதி என்ன ஆனதோ என்று பெற்றோர் கவலையில் உறைந்து போனார்கள்.

மறுநாள், சுமார் 24 மணி நேரத்துக்கு பின்னர் புதரில் இருந்து சிறுவன் சீமோன் பத்திரமாக மீட்கப்பட்டான். அவனிடம் விசாரித்ததில் கங்காரு ஒன்று நண்பரைப் போல இரவு முழுவதும் அவன் கூடவே இருந்து அரவணைத்து குளிரில் இருந்து அவனைக் காப்பாற்றியமை தெரியவந்தது.

மேலும் சிறுவன் கூறும்போது, காட்டில் நிறைய மலர்கள் பூத்திருப்பதைப் பார்த்தேன். அம்மாவுக்கு அதைப் பறித்து கொடுக்கலாம் என்ற ஆசையில் சென்றேன். வழிதெரியாமல் புதரில் சிக்கி இருந்தபோது கங்காரு வந்தது. அது என்னிடம் இருந்த பூக்களை வாங்கிச் சாப்பிட்டு என்னுடனேயே படுத்துக் கொண்டது. ஹெலிகாப்டர் சுற்றுவதை பார்த்தேன். ஆனால் அவர்கள் நான் இருந்த இடத்தை பார்க்கவில்லை' என்றான்.

எவ்வித ஆபத்தும் இன்றி மகன் மீண்டு வந்ததால் பெற்றோர் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். கரூகெர் கூறுகையில், கடவுள் தான் கங்காரு வடிவில் என் மகனை காப்பாற்றி இருக்கிறார். இது ஜங்கிள் புத்தகத்தில் வந்த கதை போல இருக்கிறது' என்றார்.

- வலையவன்

# குறைந்த வயதில் சாரதியான பெண்




பிரிட்டனில் மிகக் குறைந்த வயதில் பாரவூர்தி ஓட்டுவதற்கான அனுமதியை 18 வயது இளம்பெண்ணான ஜெஸ் ஸ்டப்ஸ் பெற்றுள்ளார்.

நாட்டின் இளம் வயது பெண் பாரவூர்தி சாரதி ஆனது குறித்து ஜெஸ் ஸ்டப்ஸ் கூறியதாவது:-

எனது அப்பா, மாமாக்கள், சகோதரர்கள், சகோதரி எல்லோருமே பாரவூர்தி ஓட்டுநர்கள் தான்.

பாரவூர்தி ஓட்டப் பழகிவிட்டால் பின்னர் இந்தத் தொழிலை விட்டு விலக மனம் வராது. என்னைப் பொறுத்தவரை பல்கலைக்கழகம் சென்று படிக்க வேண்டும் என்பதை விட மனதுக்குப் பிடித்ததை செய்வதில்தான் ஆர்வம் அதிகம்.

பாரவூர்தித் துறையைப் பொறுத்தவரை அநேகமாக ஓட்டுநர்களும் ஆண்களாகவே உள்ளனர். தற்போது, பெண்களும் இந்தத் துறையில் ஓட்டுநர்களாகக் கால் பதிக்கத் தொடங்கியுள்ளனர்.-என்றார்.



# 100 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இரவுக் கிளிகள் கண்டுபிடிப்பு

100 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அரிய வகை பறவை இனமான இரவுக் கிளிகள் ஆஸ்திரேலிய காடுகளில் உயிர் வாழ்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெருகி வரும் சுற்றுச்சூழல் சீர்கேட்டால் உலகின் பல வகை உயிரினங்களும் அழிந்து வருகின்றன. அந்தவகையில் 100 ஆண்டுகளுக்கு முன் காணப்பட்ட அரிய வகை பறவை இனமான இரவுக் கிளிகள் இனம் அழிந்து விட்டதாகவே கூறப்பட்டது.

இந்தநிலையில், ஆஸ்திரேலிய காடுகளில் வன விலங்குகள் மற்றும் பறவைகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஜோன் யங், அந்த இனக் கிளிகள் உயிருடன் இருப்பதற்கான ஆதாரங்களை வெளியிட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள யங், 15 ஆண்டுகளாக இரவுக் கிளிகள் பற்றிய தேடலில் ஈடுபட்டுள்ளார்.

இதன் ஒரு பகுதியாக 2007 ஆம் ஆண்டு இரவுக் கிளிகளின் குரல்கள் காடுகளில் வைக்கப்பட்டிருந்த ஒலிப்பதிவு கருவிகளில் பதிவாகியிருந்தன.

அதையடுத்து புதிய நம்பிக்கையுடன் கிளிகளைப் படம் பிடிக்கும் முயற்சியில் யங் ஈடுபட்டார். அவரது அயராத உழைப்பின் பயனாக, ஆஸ்திரேலியாவின் அடர்ந்த காட்டுப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த ஒளிப்பதிவு கருவிகளில் அரிய வகை கிளிகளின் படங்கள் பதிவாகி உள்ளன.

அதில் இரவுக் கிளிகளின் அசைவுகள், செயற்பாடுகள், அதன் சத்தம் போன்றவை ஒளி மற்றும் ஒலிப்பதிவு கருவிகளில் பதிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இரவுக் கிளிகளின் அசைவுகள், செயல்பாடுகள், அதன் சத்தம் போன்றவை ஒளி மற்றும் ஒலிப்பதிவு கருவிகளில் பதிவாகி உள்ளன.**

# மனிதருக்கு எப்போது சாவு? கண்டுபிடிக்க புதிய லேசர் கருவி



மனிதர்களின் வாழ்நாள் எப்போது முடியும் என்பதை, கணக்கிட்டு சொல்லும் லேசர் கருவியை பிரிட்டன் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதுகுறித்து, லான்காஸ்டர் பல்கலைக்கழக இயற்பியல் பேராசிரியர்கள் தெரிவித்ததாவது:

கைக்கடிகாரம் போன்று வடிவமைக்கப்பட்டுள்ள லேசர் கருவி மூலம் நாடித்துடிப்பு கணக்கிடப்படும்.அதன் மூலம் உட்செலுத்தப்படும், லேசர் கதிர்கள் சிறிய நரம்புகளில் ஊடுருவிச் சென்று எண்டோதிலியல் செல்களை பகுப்பாய்வு செய்கின்றன.

இந்த செல் பகுப்பாய்வின் மூலம், நரம்புகளில் ஏற்படும் மாற்றங்கள் தெளிவாகக் கணக்கிடப்படுகின்றன.

இந்த மாற்றங்களின் மூலம், மனித செல்களின் அழிவுக்காலம் மற்றும் மனித உடலில் ஏற்படும், புற்று நோய் போன்ற அபாயகரமான நோய்களையும் எளிதில் கண்டறியலாம்.

மனித செல்களின் ஆயுள் காலம் மற்றும் அதில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து எளிதில் அறிய முடிவதன் மூலம், ஒரு மனிதன் இன்னும் எவ்வளவு காலம் உயிர் வாழ்வான் என்று துல்லியமாகக் கணக்கிட முடியும்.

எளிய முறையில் கையாளக் கூடிய இந்தக் கருவியை, அடுத்த மூன்று ஆண்டுகளில், உலகின் அனைத்து நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்களும் பயன்படுத்துவர்.-எனத் தெரிவித்துள்ளனர்.

# தொலைக்காட்சி பார்க்கும் சிறாருக்கு கல்வி கற்கும் திறன் பாதிப்பு



**தொலைக்காட்சி பார்க்கும் சிறு பிள்ளைகளின் சொல்வளம், கணித அறிவு போன்றவை குறைவதற்கான சாத்தியக் கூறுகள் ஏற்படலாம்.**

சிறு பிள்ளைகள் தொலைக்காட்சி பார்ப்பதில் அதிகளவு நேரத்தைச் செலவிட்டால், அவர்களுக்கு கல்வி கற்பதில் பிரச்சினை ஏற்படும்.

ஒருநாளைக்கு 3 மணி நேரம் தொலைக்காட்சி பார்க்கும் சிறு பிள்ளைகளின் சொல்வளம், கணித அறிவு போன்றவை குறைவதற்கான சாத்தியக் கூறுகள் ஏற்படலாம் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

குறிப்பாக 2 வயதுப் பிள்ளை 2 மணி நேரங்களுக்கு மேல் தொலைக்காட்சி பார்க்குமேயானால், மேலதிகமாக அதற்காகச் செலவிடும் நேரமும், அவர்களது கல்வி கற்கும் திறனில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# வேப்பமரத்தின் கதை



ஒரு நாள் நானும் எனது நண்பி கசிர்சனாவும் எமது ஊரிலுள்ள பொது நூலகத்துக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தோம். வரும் வழியில் பற்றை ஒன்றைக் கடக்க வேண்டி இருந்தது. நானும் கசிர்சனாவும் பற்றை வழியே சென்று கொண்டிருந்தோம். அப்போது அழுகை ஒலி கேட்டது. நாம் இருவரும் சுற்றுமுற்றும் பார்த்தோம். ஒருவரையும் காணவில்லை. வெறும் அசரீரீ மட்டும் கேட்டது.

எமக்குப் பயம் வந்தது. திரும்பிப் பார்க்காமல் வீட்டுக்கு ஓடிச் சென்றுவிடுவோமா? என்று தோன்றியது. ஆனாலும் எங்கிருந்து அழுகை ஒலி வருகிறதென அறிய ஆவலாக இருந்தது. பயந்து சென்று கொண்டிருக்கும் போது நில்லுங்கள் என்று ஒலி கேட்டது. அப்போது மிகவும் பயந்த நாம் "அம்மா" எனக் கத்திவிட்டோம். அங்கே ஒரு வேப்பமரம் "நான் தான் வேப்பமரம். நான் தான் அழுதேன். நீங்கள் பயப்படாதீர்கள்" என்று கூறியது. "ஏன் நீங்கள் அழுதீர்கள்" என்று வேப்பமரத்திடம் கேட்டோம். அதற்கு வேப்பமரம் "என்னுடைய கடந்த காலத்தையும் வருங்காலத்தையும் பற்றிச் சிந்தித்தேன். அழுகை வந்து விட்டது" எனக் கூறியது. "ஏன் உமக்கு என்ன நடந்தது" என்று நாம் கேட்டோம். அதற்கு வேப்பமரம் "ஏன் பார்க்கத் தெரியவில்லையா? என்றது.

பின் கதை கேட்கும் ஆவலில் " உங்கள் கதையைச் சொல்லுங்கள்" என்று கேட்டோம். வேப்பமரம் தன்னைப் பற்றிக் கூறத் தொடங்கியது.



"முன்பு ஒரு நாள் என்னைப் போலவே ஒரு பெரிய அழகான வேப்பமரம் ஒரு வீதியோரத்தில் நின்றது. அந்த வேப்பமரம் வழிப்போக்கர்களுக்கு நிழல் வழங்கி வந்தது. அந்த வேப்பமரத்தில் இருந்த ஒரு பழத்தினுள்ளே நான் விதையாக இருந்தேன். அப்படி இருக்கும்போது நான் எப்போ வெளியே வருவேன். உலகத்தை எப்போது இரசிப்பேன் என்ற ஆவலுடன் துடித்துக் கொண்டிருந்தேன். நான் வெளியே வரும் நாளை எதிர் பார்த்துக் காத்திருந்தேன். நான் ஆவலுடன் காத்திருந்த நாளும் வந்தது. ஒரு காகம் நான் இருந்த பழத்தைக் கொத்தி கொத்தி உண்டு விட்டு என்னைத் தூக்கிக் கொண்டு சென்று ஒரு அடர்ந்த முட்பற்றைக்குள் போட்டது. ஒரு சில நிமிடங்களுக்குள் எனது கனவுக் கோட்டை உடையத் தொடங்கியது. ஆனாலும் மனம் தளரவில்லை. என்றோ ஒரு நாள் உலகத்தைப் பார்த்துத்தான் தீருவேன் என்ற வைராக்கியத்துடன் இருந்தேன்.

பின்பு சில நாள்கள் அந்த முட்களுக்குள் இருந்து கஷ்ரப்பட்டு ஒரு மாதிரி சமாளித்துக் கொண்டிருந்தேன். நான் வளரத் தொடங்கியது. ஒரு மாரி காலம். அதனால் நான் பெரும் மகிழ்ச்சியடைந்தேன். இயற்கை என்னை வரவேற்கிறது என்ற சந்தோஷத்தில் திளைத்தேன். நான் மழை நீரைப் பெற்று சந்தோஷமாக வளர்ந்தேன். பின்பு எனது தண்டு கொஞ்சம் தடித்து வந்தது. அதன் பின் மழை காலமும் முடிவடைந்தது. ஒரு மாதிரி நான் கொஞ்சமாவது வளர்ந்து விட்டேன் என எண்ணி மகிழ்ச்சியடைந்தேன். ஆனாலும் எனக்கு நீர் போதாமல் இருந்தது. வெயில் என்னை வருத்தியது. அந்தச் சூரியனின் கடுமையான கதிர்களால் நான் வாடிப்போனேன். இப்படியே போனால் என் வருங்காலம் எப்படி இருக்கும்? என்று எண்ணினேன். என்னை அறியாமலே அழுதுவிட்டேன். நான் என்னுடைய கஷ்ரத்தை உங்களிடம் சொல்லி மனதைத் தேற்றிக் கொண்டேன். நேரமாகி விட்டது. உங்களை வீட்டில் தேடுவார்கள் நீங்கள் செல்லுங்கள்" என்று கூறியது. எங்களுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

எனக்கு வேப்பமரத்தை நினைக்க மிகவும் பரிதாபமாகவும் கவலையாகவும் இருந்தது. என்னால் தனியாக வீட்டில் இருந்து ஒன்றுமே செய்யவும் முடியவில்லை. சிந்திக்கவும் முடியவில்லை. நான் அம்மாவிடம் கூறி விட்டு கசிர்சனாவின் வீட்டுக்கு சென்றேன். கசிர்சனாவும் நானும் கசிர்சனாவின் வீட்டின் முன் இருந்த ஒரு மரக்குற்றியில் இருந்து வேப்பமரத்தை காப்பாற்ற என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தோம். அந்தவேளையில் எமக்கு ஒரு சிந்தனை தோன்றியது.

அந்த வேப்பமரத்துக்கு நீர் பாய்ச்சுவது என முடிவு செய்தோம். வேப்பமரம் எம்மை நன்றியுணர்வுடன் பார்த்தது.


நாம் அத்தோடு நின்றுவிடவில்லை. அந்தப் பற்றையை அகற்றி அவ்விடத்தில் பூங்கன்றுகளை நடுவதற்கான எல்லா ஆயத்தங்களையும் செய்தோம். நானும் கசிர்சனாவும் பல பூங்கன்றுகளை நட்டோம். பின்பு வேப்பமரத்திடம் நலம் விசாரித்தோம். அதற்கு வேப்பமரம் மகிழ்ச்சி பொங்க நன்றி கூறியது. நாம் வேப்பமரத்தின் கனவை நிறைவேற்றி வைத்ததை எண்ணி மகிழ்ச்சியடைந்தோம். அதுமட்டுமல்லாது நாம் எதிர்காலத்தில் தென்றல் காற்றையும் கண்கவர் மலர்களையும் இயற்கையையும் மிக அண்மையில் எந்நேரமும் இரசித்துக் கொண்டு இயற்கையுடன் ஒன்றிணைந்து வாழ்வோம் என்பதை எண்ணி பெருங்களிப்படைந்தோம்.

சு.ஆர்த்திகா. தரம்-9டி.
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

## நாடுகள் பற்றி சில

1) உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு- இந்தியா
2) உலகின் மிகப்பெரிய கம்யூனிச நாடு- சீனா
3) மிகப்பெரிய இஸ்லாமிய நாடு- இந்தோனேஷியா
4) ஒரேயொரு இந்துமத நாடு- நேபாளம்
5) ஆகக் கூடிய சனத்தொகை கொண்ட நாடு- சீனா
6) ஆகக் குறைந்த சனத்தொகை கொண்ட நாடு- வத்திக்கான்
7) ஆசியாவிலே ஒரேயொரு கிறிஸ்தவ நாடு- பிலிப்பைன்ஸ்

# அதிசய பாலம்




அமெரிக்காவில் கொலராடோ என்ற இடத்தில் ஆர்கன்ஸாஸ் நதி ஒரு பயங்கர பள்ளத்தாக்கில் ஓடுகின்றது. அந்தப் பள்ளத்தை கடக்க 1929இல் ஒரு பாலம் கட்டினார்கள். நீர் மட்டத்தில் இருந்து உயரமாக உள்ள பாலம் இதுதான்.

நீர் மட்டத்தில் இருந்து பாலம் 1053 அடி உயரத்தில் உள்ளது. அப்போதைய தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டே இந்தப் பாலத்தை ஆறு மாதங்களில் கட்டி முடித்து விட்டனர்.

சி.கஜானி. தரம-9'டி'
கிளி/இந்துக் கல்லூரி

# சுதந்திர சதுக்கம்





இலங்கை 1948ஆம் ஆண்டு மாசி மாதம் 4ஆம் திகதி பிரித்தானிய முடியிடம் இருந்து சுதந்திரம் பெற்றுக்கொண்டது.

இதனை நினைவுபடுத்துவதற்காக சுதந்திர சதுக்கம் தலைநகர் கொழும்பில் றொரிங்டனில் அமைக்கப்பட்டது. இலங்கையின் முதலாவது பிரத மரான D.S.சேனநாயக்கா இதனை அமைப்பதற்கு முன்னோடியாக திகழ்ந்தார். அப்பொழுது பெருந்தெருக்கள் அமைச்சராக கடமையாற்றிய ஜோன் கொத்தலாவல அவர்களினால் நினைவுச் சின்னங்கள் வைக்கப்பட்டன.

1953ஆம் ஆண்டு மாசி மாதம் 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திரத்தை வெளிப்படுத்தும் சின்னமாக இது முழுமைப்படுத்தப்பட்டது. இங்குள்ள மண்டபத்துக்குள் நுழைவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. சதுக்கத்தின் நான்கு பக்கங்களிலும் யாப்பகூவ சிங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு கண்டி மன்னர் காலத்துக்கு உரிய சிற்பக்கலை நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாளிகையின் கூரையும் கூட சிற்ப வேலைப்பாடு மிக்கது. இங்கு 28 சித்திரங்கள் காணப்படுகின்றன. இங்கு தாமரை மலர் வடிவ பொய்கை ஒன்று உள்ளது. இதன் நுழைவாயிலில் முதலாவது பிரதமர் D.S.சேனநாயக்காவின் உருவச்சிலை காணப்படுகின்றது. இங்குள்ள மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வுகளை எந்தக் கோணத்தில் இருந்தும் தெளிவாகப் பார்க்கமுடியும். இது ஓர் இலங்கையின் கலாசார மரபுரிமையாகும்.

த.சஞ்ஜீவன், தரம்-9 'ஈ'
புனித பத்திரிசியார் கல்லூரி

# ஆந்தை பற்றி அறிவோமா



ஆந்தை, ஸ்ட்றைஜிபோர்மெஸ் இனத்தைச் சார்ந்த பறவை. இது பெரும்பாலும் தனித்தே காணப்படும். ஆந்தை இனத்தில் மொத்தம் 133 வகைகள் உள்ளன. அவற்றுள் மிகவும் அதிகமாக காணப்படும் வகை பார்ன் ஆந்தைகள். ஆந்தைகள் முன்நோக்கும் பெரிய கண்களையும், காதுகளையும், அலகையும் கொண்டவை. இதனால் பார்க்கும் திசையை மாற்றுவதற்கு முழுத்தலையையும் திருப்ப வேண்டியுள்ளது. இது தனது தலையை இரு திசைளிலும் 270 பாகைகள் வரை திருப்ப வல்லது.

ஆந்தைகள் தூரப்பார்வை கொண்டவை. எனினும், அவற்றின் பார்வை, மங்கலான வெளிச்சத்தில் மிகவும் சிறப்பானது. பல ஆந்தைகள் முழு இருட்டிலும் கூட ஒலியைப் பின் தொடர்ந்து வேட்டையாடக் கூடியவை.



இவை காடுகள், பாலைவனங்கள், புல்வெளிகள், வயல்வெளிகள் மற்றும் மரங்கள் நிறைந்த இடங்களில் மரங்களின்மேல் அல்லது நிலத்தின்கீழ் உள்ள வளைகள், குகைகள், பாழடைந்த கட்டடங்கள், பாறை இடுக்குகள் போன்றவற்றில் வாழ்கின்றன. ஆந்தைகள் அவற்றின் இனத்தைப் பொறுத்து 6 அங்குலத்திலிருந்து 28 அங்குலம் வரையும், 1கிலோ முதல் 4 கிலோ எடை வரையும் கொண்டிருப் பவை. பெண் ஆந்தைகள் ஆண் ஆந்தைகளைவிடப் பெரியதாக இருக்கும். இவற்றின் இறகுகள் மிக மென்மையானவை. எனவே, இவை பறக்கும்போது சத்தம் கேட்பது இல்லை.

ஆந்தை முட்டைகள் கிட்டத்தட்ட கோளவடிவம் கொண்டவை. ஆந்தைகள் அவற்றின் வகையைப் பொறுத்து ஒரு தடவையில் பன்னிரண்டு வரையிலான முட்டைகளை இடுகின்றன. பாறைகளின் விளிம்பிலோ, மரங்களில் வெறும் உதிர்ந்த இலைகள், இறக்கைகளின் மேலேயோ முட்டையிடும். இவை அடைகாக்கும் 15 முதல் 35 நாள்களில் குஞ்சுகள் பொரிக்க ஆரம்பிக்கிறது.

# எந்த வகையில் இது நியாயமாகும்?

மணலாறு சுகந்தா முறிப்பு, எரிஞ்சகாடு ஆகிய பகுதிகளில் விவசாய நிலங்களுக்கு உரிமையுடைய விவசாயிகள் தமது நிலங்களில் விவசாய நடவடிக்கையை மேற்கொள்ள இறங்கிய போது, அங்கு வந்த சிங்களவர்கள் அந்த நிலங்கள் தமக்கே சொந்தமானவை என்று கூறி மகாவலித் திட்ட அதிகாரிகளை அழைத்து தமிழ் விவசாயிகளை அவர்களது நிலத்தில் இருந்து விரட்டியடித்துள்ளனர்.

கொக்குத்தொடுவாய் மத்தியைச் சேர்ந்த இந்தப் பகுதி மக்கள், போர் காரணமாக 1984ஆம் ஆண்டு அரசினால் தமது இருப்பிடங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர்கள். சுமுகநிலை ஏற்பட்டதையடுத்து 2011ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்தனர். தமக்குச் சொந்தமான விவசாயக் காணிகளிலே விவசாயம் செய்ய விடாது தடுத்து விரட்டப்பட்டுள்ளனர் அந்த மக்கள்.

இந்தப் பிரச்சினை பல இடங்களில் தீர்வின்றித் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது. மூன்று தசாப்த காலப் போர் ஆரம்பிப்பதற்குக் காரணமாக இருந்ததே இந்தப் பிரச்சினைதான். அந்த வகையில் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே பிரச்சின்னகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. இந்தப் பிரச்சினை எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஏனெனில் போரில் தோல்வி கண்ட இனம் தமக்கு ஒரு தலைமை இல்லாததால் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது. போகப்போக இன்னும் பல பிரச்சினைகளுக்கு தமிழ் சமூகம் முகம் கொடுக்கப் போகிறது என்பதே யதார்த்தம்.

ஒட்டுமொத்த தமிழர்களுக்கே இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கும்போது, நாம் எமக்கான சொந்தப் பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தலாமா?

1994ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் வடமராட்சிப் பிரதேசம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் தளபதி ஒருவரால் உயர் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியொன்று நிறுவப்பட்டது. பயிற்சிக் கல்லூரியை நடத்துவதற்கு அந்தப் பிரதேச மக்களின் சில வீடுகள் அவர்களது அனுமதியுடன் பெறப்பட்டன. "எங்கட பெடியளுக்கு என்ன வேணுமென்றாலும் கொடுப்பம்" என்ற உணர்வுடன் இருந்த அந்தப் பிரதேச மக்கள் தமது வீடுகளை அவர்களிடம் கையளித்துவிட்டு வெளியேறினர்.

1995ஆம் ஆண்டு சூரியக் கதிர் ராணுவ நடவடிக்கை மூலம் பலாலியில் இருந்து புறப்பட்ட ராணுவம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியது. இதனால் மக்கள் கிளாலி மூலம் வன்னிக்கு இடம் பெயர்ந்து சென்றனர். இடம்பெயர முடியாத மக்கள் யாழ்ப்பாணத்திலேயே வேறு பகுதிகளில் தங்கி விட்டனர்.

வன்னிக்கு இடம்பெயர்ந்த மக்களில் சிலர், 2012 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையே ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்தை அடுத்து ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் மூலம் யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் வந்தனர். வந்து தமது வீடுகளைப் பார்த்தபோது வீடுகளின் சுவர்கள் மட்டுமே இருந்தன. ஓட்டில் இருந்து ஏனைய அனைத்தும் சூறையாடப்பட்டிருந்தன. பக்கத்தில் வன்னிக்கு இடம்பெயராமல் இருந்தவர்களின் வீடுகள் புதுப் பொலிவுடன் காட்சி தந்தன. தங்கள் வீட்டைப் பாதுகாத்தது போல பக்கத்து வீட்டைப் பாதுகாக்க அவர்களால் முடியவில்லை போலும். அவர்களை குறை சொல்லிப் பயன் இல்லை.

வன்னிக்கு இடம்பெயர்ந்து, 2002இல் ஊருக்கு திரும்பிய, "பெடியளுக்கு" தங்கடை வீட்டைக் கையளித்திருந்த குடும்பம் ஒன்று தங்கடை

**கோப்பாய் சண்முகம்**

**கதையோடு செய்தி**

உடைந்த வீட்டைத் திருத்துவதற்கு பணம் இல்லாததால் தமக்கு தெரிந்த ஒருவருடைய வீட்டில் குடியேறினர். அத்தோடு தமது வீட்டைத் திருத்தி அதில் தங்கினால் ராணுவத்தினரின் கெடுபிடி இருக்கும் என்று நினைத்து தமது வீட்டில் குடியேறும் எண்ணத்தையும் தவிர்த்து வந்தனர். விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையே சமாதானம் முறிவடைந்த நிலையில் மீண்டும் 2006இல் போர் தொடங்கி 2009இல் முள்ளிவாய்க்காலுடன் போர் முடிவடைந்தது.

போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் அந்தக் குடும்பம் அண்மை யில் தமது வீட்டைத் திருத்தம் செய்தது. வீடு திருத்தப்படுகின்றது என்பதைக் கண்ட பக்கத்து வீட்டுக்காரர் "யாரைக் கேட்டு வீட்டைத் திருத்துறீங்கள். வன்னிக்கு போனனீங்கள் அங்கேயே இருக்க வேண்டியதுதானே? எதற்கு இங்கை வந்தனீங்கள்?" என்று அதிகார தோரணையில் கேட்டிருக்கிறார். அந்தக் குடும்பமோ தமது வீட்டைத் தாம் திருத்துவதற்கு யாரைக் கேட்காமலும் வேண்டும் என்று கூட வாய் திறந்து கேட்கவோ தமது வீட்டைத் திருத்திக் குடியேறவோ முடியாமல், பயத்தால் மௌனம் காக்கிறது.

தமது வீட்டுக் குரிய உறுதி வைத்திருந்தும், பக்கத்து வீட்டுக்காரர் விசமத்துக்கு ஏதாவது செய்து விட்டால் சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிடுமே என்ற பயத்தில் விலகி இருக்கின்றனர் அந்தக் குடும்பத்தினர். அந்தக் குடும்பம் அனைத்தையும் இழந்துள்ளது என்பது தெரிந்தும், மீதமாக இருக்கும் தமது வீட்டைத் திருத்தியாவது குடியிருப்போம் என்று சென்ற போது பக்கத்து வீட்டுக்காரர் இப்படிக் கேட்டிருக்கலாமா?


வன்னிப் போரில் இந்தக் குடும்பத்தினர் இறந்திருப்பார்கள், அந்தக் குடும்பத்தின் வீடு தமக்குத்தான் சேரும் என்று பக்கத்து வீட்டுக்காரர் எண்ணி இருந்திருப்பார் என்பதை பக்கத்து வீட்டுக்காரர் அந்தக் குடும்பத்தைப் பார்த்து கேட்ட கேள்வியில் இருந்து ஊகிக்க முடிகிறது.

எமது உரிமைக்காக இன்னமும் நாம் போராட வேண்டிய நிலையில் எமது பிரதேசத்தில் இப்படிப்பட்டவர்களும் வாழத்தான் செய்கிறார்கள். வன்னிக்குப்போன பக்கத்து வீட்டுக்காரர்களின் வீட்டைப் பாதுகாத்து அவர்களிடம் ஒப்படைக்கும் கடமையும் பொறுப்பும் இருக்க வேண்டிய அந்த மனிதர் போன்றவர்கள் அடுத்தவர் சொத்தை அபகரிக்கும் போக்கில் நடந்து கொள்வது கொஞ்சமேனும் நியாயமாகத் தோன்றவில்லை. அவரைப் போன்றவர்கள் இப்போதும் எம்மத்தியில் இருக்கும் நிலையில் இனத்துக்கான விடுதலை எவ்வாறு சாத்தியமாகும்? விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியவர்கள் என்பதற்காக அவர்களிடம் எஞ்சி இருக்கும் உடைமைகளை அவர்களது அயலவர்களே பறிக்க நினைக்கக் கூடாது.

முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு இயல்பு வாழ்வு வாழ அனுமதிக்கப்பட்டதாகக் அரசு கூற அந்த முன்னாள் போராளிகள் மாதா மாதம் படை முகாமுக்குச் சென்று கையெழுத்திட வேண்டுமென படையினரால் நிபந்தனை விதிக்கப்பட்டமை குறித்து என்ன சொல்வது? இதனால் முன்னாள் போராளிகளின் குடும்பங்கள் அச்சத்துடனேயே தமது வாழ்வை நகர்த்தி வருகின்றனர். இந்த நிலையில், அவர்கள் விடயத்தில் எமது மக்களும் அதிகாரப் போக்குடையவர்களாக இருந்தால் அந்தக் குடும்பங்கள் எப்படி இயல்பு வாழ்க்கை வாழ முடியும்? இத்தகைய நிலையில் நாம் எமக்குள் இப்படிப்பட்ட பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்ளலாமா? சிங்களக் குடியேற்றங்களை அரசு மேற்கொள்ளும்போது ஒன்றுமே பேசமுடியாமல், அதனைத் தடுக்க முடியாமல் இருக்கும் எம்மவர்களில் சிலர், தமது அயலவர், உறவினர்களிடம் இப்படித் அதிகாரத்தை காட்டுவது எந்த வகையில் நியாயம்?

எமது பிரதேசத்தில் நாம் ஒற்றுமையாக இருந்தால் தான் வெளி அழுத்தங்களை எதிர்கொண்டு சமாளிக்க முடியும். எமக்குள்ளே பிடுங்குப்பாடு இருந்தால் வெளி அழுத்தங்களை எதிர்கொள்ள முடியாத அளவுக்கு பலவீனமாகி விடுவோம். அந்த நிலையில் என்றைக்குமே எமது உரிமைகளை நாம் வென்றெடுக்க முடியாது போய்விடும். எனவே எமது மக்களை நாம் அரவணைப்போம். உரிமைக்காக குரல் கொடுத்தவர்களை அரவணைத்து ஒட்டு மொத்தக் குரலாக மாறி எமது உரிமையை நாம் மீட்டெடுப்போம். இல்லாவிடில் வரலாறுகள் எம்மைப் பின்னோக்கித் தள்ளி விடும் அதற்கு நாம் இடமளிக்கலாமா?

# தெளிந்த மனம்



புத்தர் ஒருசமயம் தமது சீடர்களுடன் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் சென்றார். வழியில் அவர் ஓர் ஏரியைக் கடந்தார். ஒரு சீடரிடம் "எனக்குத் தாகமாக உள்ளது. சிறிது நீர் கொண்டு வா" என்றார். ஏரியை அடைந்த சீடன் அதில் சிலர் துணிகள் துவைப்பதையும், ஒரு மாட்டு வண்டி இறங்கிச் செல்வதையும் கண்டான். வண்டி இறங்கிச் சென்றதில் ஏரி நீர் கலங்கிய தோடு வண்டிச் சக்கரத்தில் ஏறியிருந்த சேறும், அழுக்கும் நீரோடு கலந்து அதை மாசுபடுத்திவிட்டன. கலங்கிய நீரை எப்படிக் குருவுக்குக் குடிக்கக் கொடுப்பது என எண்ணி திரும்பிச் சென்று புத்தரிடம் அது பற்றிக் கூறினான் சீடன்.

சீடனை மீண்டும் அழைத்த புத்தர் அதே ஏரியிலிருந்து குடிக்க நீர் கொண்டு வருமாறு கூற சீடனும் ஏரிப்பக்கம் சென்றான். நீர் குழம்பியிருப்பதால் அது பருகுவதற்கு ஏற்றதல்ல என்று எண்ணிய சீடன் ஒரு மணிநேரம் வரை அங்கு காத்திருந்தான். சேறு அழுக்கெல்லாம் கீழே படிந்து நீர் அப்போது தெளிந்திருப் பதைக் கண்டான். பாத்திரத்தில் நீர் முகந்து புத்தரிடம் கொண்டு வந்து கொடுத்தான்.

நீரையும் சீடனையும் பார்த்த புத்தர் "மகனே குழம்பியிருந்த நீரை நீயா தெளிவாக்கினாய்? அதை அப்படியே விட்டுவிட்டதால் அது சிறிது நேரத்தில் தானாகவே தெளிந்துவிட்டதைப் பார்த்தாயா! " உன் மனமும் அப்படித்தான் குழம்புகிறதா? விட்டு விடு. நீ எந்த முயற்சியும் செய்யாதே. அது தானாக அடங்கி விடும் அதுதான் அதன் இயல்பு" என்றார்.

புத்த பகவானின் இந்த உபதேசத்தைச் சரியாக உணர்ந்து வாழ்வின் சகல நிகழ்வுகளையும் ஒரு சாட்சியாகப் பார்க்கப் பழகினால் மனம் தெளிவு பெறும். இதையே கிருஷ்ண பரமாத்மா கீதையிலும் "அகவுலகத்தையும், புறவுலகத்தையும் சாட்சியாய் பார்க்குமாறும் அப்போது தான் கர்மபந்தங்களில் இருந்தும் மன எண்ணங்களில் இருந்தும் விலகிச் செல்ல முடியும்" என்றும் உபதேசிக்கின்றார். இந்த உபதேசங்களை வாழ்வில் நாம் பின்பற்றினால் எமது வாழ்வு அழகான ஒரு நீர்வீழ்ச்சியாக நிச்சயம் காட்சியளிக்கும்.

சா.ரமே... ...னார்மடம்.

**வாசகர் திருமுகம்**

# பஸ் சேவை சீரின்மையால் போக்குவரத்தில் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்கு காலை 8.00 மணிக்கு புறப்படும் பேருந்துச் சேவையை காலை 7.30 மணிக்கு மாற்றி உதவுமாறு தனியார் பஸ் சங்கத்தினருக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் யாழ்ப்பாண கிளைக்கும் கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

கடந்த மூன்று வருட காலமாக யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கி செல்லும் தனியார் பேருந்து சேவை தினமும் காலை 5.40, 6.40, 8.00, 9.20 ஆகிய நேரங்களில் புறப்படுவது வழமை.

ஆனால் கடந்த ஒன்றரை மாதங்களாக 6.40 இற்கு புறப்படும் பஸ் சேவையை 7.00 மணிக்கு மாற்றி சேவையில் ஈடுபட்டனர். ஆனால் கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு குறிப்பிட்ட சேவையை நம்பி பயணிகள் பஸ் நிலையத்துக்கு வருகை தந்த போது பஸ் 6.50 இற்கு புறப்பட்டு விட்டது. இனி மேல் காலை 7.00 மணிக்குரிய பஸ் சேவை காலை 6.50 இற்கும் காலை8.00 மணிக்குரிய பஸ் சேவை 7.50ற்கும் நடைபெறும் என நேரக் கணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டது. நேர மாற்றம் தொடர்பாக முன்னறிவித்தல் தரப்படவில்லையே என வினவிய போது அவ்விடத்தில் கடமையில் ஈடுபட்ட ஒருவர்தான் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பஸ் தரிப்பிட பொறுப்பதிகாரி எனவும் இது வரையில் புறப்பட்ட சேவைகள் அனைத்தும் மேற்குறிப்பிடப்படும் நேர ஒழுங்கின்படி இடம் பெறவில்லை எனவும் இன்று முதல் காலை 5.40, 6.50, 7.50இற்கு பஸ் சேவை இடம் பெறும் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு திடீரென மேற்கொள்ளப்பட்ட நேர மாற்றத்தினால் அன்றைய தினம் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். இதனை கருத்திற்கொண்டு மறுநாள் 6.50 சேவைக்கென பஸ் நிலையத்துக்கு வருகை தந்தபோது 6.55 இற்கு பஸ் நிலையத்தை விட்டு வெளியேறிய பஸ் வாயிற் கடவை வெளியிலுள்ள பாதையில் தரித்து நின்று 7.15இற்கு பயணத்தை ஆரம்பித்து வைத்தியசாலை வீதியூடாக ஆமை வேகத்தில் நகர்ந்து சென்று பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் டீசல் நிரப்பிக் கொண்டு சாவகச்சேரிக்கு வரும் பாதையில் உள்ள கடையில் ரயர் மாற்றி சாவகச்சேரி பஸ் நிலையம் வந்தடைந்த போது 8.00 மணி ஆகியது.

கடந்த 5 ஆம் திகதி காலை 6.50 பஸ் சேவையை நமபி வந்த பயணிகள் சேவை நேரம் கடந்தும் பஸ் புறப்படாததால் தரிப்பிடத்தில் கடமையில் இருந்த நேரக் கணிப்பாளரிடம் சென்று வினவியபோது தங்களது பயண நேர ஒழுங்கு இதுதான் எனவும் இதன்படியே பஸ் சேவை இடம் பெறும் எனவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பஸ் தரிப்பிட பொறுப்பதிகாரியால் பொறுப்பற்ற வகையில் கூறப்பட்டது. பயணிகள் சிலர் கடந்த முதலாம் திகதி கூறியபடி நேரத்தில் ஏன் பஸ் புறப்படவில்லை எனக் கேட்டபோது இது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்குரிய நேர ஒழுங்கு எனவும் தனியார் பஸ் போக்குவரத்து சேவைக்கும் தேசிய பஸ் போக்குவரத்து சேவைக்கும் இடையிலான நேர வேறுபாடு எனவும் தாம் இந்த நேரத்தின் அடிப் படையிலேயே சேவையை நடைமுறைப்படுத்துவோம் எனவும் கூறினார்.

அத்துடன் தமது சங்கத்திற்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கும் இடையில் இணக்கப்பாடற்ற நிலை உள்ளமையே இதற்குக் காரணம் எனவும் கூறினார். இவர்களுக்கு போட்டியாக இலங்கை போக்குவரத்து சபை பஸ் சேவை இடம்பெறாமையினாலேயே தமது இஷ்டப்படி சேவை நேரத்தை மாற்றியமைப்பதுடன் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுவதனால் தினமும் யாழ்ப்பாணம் ஊடாக மன்னார் செல்லும் பயணிகள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். ஆகவே இதனை கருத்திற் கொண்டு இதற்குரிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

பாதிக்கப்பட்ட பயணி

# எவரது தயவும் இன்றி எமது இலக்கை நோக்கி நகர்ந்து செல்வோம்

நல்ல நேரத்துக்காகவோ, அடுத்தவரின் உதவிக்காகவோ, அதிர்ஷ்டத்துக்காகவோ காத்துக் கிடப்பவர்கள் இருக்குமிடத் திலேயே இருக்க வேண்டி வரும். அது தான் விதி. அறிவையும் தகுதிகளையும் வளர்த்துக் கொள்ளுங்கள். காலத்திற்கேற்ப திறமையாக, விரைவாகச் செயற்படுங்கள்.



ரால்ப் பார்லெட் (Ralph Parelette) என்பவர் பிரபலமானதொரு அமெரிக்கப் பேச்சாளர். ஒரு முறை அவர் 'விதி' பற்றிப் பேச ஒரு கண்ணாடிக் குவளையுடன் மேடைக்கு வந்தார்.

அந்தக் குவளையில் சிறிய பீன்ஸ் விதைகளும் பெரிய வாதுமை விதைகளும் (Walnuts) இருந்தன. குவளையை ஒரு முறை நன்றாகக் குலுக்கி விட்டு அங்கிருந்தவர்களுக்கு அதைக் காண்பித்தார். அளவில் பெரிய வாதுமை விதைகள் குவளையின் மேல்புறத்திலும், சிறிய பீன்ஸ் விதைகள் அடிப்பகுதியிலும் இருந்தன.

'நண்பர்களே! இந்தப் பீன்ஸ் விதைகளில் ஒன்று என்னிடம் உதவி கேட்கின்றது. அதற்கும் வாதுமை விதைகளுக்கு இணையாக மேலே தங்க ஆசையாம், நான் அதற்கு உதவப்போகி றேன். உங்கள் முன்னி லையிலேயே அந்த சிறிய பீன்ஸை மேலே கொண்டு வருகிறேன் பாருங்கள். ஆஹா, இப்போது அந்தப் பீன்ஸ் விதைக்குத் தான் எத்தனை சந்தோஷம்''


அவர் மறுபடி குவளையை நன்றாகக் குலுக்கினார்.

''அடடா, குலுக்கலில் அந்தப் பீன்ஸ் விதை, தனது பழைய இடத்துக்கே போய் விட்டதே! அந்த பீன்ஸ் விதைக்கு இப்போது மிகவும் கவலை. சமத்துவம் கிட்டவில்லையே என்று அங்கலாய்ப்பு. அது மறுபடி என்னிடம் வேண்டிக்கொள்கிறது. தான் மேலே போய்த் தங்கா விட்டாலும் பரவாயில்லை. வாதுமைக் கொட்டை தனக்குச் சமமாகக் கீழே தங்க வேண்டும் என்கிறது''

''சரி, அதையும் செய்வோமே. பாருங்கள். உங்கள் முன்னிலையிலேயே வாதுமை விதை ஒன்றை எடுத்து பீன்ஸ்களுக்கு அடியில் வைக்கி றேன். சரி தானே!''

அவர் மறுபடி குவளையை நன்றாகக் குலுக்கினார். முன்பு போலவே அந்த வாதுமைக் கொட்டை மேலே வந்து விட்டது. பீன்ஸ் அடியில் தங்கி விட்டது.

''நண்பர்களே இது இயற்கையின் நியதி.



– றஜி

அளவில் சிறியவை கீழ்ப்புறமும் அளவில் பெரியவை மேற்புறமுதான் எப்போதும் தங்கும். பீன்ஸ் மேலே வர வேண்டுமானால் அதற்கு ஒரே வழி அது அளவில் பெரிதாக வளர்வது தான். அதை விட்டுவிட்டு நாம் எவ்வளவு தான் உதவினாலும் காலத்தின் குலுக்கலில் எல்லாமே தங்களுக்கு உரிய இடத்திலேயே தங்க நேரிடும்.''

''நண்பர்களே பீன்ஸுக்கும் வாதுமை விதைக் கும் தங்களின் ஆசைப்படி தங்களை மாற்றிக் கொள்ள முடியாது. ஆனால் மனிதர்களைப் பொறுத்தவரை நாம் அப்படிக் கையாலாகாதவர் கள் அல்லர். கடவுள் எம்மை அப்படிப் படைக்க வில்லை. நாம் உயர வேண்டுமானால் வளர வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அப்படி முயற்சி எடுப்பதன் மூலமா கவோ, முயற்சி எடுக்க தவறுவதன் மூலமாகவோ நாமே எமது விதியைத் தீர்மானித்துக் கொள் கிறோம்'' என்று கூறி முடித்தார்.

இது ஒரு மிக அழகான உவமை. ரால்ப் பார்லெட்டின் பீன்ஸைப் போல் தான் எம்மில் பலரும் இருக்கிறோம். யாராவது ஏதாவது செய்து எப்படி யாவது எம்மை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு போய் விட வேண்டுமென்று காத்திருக்கிறோம்.

அவ்வாறு வெறுமனே காத்துக் கிடக்கிற காலத்தின் பாதியை, சரியாக, புத்திசாலித்தனமாக, முழு மன தோடு பயன்படுத்தினால் போதும், அந்த நிலைக்குத் தேவையான சகல தகுதிகளையும் எமது முயற்சியால் நாமே உருவாக்கிக் கொள்ள முடியும். யார் தயவும் இன்றி எமது இலக்குகளை நாமே சென்றடைய முடியும். மாறாக நல்ல நேரத்துக்காகவோ அடுத்தவரின் உதவிக்காகவோ அதிர்ஷ்டத்துக்காகவோ காத்துக் கிடப்பவர்கள் இருக்குமிடத்திலேயே இருக்க வேண்டி வரும். அது தான் விதி.

எனவே அறிவையும் தகுதிகளையும் வளர்த்துக் கொள்ளுங்கள். காலத்திற்கேற்ப திறமையாக, விரை வாகச் செயற்படுங்கள். உங்கள் அறிவும் திறமையும் வளர வளர உங்களது இலக்கிற்கான வழிகள் தாமாகவே தெளிவாகப் புலப்படத் தொடங்கும். சரியான சந்தர்ப்பங்கள் தானாக உங்களைத்தேடி வர ஆரம்பிக்கும். இதுவே இயற்கையின் நியதி.

# திகில் படங்களை பார்த்து பெண்கள் பயப்படுவது ஏன்?

– வெண்ணிலா




திகில் படங்களைப் பார்த்தால் ஏன் பெண்கள் பயப்ப டுகிறார்கள் என்று சிந்தித்ததுண்டா? அதற்குக் காரணம் பெண்களின் மூளை தான் என்று ஓர் ஆய்வு தெரிவித்துள் ளது. திகில் படங்கள் பார்த்தால் பெண்கள் வீல் என்று கத்துவது வழக்கம். கிரீச்சிட்ட பீதியுடன் திகில் படம் பார்க்கும் பெண்கள் அதிகம். திகிலூட்டும் எந்த விஷயத்துக்குமே ஆண்களை விட பெண்கள்தான் அதிகம் பயப்படு கிறார்கள். இதற்கு என்ன காரணம், பெண்கள் மட்டும் ஏன் பயப்படுகிறார்கள் என்று லண் டனைச் சேர்ந்த யூனிவர்சிட்டி பல்கலைக் கழக ஆராய்ச்சி யாளர்கள் ஆய்வு மேற்கொண் டனர். இந்த ஆய்வில் சுமார் 30 ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர்.

அவர்களிடம் அழகான இயற்கைக் காட்சி புகைப்படங்கள் மற்றும் வன் முறைச் சம்பவங்கள் நிறைந்த புகைப் படங்களும் காண்பிக்கப் பட்டன. அழகான படங்களைப் பார்க் கும்போது சிரிக்க வேண்டும் என்றும், வன் முறைப் படங்களைப் பார்க்கையில் முகத்தை சோக மாக வைத்துக் கொள்ளு மாறும் அறிவு றுத்தப் பட்டார்கள்.

அதன் பின்னர் அவர் களின் நினைவாற்றல் பரிசோதிக் கப்பட்டது. அதில் பெண்கள் அழகான, அமைதியான விஷ யங்களை எதிர் கொள்வதை விட வன்முறை உள்ளிட்ட மோச மானவற்றைப் பார்க்கும்போது அவர்களின் பய உணர்வுகள் அதிக ரிப்பது தெரிய வந்தது.

அடுத்து திகில் படம் வரப்போகிறது என்ற எதிர்பார்ப்பு ஆண்களை விட பெண்களுக்கே அதிகம் இருப்பதால், அவர்களின் மூளை தூண்டுவிக்கப்பட்டு அதீத அச்சத்துக்கு உள்ளா கின்றனர். அதனால் தான் பயப்படுகிறார்கள். ஆனால் ஆண்கள் அவ்வாறு எதிர்பார்ப்பதில்லை. வரட்டும் பார்க்கலாம் என்றிருக்கின்றனர்.

இது குறித்து ஆய்வுக்குத் தலைமை தாங்கிய டொக்டர் கியூலியா கல்லி கூறியதாவது, பெண்கள் திகில் படங்களைப் பார்க்கையில் எப்பொழுது திகில் காட்சி வரும் என்ற எதிர்பார்ப்பிலேயே இருப்பார்கள். ஒரு வகையான இசை வந்தால் உடனே திகில் காட்சி வரப்போகிறது என்று நினைத்துக் கொள்வார்கள். இது அவர்கள் மூளையில் பதிந்துவிடுகிறது. ஆனால் ஆண்கள் அப்படியில்லை என்றார்.



# நல்லவர்களும் இருக்கிறார்கள் கலங்காதே மனமே....

- மது

தொடர்ந்து உங்கள் நல்ல குணங்களோடே வாழுங்கள். அங்கீகாரம் வேண்டும், நல்லவன் என்று சொல்ல வேண்டும் என்பதற்காக உங்கள் நல்ல குணத்தை திருத்தாதீர்கள்.

இது அறிவீனர்களின் உலகம். இங்கே நல்ல மனதை வைத்துக்கொண்டு நல்ல பெயரை எடுக்க முடியாது. போக்கிரிகளும் பொறுக்கிகளும் தங்களை நல்லவர்களென்று உலகில் பதித்து வைக்கிறார்கள். நல்லவர்கள் பின் தள்ளப்படுகிறார்கள். செய்கின்ற ஆயிரம் உதவிகளை மறந்து விடுவார்கள். தெரியாமல் செய்கின்ற ஏதோ ஒரு சிறு தீங்குக்காக ஆயுள் முழுவதும் எம்மை வெறுத்து விடுவார்கள். சுண்டி இழுக்கின்ற கவருகின்ற வெளித் தோற்றங்களையும் பேச்சுக்களையும் விழுந்து, விழுந்து வரவேற்பார்கள். நல்லவனாக இருந்தாலும் கவர்ச்சி இல்லையென்றால் வெறுத்து விடுவார்கள்.


உலகம் இப்படிதான் இருக்கும். கொஞ்சம் குனிந்து நடந்தால் குட்டி கீழே வைப்பார்கள். நல்லவைகளையோசித்து, நன்மையைச்செய்து கொண்டிருப்பதால் நல்ல பெயர் கிடைத்து விடாது. பார்ப்பதற்கு அழகான முகமும் கேட்பதற்கு வசீகரமான குரலும் கொண்டவர்களையே நல்லவன், நம்பிக்கையானவன் என்று உலகம் அங்கீகரித்து வைத்திருக்கிறது. கொஞ்சம் மங்கலான தோற்றத்தை கொண்டிருந்தால் அவனை நம்பாதே, அவன் வேண்டாம் என்று புறம்பே தள்ளி விடுவார்கள். உங்கள்நல்லகுணங்களை யோசிக்காமல் வெளித் தோற்றத்தை வைத்து வெறுக்கின்றார்களா!

அந்த அறிவீன உலகினரை நினைத்து வருந்தாதீர்கள். தீய விதையிலிருந்து நல்லவர்கள் முளைக்கமாட்டார்கள்.

நீங்கள் நல்ல வர்களாக இருப்பதற்குக் காரணமே நன்மையான ஜீன்களாலும் குணாதி சயங்களாலும் நீங்கள் வடிவமைக்கப்பட்டு இருப்பதனால் தான். உலகம் நல்லவைகளை எப்போது தான் அங்கீகரித்திருக்கிறது.

யாருடைய கெட்ட அங்கீகாரத்தையும் பொருட்படுத்தாமல், தொடர்ந்து உங்கள்நல்ல குணங்களோடே வாழுங்கள். அங்கீகாரம் வேண்டும், நல்லவன் என்று சொல்ல வேண்டும் என்பதற்காக உங்கள் நல்ல குணத்தை திருத்தாதீர்கள். நல்லவர்கள் ஒதுக்கப்படுவதும் புறம்பே தள்ளப்படுவதும் எங்கும் நடப்பது தான். எம் குணத்தின் வீரியமான வெளிப்பாடுகளை உலகம் ஒருநாள் உணர்ந்து கொள்ளும். ஆனால் அவர்கள் உணர வேண்டுமென்பதுஎம்விருப்பமாக இருக்க வேண்டாம். ஆசாபாசங்களைக் காட்டி எளிதில் கவருபவைகள் விரைவில்உடைந்துவிடும். ஏதோ ஒரு வேகத்தில் கெட்டவர்களை வரவேற்றுக் கொண்டிருப்பவர் களின் உறவுவிரைவில்கீறிவிடும். அவர்கள் இன்று இடைவெளி இல்லாமல் இருக்கலாம், நாளை பெரும் சுவர்களால்மறைக்கப்படுவார்கள். எம் சார்பில் இறைவன் இருக்கிறான்? நாம் பாடம் புகட்டாமலேயே அவர்கள் பாடம் கற்றுக் கொள்வார்கள், அவர்களை எதிர்த்து போர்செய்யாமலும் போராடாமலும் நாம் வென்று விடலாம். கெட்ட பெயரோடு வாழும் எல்லோரும் கெட்டவர்கள் கிடையாது. சோதனைகளைச் சந்திக்காத நல்லவர்களும் கிடையாது. யாரையும் பழி வாங்க நினைக்கக் கூடாது என்று எண்ண ஆரம்பித்தாலே அவை தானாகவே நடந்து விடும், பழியுணர்ச்சி இறுதியில் நாம் எதிர் பாராத வைகளையே உருவாக்கும்

எம்மைப் நாம் புரிந்து கொள்ள முடிந்ததைப் போல எல்லோரையும் புரிந்து கொள்ள முடியாது. ஏன் இப்படி செய்தான், ஏன் இப்படி பேசுகிறான் என்பது எமக்குப் புரியாது. நாம் நினைப்பது போல அவர்கள் இருக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. அது போல எம் குணங்களையும் அவர்கள் புரிந்து கொள்ளாமல் எம்மை, கெட்டவர்களாக பார்க்கலாம். எனவே கெட்டபெயர் வந்து விட்டதே என்று கலங்காதீர்கள். எம் தூய்மைக்கு ஏற்படும் களங்கம் எம்மை எதுவும் செய்து விடாது. நல்லவர்கள் என்றும் வாழ்வார்கள். எனவே கெட்ட பெயர் வந்ததுமே அதை விட்டு விடுங்கள்.



# வாழ்க்கையை இயக்கப்போகும் இயக்குநர் நாமே

எம் கையில் என்ன இருக்கிறது! ஒரு நரம்பு சுளுக்கி விட்டால் அவ்வளவுதான். படுத்த படுக்கையாகி விடுவோம். ஒரு கால் மரத்துப் போனால் வேறு காலை மாட்ட முடியவில்லை. எப்போது என்ன நடக்கும் என்றே தெரியாது. நடப்பவையெல்லாம் எம்மைக் கேட்டு நடப்பதில்லை. வெயிலடிப்பதைப்போல இருக்கும் திடீரென மழை கொட்டும். இதோ முன்னேறி விட்டோம் என்று ஒரு தொழிலை செய்வோம். எம் நம்பிக்கைகளையும் மீறி அது படுத்து விடும். நேற்று வரைக்கும் நல்லா இருந்தவர்கள் இன்று உயிருக்கு போராடலாம் இதில் எம் கையில் எது இருக்கிறது.


எல்லா மனிதர்களும் சில சந்தர்ப்பங்களில் அடிக்கடி சொல்வது "நம்ம கையில் என்ன இருக்கு" என்பதுதான். உண்மைதான், சில சம்பவங்கள் நடக்கும் போது நாம் எதுவும் செய்ய முடியாது. பூகம்பம், சுனாமி என்றில்லாமல் வாழ்க்கையில் அன்றாடம் நடக்கும் சில விஷயங்கள் கூட எம்மையும் மீறியே நடக்கின்றன. அப்படியென்றால் எம் கையில் எதுவுமே இல்லையா!, நடப்பதெல்லாம் அது விருப்பப்படிதான் நடக்கிறதா!

ஆன்மிகத்தை நோக்கி தன்னுடைய வாழ்க்கையை நகர்த்துகிறவர்கள் எப்போதும் சிந்திக்கும் ஒன்றும் இதுதான். எங்க கையில எதுவுமில்லை என்று நாம் கூட சற்று இறை வாசத்தை பற்றி சிந்தித்தோமானால் இதுதான் எம் முடிவாகவும் இருக்கும். அதாவது எம் கையில் என்ன இருக்கிறது என்ற ஒரு விதையை மனதில் விதைத்தால்தான் மனம் இறைவனை முழுமையாகப் பற்றிக்கொள்ளும். உலக வாழ்க்கையை விட்டு இறைவாசம்தான் வேண்டும் என்று நினைப்போருக்கு இந்த வார்த்தை பயனுள்ளதாகவே இருக்கும். ஆனால் உலக வாழ்க்கை வேண்டும் என்று சொல்லும் உலகோரின் கையில் எவ்வளவோ இருக்கிறது.

வாழ நினைப்போரின் வாழ்க்கையில் இறைவன் பல முத்துக்களை மறைத்து வைத்திருப்பான். அந்த முத்துக்களைத் தேடிக் கண்டுபிடிப்பது அதற்காக உழைப்பது எம் கையில்தான் இருக்கிறது. இறைவன் எம்மை ஆசீர்வதித்து எம் கையில் ஒரு மாட்டைக் கொடுத்து இதை வைத்து பிழைத்துக்கொள் என்றால், அந்த மாடு எமக்கு கிடைத்தது மட்டுமே இறைவனால்: அதை பத்தாக்கி, பத்தை நூறாக்கி ஒரு பால் பண்ணையை உருவாக்குவது எம் கையில்தான் இருக்கிறது, இல்லையென்றால் இறைவன் கொடுத்த ஒரே மாட்டை வைத்து ஏழ்மையாய் காலத்தை கழிக்க வேண்டியதுதான்.

வாழ்க்கை என்ற ஒன்றை எமக்கு கொடுத்தது இறைவன்தான். ஆனால் அதனை எப்படி இயக்குவது என்பது எம் கையில் தான் இருக்கிறது. ஒரு இயக்குநர் சினிமாவை இயக்குவதைப்போல எம் வாழ்க்கையை இயக்கும் இயக்குநர் நாமே. உலகத்தை இறைவன் இயக்கிக் கொண்டிருக்கிறான். வாழ்க்கையை நம்கையில் விட்டு விட்டான். அதை நாம்தான் இயக்க வேண்டும். எனவே வாழ்க்கையை பற்றிய சிந்தனை அனைவருக்குமே தேவை.

மரத்தை வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான். அதாவது கடவுள் எம்மை நடத்துவார். பசியிலிருந்து, நோயிலிருந்து, ஆபத்திலிருந்து எம்மைக் காப்பாற்றி நடத்திச் செல்வார். ஆனால் அந்த வாழ்க்கையை உயர்த்தும் அல்லது தாழ்த்தும் வேலைகளை எம் கையிலேயே விட்டுள்ளார். உடலை வருடிச்செல்லும் காற்றிலிருந்து உடலிலே ஓடும் ரத்தம் வரையிலும் அனைத்து பொறுப்பையும் இறைவனே தன் கையில் எடுத்துள்ளான். எல்லாவற்றையும் சுமக்கும் இறைவன் எம் வாழ்க்கையை மட்டும் பூட்டி வைத்து விட்டு சாவியை எம் கையிலே கொடுத்து விட்டு போய்விட்டான். சாவி நம் கையிலிருந்தும் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். எனவே எம் வசம் இருப்பது எம் வாழ்க்கை. அது எம் கையிலேயே இருக்கிறது. அதை மண்ணைத் தோண்டி புதைக்க வேண்டுமா, விண்ணை நோக்கி வைக்க வேண்டுமா என்று தீர்மானிப்பவர்கள் நாம்தான். ஆகவே இப்போது உங்கள் கையில் என்ன இருக்கிறது, அதை எப்படி நகர்த்துவது என்பதை தீர்மானியுங்கள். இறைவனின் ஆசீர்வாதமும் உங்களின் உழைப்பும் நிச்சயம் உயர்வைக் கொடுக்கும்.



- மயூரி


பிறந்தநாள் வாழ்த்து
21.08.2013
மக்கள் சேவையில்
மகிழ்வு கொள்ளும்
மரபில் உதித்த - எங்கள்
தம்பிராசா
குருகுலராசாவை
அவரது பிறந்த நாளில்
பல்லாண்டு வாழ்ந்து
மேலும் மகத்தான மக்கள்
சேவை நல்க
வாழ்த்தி மகிழ்கின்றோம்.
- நண்பர்கள்.



# வெளியே துடிக்கிறது இதயம்

உலகில் எத்தனையோ விசித்திரங்கள் நாளாந்தம் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இதில் எமது பார்வைக்கும் கண்களுக்கும் புலப்படுவது ஒரு சில மட்டுமே.

உயிரினங்கள் அனைத்துக்கும் இதயம் உள்ளே தான் அமைந்திருக்கும் என்பது நாம் யாவரும் அறிந்த ஒன்று. உள்ளுக்குள் துடிக்கும் உங்கள் இதயத்தினை நீங்கள் தொட்டுப்பார்த்திருப் பீர்கள்: ஆனால் உங்கள் கண்களால் உங்கள் இதயம் துடிப்பதை நேரடியாக காணமுடியுமா? அல்லது துடிக்கும் உங்கள் இதயத்தை தொட்டுத் தான் பார்க்க முடியுமா? ஆம் ஒரு குழந்தைக்கு இது எல்லாம் சாத்தியம். எப்படி என்று சொல்லித்தான் புரிய வேண்டுமா என்ன.

இந்தியாவில் பிறந்துள்ள ஒரு குழந்தைக்கு இதயம் உடலுக்கு வெளியே அமைந்துள்ளது அனை வரையும் கடந்த காலங்களில் மட்டுமன்றி இன்றும் மருத்துவ அதிசயமாக நோக்கப்படுகிறது. உடலுக்கு வெளியில் துடிக்கும் அந்த பச்சிளம் குழந் தையில் இதயத்தினை பார்க்கும் ஒவ்வொருவரது இதயங் களும் கணத்துப்போகும் என்பதே உண்மை. மெடிகல் மிராகல் என்று ஆங்கிலத்தில் அழைப்பது இது போன்ற சில வழ்மைக்கு மாறான மருத்துவ அதிசயங்களைத்தான்.

# புரிந்து கொள்ளுங்கள்

பிறர் வாயிலிருந்து வரும் சொற்களைக் காதால் கேட்டால் மட்டும் போதாது. உள் பொருளையும் உணர்ச்சிகளையும் உற்று நோக்க வேண்டும். புத்திக் கூர்மையோடு புரிந்து கொள்ள வேண்டும். பல்வேறு காரணங்களுக்காக, உண்மையை மறைக்கும் போர்வையாக வெளிச் சொற்கள் இருக்கின்றன. இந்தச் சொற்களுக்கு அப்படியே பொருள் கொண்டால் வீண் கோபமும் வேண்டாத மன வருத்தமுமே மிஞ்சும். சொற்கள் என்னும் முகமூடி பல வகையில் உள்ளது.

வழக்கமாகக் கோபப்படாத ஒரு சாதாரண விசயத்திற்காக ஒருவர் திடீரெனக் கோபப்பட்டால் வேறு ஒரு கோபம் திசை திரும்பி யிருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும்.

எம்மிடம் சொல்லப்பட அவசியம் இல்லாத ஒரு விஷயத்தை ஒருவர் நம்மிடம் சற்று உரக்கப்பேசினால் அவர் அந்தத் தக வலை பக்கத்திலே உள்ள ஒருவரிடம் நேரிடையாய்ச் சொல்லாது எம் மூலம் சாடையாய்ச் சொல்கிறார் என்று பொருள்.

சிலர் தம் ஆற்றாமையைக் கொட்டித் தீர்ப்பதற்காக பொரிந்து தள்ளுவார்கள். அது எம்மைத் தாக்குவதாக நினைத்துப் பதில் சொல்லவோ அவருக்கு சமாதானமான ஒரு காரணத்தை சொல்லவோ அவசியம் இல்லை. பேசியவர் தனது சுமை இறங்கி யதும் சாதாரணமாகிவிடுவார்.



ஒரு சிலருக்கு எதையும், ஏன், பாராட்டையும் கூடக் கோபத்தின் வாயிலாகத்தான் வெளிப்படுத்தத் தெரியும். அவர்களின் கடுமைக்குப்பின் ஆழமான பாராட்டுதலும் அன்பும் ஒளிந்திருப் பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் ஒரு சில அனுபவங்களைப் பற்றிப் பேசிக்கொண் டிருக்கும் போது சிலர் குறுக்கிட்டு அதேபோன்ற தமது அனுபவத்தைச் சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். இதை அவருடைய அகங்கார மாகக் கருதாது தனக்கும் அதே மாதிரி அனுபவம் இருக்கிறது என்பதைத் தெரிவித்து எம் நட்பைப் பலப்படுத்த விரும்புகிறார் என்று கருத வேண்டும். ஆனால் இதற்குப் பொறுமை வேண்டும்.

சொற்களைக் கேளுங்கள்.

பொருள்களைப் புரிந்து கொள்ளுங்கள்.

எமக்கு அனைவரிடமும் மரியாதை கிடைக்கும்.

> ஒரு சிலருக்கு எதையும், ஏன், பாராட்டையும் கூடக் கோபத்தின் வாயிலாகத்தான் வெளிப்படுத்தத் தெரியும். அவர்களின் கடுமைக்குப்பின் ஆழமான பாராட்டுதலும் அன்பும் ஒளிந்திருப் பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.


அபான்ஸ்
விலைத்தள்ளுபடி
SALE
50% வரை விலைக்கழிவு

தொலைக்காட்சிகள், குளிரூட்டிகள், வளிச்சீராக்கிகள், சலவை இயந்திரங்கள், ஹோம் தியட்டர், மின்னியற்றி, டிவிடி ப்ளேயர்ஸ், மைக்ரோவேவ் அவன்கள், மற்றும் கணினி மேலும் பல



குளிரூட்டிகள் 20,000/- ரூபாவிலிருந்து
ஓடியோ சிஸ்டம் 4,500/- ரூபாவிலிருந்து
கணினிகள் 10,000/- ரூபாவிலிருந்து
தொலைக்காட்சிகள் 7,500/- ரூபாவிலிருந்து
டிவிடி ப்ளேயர்ஸ் 2,000/- ரூபாவிலிருந்து

2013 ஆகஸ்ட் 22, 23, 24, மற்றும் 25 ஆம் திகதிகளில்
காலை 8.30 மணியிலிருந்து இரவு 8.00 மணி வரை
இல. 121/1, பவர் ஹவுஸ் வீதி,
யாழ்ப்பாணம் (பேருந்து நிலையத்திற்கு எதிரில்)

அபான்ஸ் செகன்ட் காட்சியறைகள் மஹரகமை மற்றும் பிட்டகோட்டை
Abans
* நிபந்தனைகளுக்குட்பட்டது. * காசு மற்றும் கடனட்டை விற்பனைக்கு மாத்திரம்


# இளம் வயதினரின் வேலைப் பளுவால் பக்கவாதம் ஏற்பட வாய்ப்பு

எமது வாழ்க்கை முறையால் இளம் தலைமுறையினருக்கு அதிக அளவில் மூளையில் குருதிக் கசிவு ஏற்படுகிறது இந்தியாவில் ஆண்டுதோறும் லட்சத்தில் 100 - 150 பேருக்கு பக்கவாதம் ஏற்படுகிறதாம். அதில் 15 - 20 சதவீதம் வரை பாதிக்கப்படு பவர்கள் 30 வயதுக்கு கீழ் உள்ளவர்கள் மன அழுத்தம், வேலைப் பளு, போட்டி சூழல், ஒழுங்காக தூங்காமல் இருத்தல், சரியான நேரத்தில் சாப்பிடாமல் இருத்தல், உடற் பயிற்சி செய்யாமல் இருத்தல் உள்ளிட்டவற் றால் இளைஞர்களுக்கு உயர் குருதி அழுத்தம் மற்றும் நீரிழிவு ஏற்படு கிறது. குருதி அழுத்தம், நீரிழிவு ஆகிய நோய்களால் மூளை பக்க வாதம் ஏற்படுகிறது.

மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட உயர் ரத்த அழுத்தம் தான் முக்கிய காரணம்:

தங்களுக்கு உயர் இரத்த அழுத்தம் இருப்பதே பலருக்குத் தெரியாமல் உள்ளது. அவர்களுக்கு தங்கள் உடலுக்குள் எந்த நேரத்திலும் வெடிக் கும் நிலையில் ஒரு வெடிகுண்டு உள்ளது என்பது தெரிவதில்லை.

உயர் ரத்த அழுத் தம் என்பது சத்த மில்லாமல் எம்மை கொன்று விடுமாம். அதை தவிர்க்க உங்க ளால் முடிந்த வற்றை மட்டுமே கையாள வேண் டும்.



**Australian Government**

# வீசா இல்லாமல் படகு மூலம்
# அவுஸ்திரேலியாவுக்கு வரும்
# எவருமே அங்கு
# குடியமர முடியாது



2013 ஜூலை 19 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் புதிய சட்டத்திற்கு அமைய,

- வீசா இல்லாமல் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு வருகை தரும் சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் பப்புவா நியூகினிக்கு அனுப்பி வைக்கப்படுவர்.
- நீங்கள் அகதிகளாக அடையாளம் காணப்பட்டாலும், இப்போது பப்புவா நியூகினியிலேயே குடியமர்த்தப்படுவீர்கள். அகதிகள் அல்லாத குடியேற்றக்காரர்கள் தமது சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படுவார்கள்.
- இப்போதும் அதிகமான இலங்கையர்கள் மீண்டும் தாய்நாட்டிற்கு
- ஆட்கடத்தல்காரர்களின் பொய் வாக்குறுதிகளுக்கு ஏமாற வேண்டாம். நீங்கள் பணம் செலுத்துவது அவுஸ்திரேலியாவுக்கான பயணச் சீட்டுக்கு அல்ல.

**அவுஸ்திரேலியாவுக்கு**
**படகில் போக வேண்டாம்**

அவுஸ்திரேலிய அரசாங்கம் விடுக்கும் செய்தி. மேலதிக விபரங்களுக்கு **www.australia.gov.au/novisa**




# பேப்பர் தோல் மனிதன்



இந்த நபர் 1864 - 1904 காலப் பகுதியில் வாழ்ந்தவர். 14 வயது வரை சாதார ணமாக இருந்த இவரது உடலில் திடீர் மாற்றம் ஏற்பட்டது. தோல் பேப்பர் போன்று மெல்லிதாக மாறி உடல் பளிச் என மாறத்தொடங்கியது. பூதக் கண்ணாடி கொண்டு இவரது உடலின் மேற்பரப் பில் அவதானித்தால் உள்ளே உடலில் இடம் பெறும் அனைத்து மாற்றங்களையும் தெளிவாக அவதானிக்கலாமாம். அவருக்கு ஏற்பட்ட இந்த விசித்திர மாற்றத்திற்கு காரணம் ஒரு வகை தோல் நோய் எனப்படுகிறது. மேலும் இவரைப் போன்று பல விசித்திர மனிதர்கள் உலகில் வாழ்ந்துள் ளார்கள். புடாபெஸ்ட் எனும் நகரில் பிறந்த இவர் இந்நிலைமைக்கு பின்னர் பல்வேறு நாடுகளுக் கும் சென்று கேளிக்கை நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

